# கிராம நலம்

கதிர் - 13 நெல் 12

செப்டம்பர் - 1968

JL
Y31 ㎡ 211, N55
N68.13.12
158400


கிராமநலம்
செப்டம்பர்-1968
உள்ளாட்சித்துறையின் ஓராண்டுச்சாதனை



# கிராமநலம்

தமிழக அரசின் கிராம வளர்ச்சி, உள்ளாட்சித் துறை மாத இதழ்

கதிர் 13 செப்டம்பர் 1968 நெல் 1

471 23/11/68
GAZETTEER UNIT 105 - NOV 1968 G.U. MADRAS RECORD OFFICE BUILDINGS, MADRAS

## [illegible] காணிக்கை

''நிலையில் திரியாது அடங்கியான் தோற்றம்
மலையினும் மாணப் பெரிது"

என்னும் தமிழ் மறைக்குத் தனித்ததொரு இலக்கணமாய்த் திகழ்ந்து தான் பிறந்த ஊராரும், தண்டமிழ் நாட்டாரும், உலகாரும் போற்றும் உத்தமராய் விளங்கி, வையத்துள் வாழ் வாங்கு வாழ்ந்து. மற்றவர்க்கு வாழும் வழிகாட்டி நிற்கும்

தமிழ்த்தாயின் திருமகன்
தமிழகத்தின் தலைமகன்
பேரறிஞர் பெருந்தகை

அண்ணா அவர்களின் 60-வது பிறந்த நாள் இந்நாள்! இன்ப நாள்!

இன்று அவர் இங்கில்லை என்றாலும், இனி என்றும் நம்மோடு இருக்கத் தக்க வலிவும், பொலிவும் பெற்று வரவேண்டும் என்று வாயார, மனதார வாழ்த்துரைக்கும் கோடான கோடி நல்லிதயங்களோடு, உள்ளாட்சித் துறை ஊழியர்கள் ஊருக் குழைக்கும் சீரணித் தோழர்கள்—கதர் கிராமக் கைத்தொழில் ஆயத்தின் தொண்டர்கள்—நாங்களும் சேர்ந்து '' வாழ்க பேரறிஞர்—வாழ்க நம் முதல்வர்—வாழ்க பல்லாண்டு'' என வாழ்த்தி வணங்குவதில், பெருமையும், பூரிப்பும், பேரின்பமும் அடைகின்றோம்.

வெறும் வாழ்த்துக்கள் மட்டும் அவரை வசியப்படுத்தாது என்பதை நாமறிவோம்! இந்த நாடறியும்! ''அதிகாலை தொடங்கி இரவு மட்டும் நம் நலம் சேர்ப்பதல்லால், பொது வாழ்வுக்கு இதுவரையில் என்ன செய்தோம்"? நாடு வாழ—நந்தமிழ் வாழ—நானிலம் வாழ—உழைப்போர் உயர—உழவர் சிறக்க, நாம் ஆற்றிய தொண்டுகள் எவை? இந்தச் சிந்தனையோடு இரவும் பகலும் தன் வகையில் ஒன்றெனக் கருதி, காலமெல்லாம் பாடுபட்டு வரும் நாட்டின் காவலருக்கு—நாம் இந்த ஓராண்டுக் காலத்தில் ஆற்றிய பணியின் அளவையும்—இனி வரும் ஆண்டில் ஆற்ற இருக்கும் பணியின் நிலையையும் காணிக்கையாக்குவதே அவருக்குக் காட்டும் நன்றி! கடப்பாடு! வாழ்த்து—வணக்கம் எல்லாம்...."

—மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் திரு மா. முத்துசாமி அவர்கள்
(15—9—68-ல் ஆற்றிய வானொலி உரையிலிருந்து.)

---

**முதல் அட்டைப் படம்:** உள்ளாட்சித் துறையின் ஓராண்டுத் திட்ட விளக்கம். சிறப்புக் கட்டுரையை 6-ம் பக்கத்தில் காணலாம்.





JL
Y31m201,N55
N68-13-12
158400
47

[மாண்புமிகு தமிழக முதல்வரைப் பற்றியுப் அவருடைய அன்றாட அலுவல்கள், அவருடைட குடும்பத்தினர், அணுக்கத் தொண்டர்கள் பற்றியுப் படம் பிடித்துக் காட்டுகிறது இக்கட்டுரை. தமிழகத் தின் கிராமங்களிலே வாழும் இலட்சோப இலட்சக் கணக்கான கிராம மக்களும் தமிழக முதல்வரைட் பற்றி அறிந்துகொள்ள இக்கட்டுரை பயன்படுப் என நம்புகிறோம்.

இக்கட்டுரை 1—9—68-ல் அச்சுக்கு அனுப்பப் பட்டது. அதன்பிறகு ஏற்பட்ட எதிர்பாராத வ... லாற்றுப் புகழ்பெற்ற நிகழ்ச்சிகளை அனைவரும் அறிவர். மருத்துவ சிகிச்சைக்காக நமது முதல்வர் அமெரிக்கா சென்றபொழுது அவர்பால் உலக மக்கள் அனைவரும் காட்டிய அன்பும் பரிவும் உள்ளத்தை உருக்குவன.

முதல்வர் அவர்கள் தம்முடைய நுங்கம்பாக்கம் வீட்டில் 'தாயகத்தில்' வாழ்ந்த எளிய, ஆடம்பர மற்ற வாழ்க்கை முறையை, இக்கட்டுரை விளக்கு கிறது.

—ஆசிரியர்]



# தாயகத்திலே தமிழக முதல்வர்

திரு பி. ஆர். முத்து கிருஷ்ணன்

'அவரது பொறுமை, பாதிக்கப் பட்டோரிடம் அவர் காட்டும் பரிவு, இடைவிடாத கூச்சல்கள், அமளிதுமளிகளுக்கு ஈடு கொடுக்கும் மனத் திண்மை, தனி மனிதர்களின் ஆற்றல்களிலும் திறமையான சுயாட்சி முறையிலும் அவருக் கிருந்த அசையாத நம்பிக்கை—இவைதான் அமைச்சுப் பொறுப்பேற்ற ஆரம்ப நாட்களில் அவரைச் சிறந்த அரசியல் மேதை என்று இனங் காட்டின'

என்று வின்ஸ்டன் சர்ச்சில் பற்றி வைகண்ட் சைமன் கூறிய மதிப்பீடுதான், நம் முதல்வரை எண்ணும்போது, நினைவுக்கு வருகின்றது.

'10 டவுனிங்தெரு' என்று சொன்னதுமே அது பிரிட்டிஷ் முதல்வரின் இல்லம் என்று சொல்வது போலே, '9 அவினியூ சாலை' என்றதும், நம் முடைய முதல்வரின் வீடு அது என்று சொல்லு மளவுக்குஅது மக்கள் கருத்தில் பதிந்திருக்கிறது.

சென்னை நுங்கம்பாக்கம் பகுதியில் நடுத்தர, எளிய வகுப்பினர் வாழும் பகுதியில் அமைந்த சாலை, அவென்யூசாலை.

பெயருக்கு ஏற்ப, வரிசையாக மரங்கள் அணி செய்யும் அச்சாலையின் மத்தியில் அமைந்திருக் கும் எளிமையும், அழகும் நிறைந்த மனைதான் நம் முதல்வருடையது.

நம்முடைய தமிழக முதல்வர் திரு சி. என். அண்ணாதுரை அவர்களின் பெயரைச் சுருக்கிப் பாசத்தோடு அண்ணா என்றே அழைக்கிறார்கள்



1909-ம் ஆண்டு செப்டம்பர் மாதம் 15-ம் நாள் வரலாறு சமைத்த காஞ்சி மாநகரில் பிறந்த நம்முடைய முதல்வர் அண்ணா அவர்களுக்கு இந்த ஆண்டு 60 வயது தொடங்குகிறது.


நெய்யும் தொழில் செய்யும் எளியக் குடும் பத்தில் பிறந்த அவர், வாழ்வில் நெளிவுசுளிவு களை நிரல்பட அறிந்தவர்.

## புது மரபு கண்டவர்

சீர்திருத்த இயக்கத்தின் பேச்சாளராய் வேர் விட்டு, இலக்கியப் பேரொளியாய் முகிழ்த்து, அரும்பி, சமுதாயச் சிற்பியாய் மலர்ந்து, மணம் பரப்பி, அரசியல் வாதியாய்க் கனிந்திருக்கும் அண்ணா அவர்கள், தமிழகத்து முதல்வராய்ப் பொறுப்பேற்ற அன்று 1967-ம் ஆண்டு மார்ச் 6-ம் நாள் மாலை சென்னை செயிண்ட் ஜார்ஜ் கோட்டைத் திடலில் நடைபெற்ற கூட்டத்தில் அரசு ஊழியர்களை 'நண்பர்களே' என்று விளித்து ஒரு புதிய மரபையே தோற்றுவித்தார்.

"அவர் எழுத்தாளர்—பேச்சாளர்—வசனம் வல்லார் —உரையாடல் நிபுணர்—இசைஞானி, ஒரு கல்வி முறையையே வகுத்து அளித்தவா, கல்லூரி நிறுவி யவர்; பெரிய அரசியல் கட்சி ஒன்றைக் கருவாக்கி உருவாக்கி வளர்த்த பெருமை அவருடையது"

என்று அமெரிக்க உரிமைக்கு வித்திட்ட தாமஸ் ஜெபர்சன் பற்றி, வரலாற்றாசிரியர்கள் சொல் வது போலவே, நமது முதல்வரைப் பற்றியும் சொல்லலாம்.



முதல்வரின் துணைவியார்—உறவினர் நெருடன

எழுதினாலும் பேசினாலும் அவர் சொல்லில் உயிர் இருக்கும். சில நேரங்களில் அவை கொஞ்சும்-தவழும். சில நேரங்களில் குதித்துத் தாவும். சில நேரங்களில் கேட்போரைக் கிளு கிளுப்பூட்டி நெஞ்சை நெகிழ்விக்கும். சில நேரங்களில் இறக்கை முளைத்துப் பறக்கும்; இன்னஞ் சில நேரம் ஈட்டியாய் மாறி எதிரியைத் துளைக்கும். உயிர்த்துடிப்புடன் நர்த்தனமிடும் அந்தச் சொல்லின் சிறப்புதான், அவர் வாழ்வின் வெற்றி ரகசியம்.

அவர் இந்த அரசுக்கு மட்டும் முதல்வர் அல்லர்; அனைத்துக்கும் முதல்வர். வள்ளுவர் சொன்னது போல "அவர் தோன்றும் துறை யெல்லாம் புகழோடு தோன்றுகிறார்."

சிரித்த முகம் அவருக்கு! சிந்தனைத் தேக்கிய நெற்றி, ஊடுருவிப் பாயும் அகன்ற விழிகள், மிகப் பொறுமையான போக்கு, இனியவே பேசும் பண்பு—இவைதான் நம்முடைய முதல்வர் அண்ணா அவர்கள்!

ஆமாம். காட்சிக்கு எளியவர், பழக்க வழக்கங்களில் படாடோபம் இல்லாதவர், அரசுக்குச் சொந்தமான வளமனை வேண்டாமென்று அவர் தம் சொந்த வீட்டிலேயே இருந்து வருகிறார்.

✦ ✦

வடக்குப் பார்த்த அந்த வீட்டின் பெயர் 'தாயகம்'. அவருக்குத் தமிழ்மண்ணின் மீதுள்ள அன்பின் வெளிப்பாடு அது. நெஞ்சையள்ளும் வண்ணம் பூசிய சுவரில் இருபுறமும் பெரிய இருப்புக் கதவுகள். இடையே ஒற்றைச் சிறுகதவு.

கார்களும் மனிதர்களுமாய் முதல்வரைக் காணவந்த கூட்டம் அங்கே நெரிகிறது. அவரவருக்கு ஒரு குறை—ஒரு தேவை—ஒரு கடமை:

காட்சிக்கு எளியவர்

இவ்வளவு இருந்தும் அங்கே நிலவும் அமைதி, உள்ளே முதல்வர் இருக்கிறார் என்பதன் முன்னறிவிப்பு! உள்ளே முன்றிலில் மா, வேம்பு மரங்கள் தண்ணிழல் தருகின்றன! அரைவட்ட வடிவில் அமைந்து, கண்ணுக்கு விருந்தளிக்கும் பூச் செடிகள் தொட்டிகளில் வைக்கப்பட்டிருக்கின்றன!


முன்னேறி உள்ளே சென்றால், இடப்புறத்தில் பாதுகாப்பு அலுவலர்கள் இருப்பறை. அருகில் ஓர் அறிவிப்பு:

"அலுவலக அதிகாரிகளுடன கலந்துரையாடல் நாளாக புதன்கிழமை குறிக்கப்பட்டிருப்பதால், அன்று, மற்றவர்கள் கண்டு கருத்தறிவிக்க வரவேண்டுவதில்லை என தெரிவிக்கப் படுகிறது"

உள்ளே நுழைந்ததும் ஒரு வரவேற்பறை. நீலச் சுவரே பின்னணியாய் அமைய, இடையிடையே வெளிர் மஞ்சள் திரைச் சீலைகள் அழகு செய்கின்றன! கலைநயம் பொதித்த



[42-ம் பக்கம் பார்க்கவும்]



திரு. அய்யம்பெருமாள்

இரண்டாவது

பரிசு பெற்ற

ஊர்ப்பணியாளர்

## ஊரை உயர்த்தும் திருப்பணி—

தருமபுரி மாவட்டத்தைச் சேர்ந்த முதல் நிலை கிராம நல ஊழியர் திரு அய்யம் பெருமாள் 1965-66 ஆண்டில் கிருஷ்ணகிரி வட்டாரத்தில் கிருஷ்ணகிரி தொகுதியில் சிறப்பான பணி புரிந்ததற்காக, மாநிலத்தில் இரண்டாவதாக சிறப்புப் பணியாற்றிய ஊர்ப் பணியாளராக (கிராம சேவக்) தேர்ந்தெடுககப்பட்டுள்ளார்.

திரு அய்யம்பெருமாள் 1953-ம் ஆண்டு மதுரை மாவட்டம் காந்தி கிராமத்தில் உள்ள கிராமியப் பயிற்சிப் பள்ளியில் கிராமநல ஊழியராக பயிற்சியில் சேர்ந்து 6 மாத கால பயிற்சி பெற்று மதுரை மாவட்டத்தில் ஆத்தூர் வட்டாரத்தில் கிராம நல ஊழியராக பணியில் சேர்ந்தார். பின்னர் மாறுதலில் முன்னாள் சேலம் மாவட்டத்திற்கு வந்து தற்போதுள்ள பிரிக்கப்பட்ட தருமபுரி மாவட்டத்தில் பணி புரிந்து வருகிறார்.

1965-66 ஆண்டில் கிருஷ்ணகிரி வட்டாரத்தில் கிருஷ்ணகிரி தொகுதியில் இவர் ஆற்றிய சிறப்புப் பணிகள் பாராட்டுதலுக்குரியன.

விவசாயிகளின் தேவைக்கேற்ப, பொறுக்கு விதை நெல் 555 கிலோவும், எண்ணெய் வித்துக்கள் 104 கிலோவும் இந்த ஆண்டில் இவரால் விவசாயிகளுக்கு விநியோகம் செய்யப்பட்டது. திருந்திய முறைச் சாகுபடி விளக்கங்களுக்காக நெல் 120 வயல்களிலும், மற்ற தானியங்கள் 500 வயல்களிலும் செயல் விளக்கம் செய்து நிரூபித்திருக்கிறார்.

### மக்களுடன் நெருங்கிய தொடர்பு

இவருடைய பிரிவில் இவரது முயற்சியால் 67 மருந்து தெளிக்கும் கருவிகளும், 171 கலப்பைகளும், மற்றும் மண் வாரி பறம்பு பலகை போன்ற 101 கருவிகளும் விநியோகித்துள்ளார். இவர் பிரிவில் 467 ஏக்கர் பரப்பில் பசுந்தாள் உரச் செடிகளை உற்பத்தி செய்ய ஏற்பாடு செய்து, அப்பகுதிக்குத் தேவையான பசுந்தாள் உரத்திற்காக வசதி செய்துள்ளார்.

இவர் விவசாயிகளிடையேயும் மற்ற பொது மக்களிடையேயும் நெருங்கிய தொடர்பு கொண்டு, விவசாய முன்னேற்றத்துக்கும் மற்றும் பொது நல காரியங்களுக்கும் மிக்க பாடுபட்டு இம் மாநிலத்திலேயே 1965–66-ம் ஆண்டின் இரண்டாவது சிறந்த ஊர்ப்பணியாளராகத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார்.

# உள்ளாட்சித் துறையின் ஓராண்டுச் சாதனை

மாண்புமிகு முதலமைச்சர் திரு. சி. என். அண்ணாதுரை அவர்களின் 59-வது பிறந்த நாளில் (15—9—1967) உள்ளாட்சித் துறை அளிக்கும் காணிக்கையாக, மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் திரு மா. முத்துசாமி அவர்கள் ஓராண்டுத் திட்டம் ஒன்றினை வெளியிட்டார்.

தமிழக ஊராட்சி மன்றங்கள் தொன்று தொட்டே கிராம முன்னேற்றத்தில் பெரும் பங்கு கொண்டு பெருமிதம் கொள்ளத்தக்க வகையில் பணியாற்றி வந்துள்ளன. மேலும் பொலிவூட்டும் வகையில், மாண்புமிகு முதலமைச்சரின் 59-வது பிறந்தநாளன்று (15—9—67) ஊராட்சி மன்றங்களும் ஊராட்சி ஒன்றியங்களும் கிராமங்களுக்கு பெரும் பயன்தரத்தக்க வகையில் கீழ்க்காணும் திட்டங்களை மேற்கொண்டு செயல் படுத்தப்படுவதென முடிவு செய்யப்பட்டது. இதன் மூலம் கிராம நலம் பெருகவும் தமிழகத்தின் முன்னேற்றம் கூடவும் வழி ஏற்படும் என்ற நம்பிக்கையின் அடிப்படையில் இந்நிறுவனங்கள் செயலில் இறங்கின. சென்ற ஆண்டு மாண்புமிகு முதலமைச்சரின் 59-வது பிறந்த நாளன்று மேற்கொள்ளப்பட்ட இத் திட்டங்கள், இவ்வாண்டு முதல்மைச்சரின் 60-வது பிறந்த நாளன்று முடிக்கப்பட்டு, ஓராண்டுச் சாதனையாக (One year plan) செயற்படுத்தப் பட்டன.

ஓராண்டுச் சாதனையாக மேற்கொள்ளப்பட்ட திட்டங்கள்:

(1) 1,059 சமுதாய நலப் பாசனக் கிணறுகளைத் தோண்டி விசைப் பொறிகள் அமைத்து விவசாயிகட்கு உதவுதல்.

(2) 559 டிராக்டர்கள், 1,059 டில்லர்கள், 2,059 ஸ்ப்ரேயர்கள் வாங்கி, குறைந்த கட்டணத்தில் விவசாயிகட்குப் பயன் படுமாறு செய்தல்.

(3) ஊராட்சி ஒன்றியப் பள்ளிகளில், மதிய உணவுக்கு உதவியாக இருக்கும் வகையில் 5,059 காய்கறித் தோட்டங்களை அமைத்தல்.

(4) ஆரணிக்கருகில் உள்ள பூசிமலைக் குப்பத்தில் அரசினருக்குச் சொந்தமாக உள்ள 320 ஏக்கர் தரிசு நிலத்தில் விவசாயப் பண்ணை அமைக்க வகைசெய்தல்.

(5) இவை தவிர, பேரூராட்சி மன்றங்களிலும் ஊராட்சி ஒன்றியங்களிலும் தேவையான இடங்களில் பலநோக்கு மண்டபங்கள் அமைத்து, ஏழை எளியவர்கள் அவற்றைத் திருமண மண்டபங்களாகவும், பல் சுவை நிகழ்ச்சிகள் நிகழ்விடங்களாகவும் பயன்படுத்திக்கொள்ள அனுமதித்தல்.

இத்திட்டத்தை ஓராண்டுக் காலத்திற்குள் ஊராட்சி மன்றங்கள், ஊராட்சி ஒன்றியங்கள் செய்து முடிக்கும் வகையில் செயற் குறிப்புகளும், செயல் திட்டங்களும் தீட்டப்பட்டன. மாண்புமிகு முதலமைச்சரின் 60-வது பிறந்தநாளன்று உள்ளாட்சித் துறை காணிக்கையாக நிறைவேற்றி அளிக்கும் இந்த ஓராண்டுத் திட்டம் வெற்றியுடன் செய்து முடிக்கப்பட்டது.

அவ்வாண்டில் நடைபெற்ற உள்ளாட்சித்துறை சம்பந்தமான கூட்டங்கள் அத்தனையிலும் இந்த ஓராண்டுத் திட்டத்தின் வேலைவிவரங்களை செயல்படுத்துவது பற்றி தம்முடைய ஆக்கபூர்வமான யோசனைகளை மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் திரு. மா. முத்துசாமி வலியுறுத்திக் கூறிவந்துள்ளார். "இத்திட்டத்தை முழுவெற்றியடையச்செய்ய அனைவரும் முழுமூச்சுடன் பாடுபடவேண்டுமென்றும், அதன்மூலம் கிராமமக்களுக்கு பயனுள்ள சேவையை நாம் செய்தவர்களாவோம்"என்று மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் வேண்டுகோள் விடுத்தார்.

### ஒற்றுமை உணர்வுடன் பணியாற்றி'

உள்ளாட்சித் துறையினர் அனைவரும் மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சரின் வேண்டுகோளை சிர மேற்கொண்டு, அனைவரும் ஒரு குடும்ப பாசத்துடன் தாங்கள் எல்லாம் ஒரு குடும்பத்தைச் சேர்ந்தவர்கள் என்ற ஒற்றுமை உணர்வுடன் பாடுபட்டு, ஓராண்டுத் திட்டத்தின் இலக்குகளை அடைவதில் ஒன்றுபட்டு உழைத்து வெற்றிதேடித்தந்துள்ளனர். அதிகாரிகள், பொதுமக்கள் அனைவரின் ஆர்வம் நிறைந்த ஒத்துழைப்புடன் குறிப்பிட்ட காலவரையறைக்குள் ஐந்து அம்சத் திட்டம் வெற்றியுடன் செயல்படுத்தப்பட்டுள்ளது. இந்தத் திட்டம் கிராம வளர்ச்சிக்கு புதியதோர் ஊக்கத்தையும் எழுச்சியையும் அளிப்பதற்காகவே உருவாக்கப்பட்டது.

சமுதாய நலக் கிணறுகள் அமைத்தல்—டிராக்டர்கள் வாங்கி உழவர்கட்கு வாடகைக்கு வழங்குதல்—மருந்து தெளிப்பான்கள் வாங்கி வழங்குதல்—மதிய உணவுக்கு ஊக்கம் அளிக்கும் பள்ளித் தோட்டங்கள் அமைத்தல்—டில்லர்கள் வாங்கிப் பயன்படுத்தல்—மண மண்டபங்கள் அமைத்தல் ஆகியவை ஓராண்டுத் திட்டத்தில் முக்கிய இடம் பெற்றன! இதனை இந்நாட்டு விவசாயப் பெருங்குடி மக்கள் விரும்பிவரவேற்றுப் பாராட்டினர்.

[18-ம் பக்கம் பார்க்க]

# வெளிநாடுகளில் கண்ட உள்ளாட்சி வளர்ச்சிப் பணிகள்

மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர்
திரு மா. முத்துசாமி

"பகுத்துண்டு பல்லுயிர்
ஓம்புதல் நூலோர்
தொகுத்தவற்றுள் எல்
லாந் தலை"


என்ற வள்ளுவர் வாய் மொழியைச் செயலாக்கும் நோக்கோடு, காஞ்சி தந்த கருவூலம்-கன்னித் தமிழ்க் காவலர்—பேரறிஞர் பெருந்தகை அண்ணா அவர்கள் தலைமைப் பொறுப்பு ஏற்றுள்ள தமிழகத்தின் தலை நகராம் சென்னை மாநகராட்சியின் தூதுக் குழுவிற்குத் தலைமையேற்று, ரோம், பாரிஸ், லண்டன், ஆம்ஸர்டாம், ஜெர்மானிய ஜனநாயகக்குடியரசு, சோவியத் ஒன்றியம் ஆகிய இடங்களுக்குச் சென்று, பலவற்றைக் கண்டு, கருத்துவளம் பெற்றுத் தாயகம் திரும்பியதில், எல்லையற்ற மகிழ்ச்சியும் பூரிப்பு ஏற்படுகின்றது."

'தேமதுரத் தமிழோசை உலக மெலாம் பரவும் வகை செய்தல் வேண்டும்' என்ற முழக்கத்தை எழுப்பிய கவிஞர் பெருமகனின் கனவு, நனவாகும் வண்ணம், அண்மைக் காலத்தில், காரியங்கள் நடைபெற்று வருகின்றன."

"சென்ற சில திங்களுக்கு முன், பேரறிஞர் அண்ணா அவர்களின் செந்தமிழ்ச் சுவையை 'யேல்" பல்கலைக் கழகமும், அமெரிக்க நாட்டின் மற்றபல பகுதிகளும், பருகியதை நாம் அறிவோம். மாண்புமிக்க உணவுத்துறை அமைச்சர் மதியழகன் அவர்கள், ரோம் நகரிலும், மாண்புமிக்க செய்தித்துறை அமைச்சர் சகோதரி சத்தியவாணிமுத்து அவர்கள், 'மொரிஷியஸ்' தீவிலும் தமிழ் முழக்கமிட்டுத் திரும்பிய காட்சியினைக் கண்டு, தமிழகமே களிபேருவகை, கொண்டது. அத்தகையோர் வழிநின்று, நானும், நம் மாநகராட்சிக் குழுவினரும் தமிழின் சிறப்பை —தமிழறிஞர் தம் சிறப்பை தரணிக்கு எடுத்துக் காட்டும் வாய்ப்பினைப் பெற்றோம்.

### தரணி போற்றும் தமிழகம்

செல்லுமிடங்களில் இப் பணியினைச் சிறப்புறச் செய்ய வேண்டும் என்ற விருப்புடன் தமிழகத்தின் பெரு மக்கள் பல்லோர் எங்களை வாழ்த்தி வழியனுப்பினர்.




வான்புகழ்க் கொண்ட வள்ளுவரையும், வையகத்து மக்கள் வாழும் நெறிமுறைகளை








படம் 1 : ரோம், பாரிஸ், லண்டன், ஆம்ஸ்டர்டாம், ஜெர்மானிய ஜனநாயகக் குடியரசு. சோவியத் ஒன்றியம் ஆகிய இடங்களுக்கு, மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் திரு மா. முத்துசாமி தலைமையில் புறப்பட்ட சென்னை மாநகராட்சித் தூதுக் குழுவினருடன், பம்பாயில் ஏர்-இந்தியா விமான அதிகாரிகள்.



படம் 2 : சென்னை மாநகராட்சி தூதுக் குழுவினருக்கு இங்கிலாந்திலுள்ள இந்திய தூதுவரகத்தில் அளிக்கப்பட்ட வரவேற்பு.

படம் 3 : சென்னை மாநகராட்சி தூதுக் குழுவினர் பங்கேற்ற லண்டன் நிகழ்ச்சிகளை ஒலிபரப்பிய பி. பி. சி. வானொலி நிலைய தமிழோசை தயாரிப்புக் குழுவினர்.





சென்ற நாடுகளிலுள்ள மாநக ரங்களின் தலைவர்கள், நகரக் குழுவினர் பலரை, நமது மாநகராட்சிக் குழுவினர் சந்தித்தனர். அவர்கள் நகரத்தின் முன்னேற்றத்தை மனத்தில் கொண்டு பல புதிய திட்டங்களைத் தீட்டி செயலாக்குவதைக் கேட்டறிந்தனர். தமிழகத்தின் சிறந்த கைவண்ணப் பொருள்களை அவர்களுக்குப் பரிசாக மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் அளித்தார்.



வகுத்துத் தந்த தொல்காப்பியத்தையும், உலகமே வியந்து பாராட்டிய உலகத்தமிழ் மாநாட்டின் அழியாச்சின்னமாக விளங்கிய மலரையும், இயல் இசை நாடகம் ஆகிய முத்தமிழின் மூலம் மூவேந்தர் ஆண்டிருந்த



தமிழகத்தின் சிறப்பை தரணிக்குக் காட்டிய இளங்கோவடிகளின் சிலப்பதிகாரத்தை, எல்லோரும் அறியும் வண்ணம், எளிய இனிய தமிழில், கலைஞர் அவர்கள் எழுதித் தந்த சிலம்பையும், தமிழ்நாட்டின் கைவண்ணப் பொருள்களையும் எங்களோடு எடுத்துச் சென்றோம். சென்ற நாடுகள் அனைத்திலும், எங்களுக்குச் சிறப்பான வரவேற்பு கிடைத்தது.

ரோம், லண்டன், ஹாலே, வால்கா கிரேடு ஆகிய நகரங்களில், உலகத் தமிழ் மாநாட்டுத் திரைப் படத்தைக் காட்டிய போது, அவர்கள் காட்டிய உற்சாகமும் வரவேற்பும் ஆரவாரமும் மகிழ்ச்சியும் எங்களைத் திணற வைத்தன,

தமிழ் கூறும் நல்லுலகின் பண்டைச் சிறப்பினையும், அதனைக் கட்டிக்காக்க இன்றைய தமிழகம் மேற்கொண்டுள்ள முயற்சிகளையும், உலகம் அறிந்து போற்றுகிறது என்ற பெருமித உணர்வோடு, நாங்கள் நிமிர்ந்து நின்றோம்.

தமிழிலக்கியப் பெட்டகங்களை, ஆங்காங்குள்ள பெரியோர்கள் சிலருக்கு வழங்கியபோது "தமிழுக்குத் தொண்டு செய்கிறோம்" என்ற தனியாத மகிழ்வு எங்களுக்கும், வாங்கிய பொழுது, "தமிழின் சிறப்பு எவ்வளவு உயர்ந்தது" என்ற எண்ணம், அவர்களுக்கும், ஏற்பட்டது.

குறிப்பாக எல்லா நாடுகளிலும் தமிழ் மொழியின் சிறப்பினையும், தமிழ்நாட்டின் சிறப்பினையும், தமிழகத்துத் தலைமகன் பேரறிஞர் அண்ணாவின் பெருமையினையும், கற்றோர் பலரும் தெளிவுறத் தெரிந்துள்ள பான்மையினைக் கண்டோம்.

லண்டன் மாநகரத்துத் தமிழ்ச் சங்கத்தின் வரவேற்பு, எங்கள் வாழ்நாளில் மறக்க முடியாத ஒன்றாகும்.


'தமிழகம், இலங்கை, மலேசியா, மொரிஷியஸ் மற்றும் பல பகுதிகளிலிருந்து அங்கு வந்து வாழ்கின்ற தமிழினத்தைச் சார்ந்தோரும், தமிழறிந்த சான்றோரும் ஒன்றுகூடி, பல்லாண்டு காலமாக இச்சங்கத்தைப் பெருமையுற நடத்தி வருகின்றனர். தமிழறிந்த ஆங்கிலப் பெரு மக்கள் சிலரும், இச் சங்கத்தில் அங்கம் வகிப்பது, குறிப்பிடத் தக்கது.


செட்டி நாட்டைச் சார்ந்த திரு மெய்யப்பன் அவர்கள் தலைவராகவும், திரு ராஜ்ரோஸ் அவர்கள் செயலாளராகவும் இருந்து இதனைக் கட்டிக் காத்து வருகின்றனர். இச்சங்கம் வளர, தமிழகத்துப் பெருமக்கள், ஒல்லும் வகையில் எல்லாம், உதவக் கடமைப்பட்டவர்கள் என்பதை, எடுத்துரைப்பது எனது கடமையாகும்.

அரியதோர் வாய்ப்பு

மாநகரங்களின் தலைவர்கள், நகரக் குழுவினர் பலரைக் காணவும் நகராட்சி நிர்வாக முறைகளை அறியவும் வாய்ப்பு கிடைத்தது. நகரத்தின் முன்னேற்றத்தை மனத்தில் கொண்டு, பல புதிய திட்டங்களைத் தீட்டி அவற்றைச் செயலாக்குவதில் முனைந்துள்ள காட்சியினைக் கண்டோம். குறிப்பாக, ஜெர்மன் ஜனநாயகக் குடியரசு நகரங்களான 'ஹாலே' 'பெர்லின்' ஆகிய நகரங்களின் வளர்ச்சியும், சோவியத் ஒன்றியத்தின் தலைநகரான மாஸ்கோவின் முன்னேற்றமும், 'வால்காகிரேட்' நகர அமைப்பும், எங்கள் கண்ணையும் கருத்தையும் கவர்ந்தன.

உலகப் பெரும் போரின் விளைவாக, பெரும் பாலும் நிர்மூலமாக்கப்பட்ட இந்த நகரங்கள், இன்றைக்கு எழிலோடு காட்சி அளிக்கின்றன.





நகரத்தின் தேவைகள் அனைத்தையும், நகர மன்றங்களே ஏற்று, அவற்றைத் தீர்த்து வைப்பதில் மகத்தான வெற்றி கண்டுள்ளன. 65 லட்சம் மக்கள் வாழும் மாஸ்கோ நகரின் குடியிருப்புப் பிரச்னையைத் திறமையாகச் சமாளித்துள்ளனர்.

வீட்டு வசதி—வியத்தகு சாதனை

ஆண்டு ஒன்றுக்கு, சுமார் ஐந்து லட்சம் மக்களுக்குப் புதிய வீடுகள் மாஸ்கோ நகரில் அமைக்கப்படுவதாக, அந்நகரத் தலைவர் அவர்கள் விளக்கினார்கள்.

மாஸ்கோ, வால்காகிரேட், பெர்லின், ஹாலே போன்ற நகரங்களில், அவர்கள் வீடுகளை அமைக்கும் முறையே விந்தையாக உள்ளது. உறுதியான வீடுகளை, குறைந்த செலவில்; குறுகிய காலத்தில் கட்டி முடிக்கின்றனர். பல மாடிக் கட்டிடங்களுக்குத் தேவைப்படும் சுவர் உள்ளிட்ட பகுதிகள் அனைத்தையும் தொழிற்சாலைகளில் உருவாக்கி, அவற்றைக் கொண்டு கட்டிடங்களை உருவாக்குகிறார்கள். இத்தகைய (Pre-fabricated Units) ஒவ்வொரு நகரிலும் அமைக்கப்பட்டு, இப்பகுதிகள் உருவாக்கப்படுவதைக் கண்டோம். வளர்ந்து வரும் சென்னை, கோவை, மதுரை போன்ற நகரங்களில், இம்முறை பின்பற்றப்படுமானால், அது பெரும் பயனை விளைவிக்கும் என்பதில், ஐயமில்லை. தமிழக அரசின் துணையோடு இம் முயற்சியில் ஈடுபட, நகர் மன்றங்கள் முன் வரும் என்று நம்புகிறேன்.

கிழக்கு பெர்லின் நகரத்தின் ஊடே நெளிந்து வளைந்து செல்லுகின்றபல நீரோடைகளை ஒன்றாக இணைத்து, ஏறத்தாழ முப்பது கல்தொலைவிற்கு, விசைப்படகுகள்செல்லும் வாய்ப்பை ஏற்படுத்தியுள்ளனர். பெர்லின் நகரத் தலைவரோடு, ஞாயிற்றுக்கிழமை மாலை வேளையில், நாங்கள் உல்லாசப் படகுப் பயணத்தை மேற்கொண்டோம். மூன்று மணி நேரம் எங்கள் பயணம் நீடித்தது. கால்வாயின் இருபுறங்களிலும் அமைந்துள்ள பசுமையான சோலைகளிடையே அமைக்கப்பட்டுள்ள ஓய்வுக் கூடங்களில் தங்கி, பெர்லின் நகர மக்கள் அனைவருமே மகிழ்வோடு படகுப் பயணம் மேற்கொண்டு, பொழுதுபோக்குவது மட்டற்ற மகிழ்ச்சியைக் கொடுத்தது.

அப்பொழுது, சிங்காரச் சென்னையில் ஓடும் கூவம் ஆற்றிலும் ஒரு நாள் படகில் செல்வோம் என்ற உணர்வு, உள்ளத்தில், எழுந்தது. "அந்நாள் விரைவில் வருமென", எனது அருகிலிருந்த நண்பர் முனுசாமி அவர்கள் உறுதியோடு தெரிவித்தார். 'முயற்சி திருவினையாக்கும்' என்று முழுமையாக நம்புகிறேன்.

நகரின் கல்விக் கூடங்கள், சுகாதார நிலையங்கள், போக்குவரத்து, சாலை அமைப்பு, நீர் வழங்கும் திட்டம், நீச்சல் குளங்கள், மனமகிழ் மன்றங்கள், விளையாட்டு மைதானங்கள், விளக்கு வசதிகள் முதலிய அனைத்துமே, சீரிய முறையில் அமைக்கப்பட்டுள்ள சிறப்பினைக் கண்டோம்.


மாஸ்கோ, வால்கா நகரங்கள் தூய்மையாகவும், அழகாகவும் அமைக்கப்பட்டுள்ளன. விடிவதற்குள், வீதிகள் அனைத்தும் கழுவப்பட்டு தூய்மைப்படுத்தப்படுகின்றன.

இவ்வளவு விரைவான முன்னேற்றங்களுக்குக் காரணம் என்ன! அந்நாட்டின் தொழில் முன்னேற்றமும் மக்களின் கட்டுப்பாடான உழைப்பும், அவர்கள் வகுத்துக்கொண்டுள்ள விதிமுறைகளும் அடிப்படைக் காரணங்களாகும்.

நகரத்தின் வருவாயும் அதிகம்; நகர் மன்றங்களின் அதிகாரங்களும் அதிகம். இந்த இரண்டும், நகரத்தின் வளர்ச்சிக்குப் பெரும் துணையாக விளங்குகின்றன. நமக்குள்ள நிதி

[45-ம் பக்கம் பார்க்கவும்].

'ஹாலே' நகரத்தின் எழில் தோற்றம்







# சம்பாவில் இருபோக சாகுபடித் திட்டம் 1968–69.

## தஞ்சாவூர்.

### இரண்டாம் பயிருக்கேற்ற நெல் ரக சிபாரிசுகளுடன்கூடிய சாகுபடித் திட்டம்

| வரிசை எண். | ஆடுதுறை 27-ஐ இந்த தேதியில் விதைத்தால் ? | நடவு செய்யும் காலம். | அறுவடைக் காலம். | அடுத்த இரண்டாம் பயிரைச் சாகுபடி செய்யும் முறை. இரண்டாம் பயிர் ரகம். | பயிரின் வயது. | விதைக்கும் காலம். | நடவு செய்யும் காலம். | அறுவடைக் காலம். |
|---|---|---|---|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) | (6) | (7) | (8) | (9) |
| 1 | ஆனி 24 முதல் 30 வரை (ஜூலை 7 முதல் 13 வரை) | ஆடி 18 முதல் 24 வரை (ஆகஸ்டு 2 முதல் 8 வரை) | ஐப்பசி 7 முதல் 13 வரை (அக்டோபர் 22 முதல் 28 வரை) | கோ. 25 | 165 நாட்கள் | ஆவணி 17 முதல் 23 வரை (செப்டம்பர் 1 முதல் 7 வரை) | ஐப்பசி 8 முதல் 21 வரை (அக்டோபர் 23 முதல் நவம்பர் 5 வரை) | மாசி 1 முதல 7 வரை (பிப்ரவரி 15 முதல் 21 வரை) |
| 2 | ஆனி 31 முதல் ஆடி 5 வரை (ஜூலை 14 முதல் 20 வரை) | ஆடி 25 முதல் 31 வரை (ஆகஸ்டு 9 முதல் 15 வரை) | ஐப்பசி 14 முதல் 21 வரை (அக்டோபர் 29 முதல் நவம்பர் 5 வரை) | ஏ.டி.டி. 8<br>ஏ.எஸ்.டி. 11 | 150 நாட்கள்<br>.. | புரட்டாசி 9 முதல் 15 வரை (செப்டம்பர் 24 முதல் 30 வரை) | ஐப்பசி 22 முதல் 28 வரை (நவம்பர் 6 முதல் 12 வரை) | மாசி 8 முதல் 15 வரை (பிப்ரவரி 22 முதல் 28 வரை) |
| 3 | ஆடி 6 முதல் 9 வரை (ஜூலை 21 முதல் 24 வரை) | ஆவணி 1 முதல் 7 வரை (ஆகஸ்டு 16 முதல் 22 வரை) | ஐப்பசி 22 முதல் 28 வரை (நவம்பர் 6 முதல் 12 வரை) | ஏ.எஸ்.டி. 5 | 140 நாட்கள் | புரட்டாசி 21 முதல் 24 வரை (அக்டோபர் 6 முதல் 9 வரை) | ஐப்பசி 23 முதல் 26 வரை (நவம்பர் 7 முதல் 10 வரை) | மாசி 15 முதல் 17 வரை (பிப்ரவரி 26 முதல் 28 வரை) |
| 4 | ஆடி 9 முதல் 13 வரை (ஜூலை 24 முதல் 28 வரை) | ஆவணி 7 முதல் 13 வரை (ஆகஸ்டு 22 முதல் 28 வரை) | ஐப்பசி 25 முதல் கார்த்திகை 1 வரை (நவம்பர் 9 முதல் 15 வரை) | கோ. 32 | 135 நாட்கள் | புரட்டாசி 24 முதல் 30 வரை (அக்டோபர் 9 முதல் 15 வரை) | ஐப்பசி 26 முதல் கார்த்திகை 2 வரை (நவம்பர் 10 முதல் 16 வரை) | மாசி 9 முதல் 12 வரை (பிப்ரவரி 21 முதல் 24 வரை) |
| 5 | ஆடி 17 முதல் 23 வரை (ஆகஸ்டு 1 முதல் 7 வரை) | ஆவணி 10 முதல் 15 வரை (ஆகஸ்டு 25 முதல் 30 வரை) | கார்த்திகை 1 முதல் 6 வரை (நவம்பர் 15 முதல் 20 வரை) | கோ. 29 | 110 நாட்கள் | ஐப்பசி 17 முதல் கார்த்திகை 1 வரை (நவம்பர் 1 முதல் 15 வரை) | கார்த்திகை 11 முதல் 21 வரை (நவம்பர் 25 முதல் டிசம்பர் 5 வரை) | மாசி 8 முதல் 16 வரை (பிப்ரவரி 20 முதல் 28 வரை) |

*FOR ECONOMY*
*EFFICIENCY AND DURABILITY USE*

## WAVIN HARD P.V.C. PIPES

*FOR CONVEYING POTABLE WATER*
*NOW SERVING THOUSANDS OF PEOPLE*
*IN SEVERAL VILLAGES IN MADRAS STATE*

# WAVIN INDIA LTD.

AMBATTUR MADRAS-58

*Stock can be had from :*

**BOB & JAASKO**
20, ANDERSON STREET,
MADRAS.

**SOUTHERN ELECTRIC CORPORATION,**
AVANASHI ROAD,
COIMBATORE.

---

*With the best compliments of*

# REICHHOLD CHEMICALS INDIA LIMITED

Post Bag No. 3
KANNABIRAN KOIL STREET, MADHAVARAM, MADRAS-60

*Tele* : 65551, 65552 & 65553 *Grams* : ' Beckacite '

*Manufacturers of the following synthetic resins* :

**Abrasives:** VARCUM Phenolic Resins

**Foundry:** FOUNDREZ Phenolic Resins for Shell moulds and cores

**Reinforced Plastics and Laminates:** POLYLITE Polyester Resins

**Paints and Printing Inks:** BECKOSOL alkyd Resins, STYRESOL styrenated alkyd Resins, BECKACITE hard resins, BECKAMINE urea-formaldehyde Resins and SUPER-BECKAMINE melamine-formaldehyde Resins

**Plywood, Particle Board and Furniture:** PLYAMINE and FORAMINE urea-formaldehyde Resins PLYOPHEN Phenolic Adhesives for Plywoods

---

# இண்டியனுயில் நம்முடையது !





நான் வேலை செய்யும் தொழிற்சாலையில் "தொழிலக உரசல்" எதுவும் கிடையாது. யந்திரங்களில் அசையும் உறுப்புகளுக்கிடையே உரசலின்றி தடுக்க இண்டியனுயில் மகோன்னத ரக மோபில் எண்ணெய்கள், கிரீஸ்கள் மற்றும் ரசாயனக் கலவைகளை விநியோகிக்கின்றது. தவிர அதன் தொழில் நுட்பச் சேவை சிப்பந்திகள் அப்ளிகேஷன் பிரச்னைகளில் தங்கள் நிபுண ஆலோசனைகளை வழங்குகின்றனர்.

இண்டியனுயில் மக்களுக்காக நிலங்களில் விளைச்சலைப் பெருக்க எனக்கு உதவுகின்றது. எனது புத்தம் புதிய டிராக்டருக்கு ஹை ஸ்பீட் டீசல் எண்ணெயும், எனது பாசன வேலைக்கான பம்புக்கு லேசான டீசல் எண்ணெயும், உரங்களுக்கு நாப்தா மற்றும் எனது பண்ணைக் கருவிகளுக்கு பசை எண்ணெய்களும் அதுதான் சப்ளை செய்கின்றது.

இண்டியனுயில் இவ்வளவும் செய்ய முடிகிறதென்றால் அது நமக்குச் சொந்தமாக இருப்பதே காரணம்.

INDIANOIL

—[illegible]

**இண்டியன் ஆயில் கார்ப்பொரேஷன் லிமிடெட்.**

அறுபதாண்டு அகவை எய்தும் பேரறிஞர் அண்ணாவின்
பிறந்த நாள் வாழ்த்துக் கவிதை

# பெருமங்கல வாழ்த்து

அளிப்போர்:
## டாக்டர் சி.இலக்குவனார்

உலக முதன்மொழி உயர்தனிச் செம்மொழி
இலக்கணச் செப்பமும் இலக்கிய வளமும்
இயல்பாய்க்கொண்டே இலங்கிடும் தொன்மொழி
கற்போர் தம்மைக் காமுறச்செயும் மொழி
என்றே போற்றிடும் இனிய தமிழ் மொழி
தன்னிடம் சுருங்கித் தாழ்நிலை யுற்றுமே
அல்லற் பட்டே ஆற்றா தழுதிட
"அடிமை களைந்து உரிமை யளிப்பேன்.
அஞ்சுதல் தவிர்க; அழுதல் விடுக"
என்றுமாப்போல் இன்தமிழ் நாட்டின்
ஆட்சியை ஏற்றுள அறிஞர் பெருமான்
அண்ணா பெருமை அறையப்போமோ!
சித்திரப் பாவையின் செயலற்றிருக்க
கேட்போருள்ளம் கிளர்ந்தெழுமாறு
சொல்லும்திறன் கொண்டே தோமில் நெறியில்
மக்களைக் கவர்ந்த மாபேரியக்கம்
அமைத்து முதல்வராய் அரியணை யேறிய
தலைவர் இவர்போல் தரணியில் உண்டோ?
பகையையும் நட்பாய்ப் பாங்குடன் கருதி
குற்றம் மறந்து சுற்றமாய் ஆக்கிடும்
அன்பில் பெரியார்: அணைத்துச் செல்வதில்
அண்ணனே இவர்: ஆதலின் இவரை
வயதில் முதியரும் வாயும் மனமும்
இன்புறும் வகையில் எம்அண்ணா என
எவர்உளங் களினும் இனிதே குடிகொளும்
அன்புத் தலைவராய் ஆட்சி செய்பவர்:
மாறுபட்டோரும் மகிழ்ந்திடுமாறு
கொள்கையைவிட்டே குலவுவோர் போன்றே
விட்டுக் கொடுத்தே வேண்டுவன முடிக்கும்
அரசியல் சதுரை அணியாய்ப் பெற்றவர்
மார்க்சின் நெறியை வையகம் ஏற்க.
திட்டம் தீட்டிச் செயல்முறைப்படுத்திய
உருசியப் பெரியர் உயர்புகழ் இலெனின்போல்
வள்ளுவர் நெறியை வையகம் ஏற்க
உள்ளி உள்ளி உழைத்திடும் திறலர்:
முதலமைச்சராக முதல் நிலையுற்றதும்,
காட்சிக் கெளியராய்க் கடுஞ்சொலற்றராய்,
பழமை போற்றும் பண்பு மிக்குடையராய்,
அற்றூர் அழிபசி தீர்க்கும் நெறியில்
எந்த நாட்டிலும் எவரும் கொணரா
ஒரு படி அரிசி ஒருஉரூபா யெனும்
திட்டம் புகுத்தினர்: தீர்ந்தது பசியும்,
உண்டி கொடுத்தோர் உயிர் கொடுத்தோர் எனும்
உயர்புகழ் பெற்றனர்: உணவினும் சீரிய
உயிரினும் விழுமிய ஒண்மொழி காக்க
இந்தியாம் அரவு இன்தமிழ் அணங்கைப்
பற்றிச் சுற்றிடா வண்ணம் பயில்தரு
கல்விப் பூங்கா காத்திடும் வேலியாம்
இருமொழித் திட்டம் இயற்றினர் இனிதே:



அகத்து நாட்டில் அவரவர் மொழியும்
புறத்து நாட்டின் புதுமை தெரிய
ஆங்கிலம் எனும் ஓர் அறிவு மொழியும்
எவர்க்கும் சாலும்: இம்மொழிக் கொள்கையே
இந்தியக் கண்டம் இணைந்து திகழும்
வாய்ப்பினை நல்கும்; வல்லாண்மையால்
விரும்பா மொழியை அரும்பாம் சிறார்தலை
சுமத்தின் பெறுவது சொல்லொணாத் துயரே
ஒற்றுமைநாடி வேற்றுமை விதைக்கும்
இன்னாச் செயலுக் கிறுதி கண்டார்.
எங்கும் தமிழே; எதிலும் தமிழே;
எல்லாம் தமிழிலே எனும் நிலை ஆக்கினார்.
உலக அரங்கில் உயர் இடம் பெற்றிட
உலகத் தமிழ் மாநாடு துணையாகச்
சிறப்புற நடாத்திச் சேர்த்தனர் புகழை.
போட்டியும் பூசலும் புன்முறைச் செயல்களும்,
நாட்டினை அலைக்கும் நலமல் செய்திகள்
எங்கும் கேட்பினும் இன்தமிழ் நாட்டில்
அறிஞர் அண்ணா ஆளுந் திறனால்
அமைதியும் ஒழுங்கும் அரியணை வீற்றுள
என்பதை யறிந்த இருநில மாந்தர்
தத்தம் நாட்டில் தலைவர் அண்ணா
காட்சி தந்து, களிப்பினை நல்க
அழைக்க எண்ணவே அமெரிக்காதான்
முந்திக் கொண்டது; எதிலும் முன் நிற்கும்
செல்வச் சிறப்புடை சீரார் திறனால்.
உலகப்புகழுடை உயர்பேரரசியல்
தலைவர் தம்மைத் தம்மிடம் அழைத்து
சிறப்புச் செய்யும் சீர்மிகு ஏல் எனும்
பல்கலைக் கழகம் பாங்குடன் அழைத்திட
அறிஞர் அண்ணா அன்புடன் ஏற்றனர்.
ஆயிரக் கணக்கில் அமெரிக்கா சென்றுள்ளனர்
தமிழராய்ச் சென்று தமிழ்ப் புகழ் பரப்பி யோர்
விரல்விட்டெண்ணும் மிகச் சிலரேயே.
தம்புகழ் அறிந்தோர் தமிழ்ப்புகழ் அறிந்திட
ஒல்காப் புகழுடைத் தொல்காப்பியத்தையும்
உலகப் பொதுமறை உயர்திருக்குறளையும்
நெஞ்சையள்ளும் நீள் புகழ்ச் சிலம்பையும்,
தம்முடன் கொண்டே தமிழ்உரு வெடுத்துச்
செல்வது மானவும் இந்தமிழ் நாட்டினர்
பண்பெலாம் திரண்டு பருவுடல் கொண்டு
அகல்வது போலவும் அன்பர் பல்லாயிரவர்
மீனம்பாக்க விண்வழித் துறையில்
உவகை பொங்க ஒருங்கு திரண்டு
வாழ்த்துக்கூறி வணங்கி கை கூப்பிட
இன்துணையாக இனிய சொக்கலிங்கனார்
புன்னகை பூத்த பொலிவு முகமும்
அன்பும் பண்பும் அடக்கமும் ஆற்றலும்
தமக்குறு அணிகளாய்த்தாங்கும் தோற்றமும்
கொண்டு அண்ணாவின் குறிவழி ஒழுகிடும்
தனிச்செயலராகத் தழுவும் நிழல்போல்
உடன் வழிகொள்ள உலகப்பயணம்
ஏப்பிரல் திங்களில் ஏற்றுமே பிரிந்தனர்.
ஞாயிறு பிரியும் நல்மரை மலரென
வாடிய முகமுடன் மகிழ்ந்தே நின்றோம்.
சென்னையின் ஆளுநர் சீர்மிகு ஏல் துரை
உதவிய கொடையால் உயிர்ப்புற் றோங்கிய
பல்கலைக் கழகம் பயின்ற எண்டன் சப்பு
(Hendon Chubb)
அமைத்த அறக்கட்டளையால் அரசியல்
உயர் பேரறிஞரை உவந்து அழைத்து
மாணவர் தம்முடன் மகிழ்ந்து குலவி
உண்டு உறைந்து ஒருசில நாட்கள்
தோழமை கொள்ளும் தூய நல் திட்டம்

[நாடறிந்த தமிழறிஞரும், இப்போது உசுமானியா பல்கலைக் கழகத்தின் தமிழ் ஆராய்ச்சித் துறைத் தலைவராகப் பணியாற்றுபவருமான தமிழ்ப் பேராசிரியர் டாக்டர் சி. இலக்குவனார் அவர்கள், பலவகைத் தமிழ் மரபை ஒட்டி, தமிழக முதல்வருக்கு வழங்கி யுள்ள வாழ்த்துப் பாமாலையை பெருமங்கல வாழ்த்து என்ற இந்தமிழ்ப் பெயரில்—வெளியிடுவதில் பெரு மகிழ்ச்சி அடைகின்றோம்.—ஆசிரியர்.]

அமெரிக்கரல்லா அரசியல் தலைவர்
இதுவரை எவரும் எய்தினர் அல்லர்.
அண்ணு பெற்றனர் அத்தகு சிறப்பை.
அறிவுடை ஒருவரை அயலரும் போற்றுவர்.
ஞாயிறு தன்னை நற்குடை மறைக்குமோ?
ஐந்து நாட்கள் அன்புறுதோழராய்
திமோத்தி துவைத்துக் கல்லூரி கொண்டே
பெரும் பேறுற்ற தாய் பெரிதும் மகிழ்ந்தது.
மாணவர் குழாமும் மற்றுள்ள அறிஞரும்
பேராசிரியர்களும் அவர்தம் பெண்டிரும்
விருந்துகள் அளித்தே விருந்தினைப் பெற்றனர்.
வினுதலும் விடுத்தலும் விரைவாய் இயல
அண்ணுவின் திறன் அறிந்து மகிழ்ந்தனர்.
''இந்தியக்கண்டம் இனிய அமைதியை
நாடியுழைக்கும் நற்பணிக்குரியது
ஆங்கிலம் ஒன்றே அறிவையும் இணைப்பையும்
இனிதே நல்கும்: இந்தி நல்காது.
நேருவின் பின்னர் நீள்பெருந் தலைவருள்
ஒருவரே யாகி உயரிய ஆட்சியும்
பொறுப்பார் தலைமையும் புகழுறு தமிழகம்
பெற்றிடச் செய்த பெருமகன் என்றே
''நகர முழக்கம்'' நவின்று புகழந்தது.
உழவுத்துறையிலும் உணவுத்துறையிலும்
அறிவன அறிந்து அங்குள மக்களின்
அன்பில் ஆழ்ந்தும் அறிவால் ஆழ்த்தியும்
தமிழகச் சிறப்பைத் தாம் கொண்டு சென்ற
பொருளால், நூல்களால், புகல்திரைச் சுருளால்
உரையால், செயலால் உணர்த்தி, மீண்டனர்
அமெரிக்காவின் ஆட்சித் தலைவரே
அறிஞரைக் கண்டு அன்பிற் கலந்திலர்
உழைப்பால் உயர்ந்தே ஓங்கிடு சப்பான்
அன்புடன் அழைத்திட அங்கும் சென்றே
உழவினும் தொழிலினும் உயர் அறிவியலினும்
தம்மொழிப்பற்றினும் தாளாண்மையினும்
சிறப்புறுமாற்றைச் சிந்தையில் தேக்கி
இன் தமிழ் நாட்டை எல்லாத் துறையினும்
உயர்த்தும் திட்டம் உளத்திற் பெற்றே
சென்ற இடமெல்லாம் சிறப்பினை எய்தி
நாட்டுக்குறுபயன் நன்கு தெரிந்தே
தாயைக்கூடும் தலைமகன் போல
தமிழ் நா டடைந்தார்; தண்மதி கண்ட
கடலெனத் திரண்டு களித்தனர் மக்கள்'
மக்கள் நலனே மாண்புறு கடனுய்
தக்கன ஆற்றித் தகவில அகற்றி
என்றும் இனியராய் ஏழைகள் தோழராய்
ஆட்சித் தேரை அணியுறச் செலுத்தி
உலகப்புகழ் பேறும் உயர்நலம் பேற்றுடன்
அறுபதாம் ஆண்டை அடையும் அண்ணு
இளைஞர்க்கு இளைஞராய் என்றும் வாழ்க.
வாழ்க்கைத் துணைவியாம் மகளிர் தலைவியாம்
இராணி அம்மையார் இனிய புரப்புடன்
நீன்று வாழ்க! நீள் தமிழ் பகையை
வென்று வாழ்கவே! வெல்க தமிழே!

ஓராண்டுச் சாதனை: [7-ம் பக்கத் தொடர்ச்சி.]

"எண்ணிய எண்ணியாங்கு எய்துப எண்ணியார் திண்ணியராகப் பெறின்" அல்லவா? ஊராட்சி மன்றத்தார்—ஒன்றியக் குழுவினர்—ஒன்றியத் தலைவர்கள்—நகராட்சி மன்றத்தார்—இவ்வமைப்புக்களில் பணியாற்றும் இலட்சக் கணக்கான ஊழியர்கள்—உள்ளாட்சித் துறையினர்—கிராம வளர்ச்சித் துறையினர் ஆகியோர் இப்பணியில் காட்டிய ஆர்வமும், ஒத்துழைப்பும் இத்திட்டத்தின் வெற்றிக்கு மூல முதற்காரணம் என்பது உண்மை!

### திட்டத்தின் அடிப்படை நோக்கம்

தாமாகவே கிணறெடுத்துப் பயிரிட இயலாத சிறு நிலச் சொந்தக்காரர்கள் சிலரை ஒன்ருகக்கொண்டு, ஊராட்சி ஒன்றியமே ஒரு கிணறமைத்து மின் இணைப்புத் தந்து உதவும் திட்டமான சமுதாய நலக் கிணற்றுத் திட்டம், நன்முறையில் செயலாக்கப்பட்டு ஏறத்தாழ 500 கிணறுகள் அமைக்கப்பட்டுள்ளன. எனினும், குறியீட்டளவை எட்டும் வகையில் இவ்வாண்டு மேலும் ஊக்கமும், உற்சாகமும் காட்டப்படும்.

டிராக்டர்களைப் பயன்படுத்துவதில் உழவர்கள் காட்டும் ஆர்வம் பாராட்டத்தக்கது! இவ்வாண்டில், இதுவரை ஏறக்குறைய 400 டிராக்டர்கள் வாங்கப்பட்டுள்ளன! தேவையான அளவு டிராக்டர்கள் கிடைக்காமையே குறியீட்டளவை எட்டப் பெருந்தடையாக இருக்கிறது.

444 டில்லர்கள் வாங்கி வழங்கப்படுவதன் மூலம் நல்ல பலன் விளைந்துள்ளது!

பூச்சி மருந்துத் தெளிப்பான்கள் (sprayers and dusters) 2059 வாங்கத் திட்டமிட்டிருந்தாலும், அதன் பயன் கருதி இதுவரை 4642 வாங்கிப் பயன்படுத்தப்பட்டு வருவது பாராட்டுக்குரியதாகும்!

காய்கறித் தோட்டம் 5059 அமைப்பதென்ற திட்டத்தையும் மிஞ்சி 6872 அமைக்கப்பட்டுள்ளன.

இதன்றித் திருமண மண்டபங்கள் பல அமைக்கப்பட்டும், முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டும் வருகின்றன.

இவற்றையெல்லாம் காணும்போது ஓராண்டுச் சிறப்புத் திட்டம் மனநிறைவு கொள்ளத்தக்க வகையில் செயலாக்கப்பட்டுள்ளது என்றே கூறலாம்.

**தன் முயற்சி, தன்னம்பிக்கை ஆகிய இரு பண்புகளுக்கும் நம்முடைய மாண்புமிகு முதலமைச்சரின உள்ளத்தில் தனி இடம் இருப்பதாலும், அவை மக்கள் அனைவரிடையேயும் வேரூன்றி வளரவேண்டும் என்ற குறிக்கோளுடன், இந்த ஓராண்டுத் திட்டம் வகுக்கப்பட்டது என்பது இங்கு நினைவு கொள்ளத்தக்கது.**






இராமகிருஷ்ணபுரத்து வீதிகளில் சற்றே உலவி வந்தால் போதும்; உங்களுக்குப் பசியெடுக்கும் அழகிய பசுமையான காய்கறிகளையும், தோட்டங்களையும் கண்ணுறும்போது உங்களுக்கு விருந்துண்பது போல ஓர் எண்ணம் தோன்றி, பசி ஏற்படும். அவ்வளவு காய்கறிகள்! அத்தனை செழுமை அங்கே!

### எங்கிலும் பசுமை, வளமை!

வாழைப் பழங்கள், பாப்பாளிப் பழங்கள், தக்காளி, உருளைக்கிழங்கு, பீன்ஸ், கத்திரிக்காய், பூசணிக்காய், முட்டைகோஸ், காலிபிளவர் போன்ற வகை வகையான பழங்கள், காய்கறிகளனைத்தும் பயிரிடப்படுகின்றன.

இராமகிருஷ்ணபுரம் என்பது, புது டில்லியிலுள்ள அரசு ஊழியர்கள் வசிக்கும் குடியிருப்பாகும். அக்குடியிருப்பின் அடித்தளத்தில் வாழும் ஒவ்வொரு குடும்பமும் ஒரு காய்கறித் தோட்டத்தை அமைத்து, கண்ணும் கருத்துமாய்ப் பேணிப் பாதுகாத்து, பசுமையான, சத்துள்ள காய்கறிகளை விளைவித்துக் கொள்கின்றன.

இவைமட்டுமல்ல! அங்கே கோழிப் பண்ணையும் இருக்கிறது. எங்கிருந்தோ ஓர் ஆடு கத்துவதும் காதில் விழும்.

### விலைவாசி குறைந்தது

"இக் குடியிருப்பிலுள்ள காய்கறி அங்காடியில் காய்கறிகளின் விலை குறைந்து விட்டது. காரணம், இந்த வீட்டுக் காய்கறித் தோட்டங்கள் தாம்! இக்குடியிருப்பிற்கு அருகில் எவ்வித பெரிய காய்கறி அங்காடியே இல்லை. எனவே இவ்வாறு இந்த அரசு ஊழியர்கள் காய்கறிகளை விளைவித்துக் கொள்ளவில்லையெனில், அவற்றின் விலை பன்மடங்கு பெருகியிருக்கும் என்பதில் துளியும் ஐயமில்லை" என்கிருர் அங்குள்ள ஓர் அரசு ஊழியர்.

卐

**சிறு நகர்களிலும், மாநகர்களிலும் வாழ் மக்கள், காய்கறித் தோட்டங்களை அமைப்பதில் பெரிதும் ஆர்வம் காட்டுகின்றனர். இதற்குச் சான்ருக, டில்லியிலுள்ள இராமகிருஷ்ணபுரத்தைக் கூறலாம்.**

卐

### நிலத்தை பண்படுத்துதல்

இளைஞர்கள் மட்டுமே இப்பணியில் ஈடுபட்டுள்ளனர் என்று கூறுதற்கில்லை. ஓய்வு பெற்று, தங்களது பிள்ளைகளுடன் வசிக்கும் முதியோர்கள் கூட, மிகுந்த ஆர்வத்துடன் தோட்ட வேலையில் கவனத்தைச் செலுத்துகின்றனர்.

தோட்டத்தை அமைப்பதற்கு மூன்று அடி ஆழம் முதலில் தோண்டுகிருர்கள். கட்டிட கற்கள் போன்றவற்றை அகற்றி நிலத்தைப் பண்படுத்துகிருர்கள். தோட்டத்திற்குத் தேவையான விதைகளை 'இந்திய வேளாண்மை ஆராய்ச்சி நிறுவனத்தின்' தோட்டக்கலைப் பிரிவு அளிக்கிறது. தோட்டம் அமைப்பதற்குரிய ஆலோசனைகளை 'காய்கறித் தோட்டக்குழு' அளிக்கிறது.

### காய்கறி தோட்டபுரம்

எட்டு அடி நீளம், ஐந்து அடி அகலமுள்ள ஒரு பாத்திக்கு, கால் கிலோ ரசாயன உரமிடப்படுகிறது. காலிபிளவர் பயிருக்கு மட்டும் அரை கிலோ உரம் தேவை.

வீட்டுக் காய்கறித் தோட்டத்திற்குரிய போட்டியில் பங்கு பெறுவதற்காக கிடைக்கப்பெறும் விண்ணப்பங்களில், பெரும்பான்மையானவை, இராமகிருஷ்ணபுரத்திலிருந்து தாம் வருகின்றன என்று கூறப்படுகிறது.

எனவே இராமகிருஷ்ணபுரத்தை 'வீட்டு காய்கறி தோட்டபுரம்' என்று ஏன் அழைக்கலாகாது? நீங்களே சொல்லுங்கள்!

'அளவோடு பெற்று வளமோடு வாழுங்கள்' 'திட்டமிட்ட குடும்பம் தெளிவான இன்பம்' என்ற நல் வாழ்வுக்கான விளம்பரங்களெல்லாம் நற்பயனை அளித்து வருகின்றன. குடும்பக் கட்டுப்பாடு முறைகளெல்லாம் மக்கள் கடைப்பிடித்து, தங்களது குடும்பங்களை பேணிப் பாதுகாக்க நாடுகின்றனர். குடும்பக் கட்டுப்பாடு திட்டத்திற்கு மக்களிடையே நாளுக்குநாள் ஆதரவு வண்ணமாய் பெருகி வருகிறது.

இதற்குச் சான்றாக, மகாராஷ்டிரா மாநிலத்திலுள்ள 'பெத்' என்ற ஒரு கிராமத்தைக் கூறலாம்.

'பெத்' கிராமத்தின் மக்கள் தொகை 927 மட்டுமே. சென்ற ஆண்டு இங்கு 13 குழந்தைகளே பிறந்திருக்கின்றன. இந்த 13 குழந்தைகளிலும் 11 குழந்தைகள், இக் கிராமவாசிகளின் மகள்களுக்கு (வெளியூரிலிருந்து பிரசவத்திற்கு வந்தவர்கள்) பிறந்தவர்கள். எனவே சென்ற ஆண்டிலே இக்கிராமத்தில் வசிப்போருக்கு பிறந்த குழந்தைகள் இரண்டேதாம்.

இது இயற்கையாகவே ஏற்பட்டதா? இல்லையென்றால் இதற்குக் காரணம் என்ன? அறிய வேண்டாமா?

கருத்தடை வளையம் (லூப்) அணிந்து கொண்டுள்ளனர். கணக்கிட்டுப் பார்க்கையில், குடும்பக் கட்டுப்பாடு திட்டத்தை மேற்கொள்ள வேண்டிய பருவத்தில் அல்லது அவசியத்தில் எவரும் அதை ஏற்றுக்கொள்ளாமல் இல்லை என்று அறுதியிட்டுக் கூறலாம்.

'பெத்' கிராமத்திற்கு ஒரு தோழமை கிராமமும் இருக்கிறது. 'மூர்த்தி' என்ற கிராமத்தில் 339 பேர்கள் வசிக்கின்றனர். இவர்களில் 80 பேர்கள் குடும்பக் கட்டுப்பாடு திட்டத்தை மேற்கொள்ள வேண்டியவர்கள். 15 பேர்களுக்கு குழந்தைகளே இல்லை; 41 பேர்களுக்கு ஒன்று முதல் மூன்று குழந்தைகள்; எஞ்சிய 21 பேர்களுக்கு, 4 அல்லது அதற்கு




'பெத்' கிராமத்தின் ஊராட்சித் தலைவர், உறுப்பினர்கள் ஆகியோர் தாம் இதற்கு வழிகாட்டினர். குடும்பக் கட்டுப்பாட்டுத் திட்டத்தை வரவேற்று, மருத்துவ மனைக்குச் சென்று, முதன் முதலில் அறுவைச் சிகிச்சை செய்துகொண்டு பிறருக்கு முன்மாதிரியாக விளங்கினர். பின், தெருவெல்லாம் குடும்பக் கட்டுப்பாடு பற்றி முழக்கமிட்டனர். வெற்றி அவர்கள் பக்கந்தாம்! சொல்லவும் வேண்டுமோ?

### எல்லோரும் விரும்பிய முறை

ஏற்கனவேயே 8 பெண்கள் உட்பட, 70 பேர்கள் அறுவை சிகிச்சை செய்து கொண்டு விட்டனர். 30 பெண்கள்

மேற்பட்ட குழந்தைகள் உண்டு. எனவே அறுவை சிகிச்சைகள் 67 பேர்களுக்குச் செய்யப்பட்டன. அதன் மூலம், 'மூர்த்தி' கிராமத்தில் குடும்பக் கட்டுப்பாடுத் திட்டம் முழுமையடைந்தது.

### உங்கள் ஊர் எப்படி ?

அடுத்து, 'பங்காரி' என்ற ஊரில் உள்ள 500 பேர்கள், குடும்பக் கட்டுப்பாடு திட்டத்தில் ஏதேனும் ஒரு முறையையாவது பின்பற்றி வாழ்கின்றனர்.

நாட்டிற்கு எடுத்துக்காட்டாக இக் கிராமங்கள் செயல்பட்டன என்பது பெருமகிழ்ச்சிக்குரிய செய்தியன்றோ! உங்கள் ஊர் எப்படி?



# இதோ ஒரு பார்வை
# வெற்றிப் பட்டியல்

1967-68-ம் ஆண்டில் நம் நாட்டில் உணவு தானியங்களின் உற்பத்தி மொத்தம் 9 கோடி 50 இலட்சம் டன்னாகும். இது கடந்த ஆண்டை விட 2 கோடி டன் அதிகமாகும்.

இதற்கு முன்பு நம் நாட்டில் அதிக அளவு உணவு தானிய உற்பத்தி 1964-65 ஆண்டில் ஏற்பட்டது. அப்பொழுது விளைச்சல் 8 கோடியே 90 இலட்சம் டன்னாகும்.

• • •

நம் நாட்டில் 1967-68-ம் ஆண்டில் மிகு விளைச்சல் தரக்கூடிய உணவுப் பயிர்கள், 60 இலட்சம் ஹெக்டேர்களில் பயிரிடப்பட்டிருந்தது. இப்பொழுது 1968-69-ம் ஆண்டில் 85 இலட்சம் ஹெக்டேர்களில் பயிரிடப் பட்டு வருகிறது.

• • •

கடந்த ஆண்டு, தமிழ் நாட்டிலுள்ள தஞ்சை மாவட்டத்திலும் ஆந்திர மாநிலத்திலுள்ள மேற்கு கோதாவரி மாவட்டத்திலும் குருவை நெல் விளைச்சலில் புதிய சாதனை ஏற்படுத்தப்பட்டுள்ளது. தஞ்சையில் ஒரு ஹெக்டேருக்கு 19.3 குவிண்டால் நெல்லும், மேற்கு கோதாவரியில் ஒரு ஹெக்டேருக்கு 17.8 குவிண்டால் நெல்லும் விளைந்துள்ளன.

• • •

மிகு விளைச்சல் சாகுபடித் திட்டத்தினால், பரவலாக நம் நாட்டில் குறுகிய காலப் பயிர் சாகுபடி நல்ல முறையில் உயர்ந்துள்ளது. சராசரியாக கேரள மாநிலம் பாலக்காடு பகுதியில் 3 சத விதம் உயர்ந்துள்ளது. அசாம் மாநிலம், கச்சார் பகுதியில் 82 சத விதம் உயர்ந்துள்ளது.

• • •

இவ் வாண்டு சிறிய பாசனத் திட்டங்களுக்காக நாடு முழுமைக்கும் ரூ. 156 கோடி செலவிடத் திட்டமிடப்பட்டுள்ளது. இதனால் 2 இலட்சம கிணறுகளும் 42 ஆயிரம குழாய்க் கிணறுகளும் ஆயிரம் வடிமுனைக் குழாய்களும் 2 இலட்சத்திற்கும் மேற்பட்ட குழாய்களும் அமைக்கப்படும். இதன் விளைவாக, பாசன வசதி பெறவிருக்கும் நிலத்தின் பரப்பளவு 13 இலட்சத்து 70 ஆயிரம் ஹெக்டேர்கள்.

• • •

1965-66-ம் ஆண்டில் பயிர்ப் பாதுகாப்பு 1 கோடியே 66 இலட்சம் ஹெக்டேர்களுக்கு அளிக்கப்பட்டது. 1966-67-ம் ஆண்டில் பயிர்ப் பாதுகாப்பு 2 கோடியே 43 இலட்சம் ஹெக்டேர்களுக்குத் தரப்பட்டது. கடந்த ஆண்டு (1967-68) பயிர்ப் பாதுகாப்பு 3 கோடியே 64 இலட்சம் ஹெக்டேர்களுக்கு உயர்ந்திருந்தது. இவ் வாண்டு பயிர்ப் பாதுகாப்பு 5 கோடியே 50 இலட்சம் ஹெக்டேருக்குத் தரப்படும்.



O.N.—6A

# இதோ ஒரு முறை:

வேளாண்மையில் அதிக கவனம் செலுத்தி, உற்பத்தியைப் பெருக்கி, மிகுந்த அளவில் ஆதாயத்தைக் காண விரும்பும் உழவர் பெருமக்கள் மிக்க உள்ளனர். அவர்களில் பெரும்பாலோர் மாநில அரசு, மைய அரசு வெளியிடும் பண்ணைச் செய்திகளடங்கிய வார, திங்கள் வெளியீடுகளைப் பெற்று, படித்து, ஆராய்ந்து பயனடைகின்றனர். நாளிதழ்களும் அவ்வப்போது சிறிது இடத்தை ஒதுக்கி, பண்ணைச் செய்திகளையும் குறிப்புகளையும் வெளியிடுகின்றன.




இதுபோன்ற வெளியீடுகள், நாளிதழ்களில் வெளிவருவன அனைத்தும் உடனே பயன்படும் என்று கூறுவதற்கில்லை; ஆனால் அவை வருங்காலத்திலே உரிய நேரத்தில் தேவைப்படும். எனவே அவற்றை படித்துவிட்டு, புறக்கணிக்காமல், போற்றிப் பாதுகாத்து, நற்பயனை அடைய சில குறிப்புகளைக் கீழே காணலாம்.

## இருவித காகித உறைகள்!

பெரிய காகித உறைகள் (கவர்கள்) சிலவற்றை நீங்களே செய்துகொள்ளுங்கள். இல்லாவிடில், விலைக்கு வாங்குங்கள். ஒவ்வொன்றின் மீதும் கோதுமை, நெல், தொழு உரம் மற்றும் உரமிடுதல், ரசாயன உரம் மற்றும் ரசாயன உரமிடுதல், கால் நடைகள், கோழிப் பண்ணை, தேனீ வளர்ப்பு, பழங்கள், பூச்சி மருந்துகள், நோய்கள் என்று பெரிய எழுத்துக்களில் எழுதிக் கொள்ளுங்கள். இப்போது ஒரு முக்கிய வேலை முடிந்து விட்டது.

அடுத்ததாக, சில சிறிய காகித உறைகளையும் வாங்கிக் கொள்ளுங்கள்; அல்லது நீங்களே செய்து கொள்ளலாம். இந்த உறைகளில் கீழ்க் கண்டவாறு எழுதுங்கள்.

நெல்–ரகங்கள்; நெல்–பசுந்தாள் உரம்; நெல்–நோய், நெல்–பூச்சி மருந்து, கோதுமை–ரகங்கள், கோதுமை–உரமிடுதல், கால்நடை–



மாடுகளை பாதுகாத்தல், கால்நடை உணவு; கோழிப் பண்ணை–பண்ணை அமைத்தல், கோழிப் பண்ணை–நோய்கள் போன்று எழுதிக் கொள்ளலாம்.

எந்த ஒரு பொருள்பற்றி நீங்கள் படிக்கும்போதும், அந்த குறிப்பை முறையாக கத்தரித்து, தகுந்த, சிறிய உறையில் போட்டுக் கொள்ளுங்கள். அந்த சிறிய உறையை அதற்குரிய பெரிய உறையில் போடுங்கள்.

## படித்ததை விடாதீர்கள்!

சான்றாக, நெற்பயிரைத் தாக்கும் நோய்களைப்பற்றிய செய்தியை நீங்கள் பார்த்தீர்கள் என்று வைத்துக் கொள்வோம். அந்த செய்தி அடங்கிய குறிப்பை தனியே கத்தரித்து எடுத்து, அதை 'நெல் நோய்' என்று பெயரிட்டுள்ள சிறிய உறையுள் போட்டு, அதை 'நெல்' என்ற பெரிய உறையினுள் போட்டு பத்திரமாக வைத்துக் கொள்ளுங்கள்.

இம்முறையைப் பின்பற்றினால் வேளாண்மைக் குறிப்புகள் அனைத்தும் உங்களிடம் எப்போதும் தயாராக இருக்கும். உரிய நேரத்தில், உடனே எடுத்துப் படித்து, செயல்பட்டு, பெரும் பயன் அடையலாம்.





[கிராமங்களில் இன்று பல்வேறு துறைகளிலும் நல்லதொரு விழிப்புணர்ச்சி ஏற்பட்டுள்ளது. நாட்டை உயர்த்தும் திருப்பணியில், கிராம மக்களும் ஈடுபாடு கொண்டு, தொண்டுள்ளத்துடன் பணியாற்றி வருகிறார்கள். கிராம மகளிரும் இப்பணியில் ஈடுபட்டுள்ளனர். கிராம மகளிரிடையே ஏற்பட்டுள்ள இந்த மறுமலர்ச்சி உணர்வு, பணி புரிய வேண்டுமென்ற ஆர்வம், முறையாக வகைப்படுத்தப்பட்டு, ஆக்க ரீதியில் மலர்வதற்கு ஓர் அமைப்பு தேவையல்லவா? அந்த அமைப்புதான், கிராம மகளிர் மன்றம்—ஆசிரியர்.]




திருமதி மோகூர் வாசுகி, M. A., M. Litt., தமிழ்த்துறை, தில்லி பல்கலைக்கழக மகளிர் கல்லூரி, தில்லி.

நமது நாட்டில் நகரங்களைவிட கிராமங்கள் மிகுதியாக உள்ளன. அதனால் கிராம நலனும் முன்னேற்றமும் நாட்டின் வளர்ச்சிக்கு ஏதுவாகும். நாளுக்குநாள் கிராமங்கள் பல வகையில் வளர்ந்து, நகர மக்களும் விரும்பிக் குடியேறும் அளவுக்கு வாய்ப்பும் நல்ல வசதியும் பெருகிவருவதைக் காண்கின்றோம். பெரும்பாலான கிராமங்களில் மின்சாரத்தினால் ஏற்படக்கூடிய பயன்கள் அனைத்தையும் பெறமுடிகின்றன. ஊராட்சிகள் நல்ல சேவை செய்து வருகின்றன. தெருவில் விளக்குகளும், பலரும் கேட்டறியும்படியான பொது இடங்களில் வானொலியும் அமைத்து அன்றாட செய்திகள், விலைவாசிகள், பயிர்செய் முறைகள் போன்ற பல தேவையான செய்திகளைக் கேட்டறிய, மக்களுக்கு வாய்ப்பினை ஏற்படுத்தியுள்ளனர். மேலும் பால் பண்ணைகள், கால்நடைப் பண்ணைகள், கிராமத் தொழில்கள் செய்திகளைக் கேட்கும்போது மக்கள் உள்ளத்தில் ஊக்கம் ஏற்பட்டுச் செயலாற்ற சிந்திக்கின்றனர். பல வகையிலும் வளர்ச்சியடைந்து வருகின்ற இடங்களில் இளைஞர் மன்றம், படிக்கும் இடம் (Reading Room), சிறிய நூல் நிலையம் போன்றனவும் காணப்படுகின்றன. ஆனால் மகளிர் மன்றம் பரவலாக இருப்பதாகத் தெரியவில்லை. ஆழ்ந்து நோக்கின், ஒவ்வொரு கிராமத்திலும் ஒரு மகளிர் மன்றம் இன்றியமையாததாகத் தோன்றும்.

## மகளிர் மன்றத் தொடக்கம்

ஒவ்வொரு கிராமத்திலும் ஒரு பெரிய வீட்டுக்காரர் இருப்பர். சில இடங்களில் அங்குப்படித்த பெண்களும் இருப்பர். அவர்களிடம் மக்களுக்கு அன்பும் மதிப்பும் உண்டு. அந்தப் பெரிய வீட்டில் உள்ள மகளிர்களின் திறமிக்க ஒருவர் மகளிர் மன்றம் தொடங்கி செயலாற்ற முன்வரவேண்டும். இதற்கு ஆர்வலர்கள் ஒத்துழைப்பும் தேவையாகும். ஊர்மக்களுக்கு அறிவித்துவிட்டு ஒருநல்ல நாளில் ஆரம்ப விழா நடத்துவது நல்லது. அந்த ஊரில் பெரியவர் என்று கருதும் ஒருவரையோ அல்லது வெளியேயிருந்து யாரையாகிலும் அழைத்தோ ஆரம்பித்து வைக்கும்படி செய்வது சிறப்பாகும். ஆரம்ப விழாவானது மகளிர் உள்ளத்தில் தூண்டுதலையும், ஆக்க வேலையில் ஈடுபட ஊக்கத்தையும் ஏற்படுத்திவிடக் கூடும். மகளிர் மனங்கொண்டால் மாபெரும் சாதனைகள் செய்யக்கூடும். இதை நம் அனுபவங்களில் கண்டும் இருக்கிறோம்.

## திட்டமிடுதல்

மகளிர் பலரும் கூடித் தங்களுக்குத் தலைவியையும், செயலாளரையும் தேர்ந்தெடுத்துக்கொள்ள வேண்டும். ஆண்டுக்கு ஒருமுறை அல்லது இருமுறை இத்தகைய தேர்தல் நடைபெறவேண்டும். அப்பொழுதுதான் அனைவருக்கும வாய்ப்பு ஏற்பட வழியுண்டு. எல்லோரும் கலந்து யோசித்து வசதியான நாளும் காலமும் முடிவு செய்துகொள்ளுதல் நலம். பெரும்பாலும் மாலைநேரம் 6 மணியிலிருந்து 8 மணிவரை வைத்துக்கொள்வது சிறப்பாகும். பலருக்கும் ஓய்வாக வரக்கூடிய நேரமுமாகும். நன்கு யோசித்து மக்கள் சூழ்நிலை, இடத்திற்கு ஏற்ப முடிவுசெய்துகொள்வது பொருத்தமாகும்.

## வாரந்தோறும் கூடுதல்

வாரத்திற்கு ஒருநாள் கூடுவது என்று முடிவுசெய்துகொள்ளவேண்டும். கூடிய பிறகு செய்யவேண்டிய செயல்கள் என்னவென்று திட்டமிட்டுக்கொள்ளல் நல்லது. சொல்லும், செயலும்

யபனுடையனவாக இருத்தல் வேண்டும். மூன்று பிரிவுகளாக மகளிரை வயதுக்கேற்றவாறு பிரித்தல் நல்லது. மணமாகாத கன்னிப் பெண்கள் (கிராமங்களில் 20 வயதுக்குமேல் திருமணமாகாமல் கன்னியாகவிருப்பது அரிதாகும்), இல்லக் கிழத்திகள், ஐம்பது வயதுக்கு மேற்பட்டவர்கள் என்று பிரித்துக் கொள்ளுதல் சிறப்பாகும். செயலில் அவரவர்கள் தகுதிக்கேற்ற முறையில் ஆர்வமும் சுவையுமிருக்கும். அதனால், இவ்வாறு பிரிவுகளாகப் பிரித்துச் செயலாற்றுவது எளிமையும் இனிமையும் தரும்.

### இளம் பெண்கள்

இவர்கள் எதிர்காலக் குடும்பத் தலைவிகளாகச் செல்லக் கூடியவர்கள். குடும்பத்திற்கு ஏற்ற நல்ல தலைவியாக இருக்கவேண்டிய பண்புகள் சிலவற்றைச் சொல்லித் தருதல் வேண்டும். கல்வியை இவர்களின் தரத்திற்கேற்றவாறு புத்தகங்களைக்கொண்டு இனிமையாகவும், நகைச் சுவையுடனும் பாடங்களைச் சொல்லித்தர வேண்டும். துணிகள் தைப்பதற்கும், எம்பிராய்டரி பூவேலைகள் செய்யவும், அழகிய திரைச்சீலைகள் பின்னவும் பிற வேலைகளும் செய்யத் தூண்டலாம். அவர்கள் விரும்பினால் சிற்றுண்டி வகைகளில் சிலவற்றை செய்து காட்டலாம். எந்தத் துறையில் ஆர்வம் இருக்கிறது என்று தெரிந்துகொண்டு அந்தப் பகுதியில் வளர்வதற்குரிய வாய்ப்பினை அளிக்க வேண்டும். கைவேலைகள் செய்யும் போது வேடிக்கையாக பொழுதுபோக்க பாடல்கள் பாடவோ, கதைகள் சொல்லவோ ஏற்பாடு செய்துகொள்வது நல்லது. கைகள் வேலை செய்துகொண்டிருக்கும் ; காதுகள் இனிமையாகக் கேட்டு இதயங்குளிர நேரங் கழித்துவிட்டுப் பயனையும் பெற்றுச் செல்லலாம்.

### இல்லக்கிழத்தியர்

இல்லறம் ஏற்று நடத்துகின்றவர்களுக்குப் பொறுப்பு மிக உண்டு. இல்லறத்தில் உள்ள ஒவ்வொரு உறுப்பினரையும் அன்புடனும், அக்கறையுடனும் நடத்தும் பொறுப்பு இருக்கவேண்டும். சோம்பியிராமல் குடும்ப வேலைகளைச் செம்மையாகக் கவனிப்பதுதான் சிறந்த இல்லறத் தலைவிக்கு அழகாகும். திருவள்ளுவரும் சிறந்த பெண் யார் என்பதற்கு இலக்கணம் கூறுகிறார். அதாவது தன்னையும் காத்துக்கொண்டு, தன்னைக் கொண்ட கணவனையும் அன்பாகப் பேணிப் பாதுகாத்து நல்ல புகழையும் பெற்றுச் சோர்வின்றியிருப்பவளே பெண் என்கிறார். இதை,

> 'தற்காத்துத் தற்கொண்டான் பேணித் தகைசான்ற
> சொற்காத்துச் சோர்விலாள் பெண்'


என்ற குறள் அறிவிக்கிறது. குடும்பத்தில் எத்தனையோ இடங்களில் சோர்வு ஏற்பட வழியுண்டு. அதைப் பெண்ணனவள் திறமையாக வென்று, சோர்வு இன்றி எப்பொழுதும் ஊக்கமும், உற்சாகமும் கொண்டு கடமையைச் செய்யவேண்டும் என்பதுதான் பொருளாகும்.

மன்றத்தில் குடும்பத்திற்கு வேண்டிய முறையில் சில செயல்களைச் சொல்லிக்கொடுத்தால், செயலில் கண்டு பயன் நுகரும்போது ஆடவரும் தங்கள் இல்லத்தரசி மன்றத்தில் அறிந்தவற்றைக் கண்டு மேலும் வளர வாய்ப்பையளிப்பர். குடும்பத்தை நடத்தும் விதம், உணவுப் பொருள்களைப் பாதுகாக்கும் முறைகள், சுவையான பொருள்கள் சிலவற்றைத் தயாரிக்கும் விதம், நாட்பட வைத்திருக்கும் பொருள்கள் ஊறுகாய், வற்றல் போன்றவற்றைத் தயாரிக்கும் முறைகளைச் சொல்லித்தரலாம். வாழ்க்கைக்குப் பயனும் ஏற்படும்.

குடும்பத் தலைவிக்கு வரவுக்கேற்ற செலவு செய்யத் தெரியவேண்டும். முடிந்தால் தேவையிருப்பின் வருமானம் பெற வழியையும் காட்டவேண்டும். விசிறிகட்டுதல், தடுக்குப் பின்னுதல், ஓலையில் கூடை, பெட்டி செய்தல், துணி தைத்தல் போன்ற வேலைகளைத் தெரிந்துகொண்டு குடும்ப வேலையோடு நேரம் இருக்கும்போதெல்லாம் தான் பிறந்த குடிக்கு ஏற்ற ஒழுக்கத்தைப் பெற்றும தன்னைக் கொண்ட கணவனின் வருவாய்க்குத் தக்க முறையில் செலவு செய்யக்கூடியவளும் ஆன தலைவியே இல்வாழ்க்கைக்குத் துணைவியாவாள். இதனை,

> "மனைத்தக்க மாண்புடைய ளாகிதற் கொண்டான்
> வளத்தக்காள் வாழ்க்கைத்துணை."

என்று வள்ளுவர் கூறுகிறார்.




## திட்டமிட்ட குடும்பம்-தெவிட்டாத இன்பம்

* இந்தியாவின் மக்கள் தொகை நாளுக்கு நாள் பயங்கரமாகப் பெருகிக் கொண்டே வருகிறது.

** உலக நிலப்பரப்பில், இந்தியாவின் நிலப் பரப்பு 2·4 சதவிகிதம் தான். ஆனால் உலக மக்கள் தொகையில் இந்தியாவின் மக்கள் தொகை 14 சதவிகிதம் !

*** உலக மக்களில் ஏழு பேரில், ஒருவர் இந்தியர் !



கிராமத் தொழில்கள் பெருகச் செய்யவேண்டும். எளிய நடையில் சிறு நூல்கள் உள்ளன. அதைப் படிக்கும் படியும், எடுத்துச் சொல்லியும், கோழிப்பண்ணை பால் பண்ணை போன்ற தொழில்களைப் பெருக்கலாம். வீட்டுத் தோட்டங்களில் பயனுடைய காய்கறிகள் பயிரிட்டுப் பயனடையச் செய்யவேண்டும். அரசாங்கம் கிராம மக்களுக்கு பலவகையில் தேவைக்குப் பணஉதவி செய்கிறார்கள். ஆடவர் மட்டுமின்றி பெண்களும் நன்மையடைய வாய்ப்பை ஏற்படுத்திக்கொள்ள முடியும்.

குழந்தைகளைப் பராமரிக்கும் முறையைச் சொல்லித் தருதல் வேண்டும். அவசிய மற்ற செலவுகளைக் குறைக்க வழி காணவேண்டும். தேவையற்ற பொருட்களை வாங்கிக் குவிக்கும் மனப்பான்மையை மாற்றிக்கொள்ள வேண்டும். நம்மையறியாமலே சில செயல்கள் அர்த்தமின்றி செய்வதைப் பார்க்கின்றோம். இவ்வாறு எடுத்துச்சொல்லும்போது குறைவாக நினைக்கக்கூடாது. எல்லாருக்கும் எல்லாமே தெரியும் என்று நினைப்பது தவறு. தெரியாதவர்கள் தெரிந்துகொள்ளட்டும். தெரிந்தவர்கள் நினைவில் கொண்டுவருவது நல்லது.

குடும்பக் கட்டுப்பாட்டைப் பற்றியும் எடுத்துச்சொல்ல வேண்டும். இந்த வார்த்தையைக் கேட்டும் கிராம மக்கள் அஞ்சுகிறார்கள். பலர் இழிவாகப் பேசுகிறார்கள். அதனால் மக்கள் புரிந்துகொள்ளும் முறையில் திறமையாகவும் திட்டமாக வாழ நினைக்கும் ஒரு நல்ல குடும்பத்திற்குக் கட்டுப்பாடு அவசியம் என்றும் கூறி இனிமையாக விளக்கிவிட்டால் போதும். அவர்கள் பலருக்குத் தெரிவித்துக் காட்டுத் தீபோல் செய்தியைப் பரவிவிடும்படி செய்வர்.

ஐயாயிரம் ஆண்டுகளுக்கு முன்பே வாழ்கை எப்படி அமைத்துக்கொள்ள வேண்டும். இனிமையாக வாழ்வது எப்படி? குடும்பக் கட்டுப்பாடு என்ன என்பதை நாகரிகமான முறையில் காட்டியுள்ள அழகையும் சிறப்பையும் தமிழன் பெருமிதத்துடன் சொல்லிக்கொண்டு வருகின்ற தொல்காப்பியத்தில் காணலாம். இதற்காகவாகிலும் மக்கள் பழம் பெருமையை அறிய விரும்ப வேண்டும்.

### முதியோர்களுக்கு

இவர்கள் அதிக உழைப்பை மேற்கொள்ள முடியாது. சிறப்பாக கொஞ்சநேரமாகிலும் நல்ல முறையில் பொழுதைக் கழிக்க வேண்டும் என்று நினைக்கவே தோன்றும். அதற்காக மன்றம் செல்லலாம் என்ற நோக்கம் ஏற்படச் செய்யவேண்டும். நலல சிறந்தோருடைய வாழ்க்கை வரலாறுகளையும், அடியார்களின் பெருமைகளையும், காரைக்காலம்மையார் ஆண்டாள் போன்றவர்களின் அன்பு நெறியையும்; ஔவையார், பொன்முடியார் போன்ற அறிவுச் சுடர்களையும்; கண்ணகி, மங்கையற்கரசி போன்ற கற்பின் செல்விகளையும்பற்றி எளிய முறையில் எடுத்துச்சொல்ல வேண்டும். அதைக்கேட்ட தாய்மார்கள் நம் நாட்டின் பெண்மணிகளின் பெருமைகளை நினைந்து மகிழ்ந்து நாம் வாழும் நிலையையும் எண்ணுவார்கள். தமிழ்நாட்டில் பெண்கள் பல ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்னே இவ்வளவு முன்னேற்றமாக இருந்தார்கள் என்று நினைக்கும்போது நம் நிலை வெட்கப்படவேண்டியதாகவுள்ளது என்பர். நல்ல பாடல்களை இனிய குரலுடன் பாடிக் காட்டினால் நல்லது. சிலருக்கு வேலைசெய்ய முடியுமானால் இல்லக்கிழத்தியர் பகுதியில் கொடுக்கப்பட்ட பயனுடைய வேலைகளில் தங்கள் ஆற்றலுக்கும் விருப்பத்திற்கும் ஏற்றவாறு எடுத்துச் செய்யலாம்.

### இடைவெளி தேவை !

"நம்நாட்டில் மக்கட்தொகைப் பெருக்கம் மிக வேகமாக நடந்து வருகிறது. நிபுணர் கணக்குப்படி நாம் ஒவ்வொரு ஆண்டும் ஓர் ஆஸ்திரேலியா நாட்டு மக்கள் தொகையை உண்டுபண்ணி, மக்கட் தொகையைப் பெருக்கிக் கொண்டிருக்கிறோம். இதைத் தடுத்தாக வேண்டும்.

ஒரு காலம் இருந்தது. குழந்தைகளைச் செல்வம் என்ற காலம். அதுவும் 2 அல்லது 3 குழநதைகள் வரைதான். அதற்கும் மேலிருந்தால் குழந்தை எத்தனை என்று கேட்பதில்லை. குழந்தை குட்டி எத்தனை என்றுதான் கேட்கிறோம். ஆகையால் குட்டி வேண்டாம். குழந்தை என்ற அளவோடு, குடும்பத்தைக் கட்டுப்படுத்திக் கொள்ள வேண்டியதுதான். முதல் குழந்தைக்கும் இரண்டாவது குழந்தைக்கும் நடுவில் இடைவெளி இருக்கவேண்டும். நாம் சினிமாவுக்குப் போகிறோம். மூன்று மணிநேரம் நடக்கக்கூடிய அந்த சினிமாவில்கூட, 15 நிமிடங்கள் இடைவெளி விடுகிறார்கள். ஆனால் பிள்ளைகள் பெறுவதில் இடைவெளியே இல்லாமல் செய்கிறோம்!"

[மாண்புமிகு முதலமைச்சர் திரு சி. என். அண்ணாதுரை]

### நாட்டின் கண்கள்

"மேற்கண்ட முறையில் மகளிர் மன்றம் நடத்திப் பார்த்தபிறகு பயன் நன்கு உணரலாம். இதை நடத்த செலவு மிகக் குறைவாகவே ஆகும். ஆரம்பத்தில் ஒருவர் செலவில் தொடங்குவது நல்லது. அதற்குப் பிறகு உறுப்பினர்கள் சிறு தொகையைக் கொடுத்து செலவுக்கு ஏற்பாடு செய்யலாம். நாளடைவில் ஆர்வமுடன் செயல் ஆற்றிவந்தால் பொதுமக்களும், செல்வந்தர்களும் தங்களால் இயன்ற உதவியை பணமூலமாகவும, பிறபொருட்கள் மூலமாகவும் மன்றத்திற்கு அளித்து மேலும் வளர வாய்ப்பை ஏற்படுத்துவர். எந்தச் செயலையும் ஆர்வமுடன் தொடங்கி அக்கறையுடன் செய்துமுடித்தால் நல்ல பயனைத் தனிப்பட்டவரும், நாட்டினரும் பெறுவது உறுதியாகும். பெண்கள் நாட்டின் கண்கள் ஆவர். எனவே அவர்கள் முன்னேறினால் நாடு முன்னேறும் என்பதில் ஐயமுண்டோ?



# புதிய பாதை

## உயர் வளரக உணவுப் பயிர்கள்

## (வானொலி) கவியரங்கம் (13.8.1968)

### தலைவர்: மாண்புமிகு பொதுப்பணி அமைச்சர் திரு மு. கருணாநிதி

"தாளாண்மை கொண்டிங்கு
தமிழரசைச் சிறப்பாக்கும்
வேளாண்மைத் துறையமைச்ச—கவிதை
வாளாண்மை கொண்டிங்கு—உழவுப்
பேராண்மை காட்டவந்த புலவர்களே—
தன்செய் விளைக்கின்ற மரகதமணிகள் கண்டு
—இது
நன்செய் எனமகிழ்கின்றாள் நிலமடந்தை
தஞ்சை விளைக்கின்ற மரகத நெல்மணிகள்
கண்டு—இது
தஞ்சை என மகிழ்கின்றாள் நிலமடந்தை
புகார் இருக்கும் தஞ்சைக் கடைமடையில் பூம்
புகார் இருக்கும் தஞ்சைக் கடலோரம
மிகார் என் சொல்லே இங்குளார் அதனால்
புகார் நீய நினைவுடனே முன்
புகார்த் திகைத்திருநாள்
முன்பு
கார்த்திகைத் திருநாள்
முன்பு கார் திகைத்து
இருநாள் ஒருநாள் அல்ல பலநாள்
பருவமழையின்றி போனாலும்
தருவமீன்போல் ஒளிகாட்டி, தஞ்சையின்
வெற்றிப்
புருவம் தூக்கி நின்றீர் வாழ்க நன்று.
வானின்று உலகம் வழங்கி வருதலால்
தானமிழ்தம் மழையன்றோ
துப்பார்க்குத் துப்பாய துப்பாக்கித்
துப்பார்க்குந்
துப்பாயதூஉம் மழையன்றோ
நீர் இன்று அமையாது உலகெனினும்—அதனை
வகைப்படுத்த
ஆறின்றி இயலாது என உணர்ந்தார்
ஆறுகண்டார் அதனாலே சோறுகண்டார்
எத்தனை ஆறு
இத்தரை மீது
பத்தரை மாற்று
முத்திரைப் பொன்னும்
சித்திர நெல்லே
சிரிக்கச் செய்தது பச்சைப்பட்டு
விரிக்கச் செய்தது வறுமைப் பேயை
எரிக்கச் செய்தது
வீட்டோரம் காட்டோரம்—தேர்தல்
ஓட்டோரம் இருக்கும் தவ்வீர்—சிறிது
ஆற்றோரம் பாரீர் இன்று என்
பாட்டோரம் வாரீர் நன்று
குடமுருட்டி காவிரிப் பெண் ஆடுகின்ற காட்சி
கண்டு—காதல்
கொள் இடம் இதுதான் என்று; காதல்
கொள்ளிடம் இதுதான் என்று
வீரசோழன் வருகின்றான் ஓடம்போக்கி
என்மேல்
வை கை என்று வளைகின்றான்
வைகை என்று வளைகின்றான்; உன் பல்
மலைமுந்தா என நெளிகின்றான்
காவிரியோ கன் கிரிட்டி என்
மன்னியார் வருகின்றாள்
மறைந்திடு அத்தான் என்கின்றாள்
அவனோ
வரட்டுமே மன்னியார் நம்
காதலுக்கு அவளென்ன கல்லணையா?
காமினி பாமினி நாமினி காதலர்கள்
ஆம் இனி திருமணமென்று பிறருக்குச் சொல்லி
விடு
காதல் அக்கினியாறுமோ கண்ணே அருகில்
வந்துவிடு

காதல் அக்கினி ஆறுமோ? கண்ணே அருகில்
வந்துவிடு

அவளோ,
யாரும் நம்மீது தப்பெண்ணார்: நம்
காதல் பிரிக்க வெண்ணார்
பிறர்
வெட்டார் நம் உற... அத்தான்
வெட்கம் என்னைத் த... ன்றான்
வீரசோழன் விரைந்த... க் கொண்டவாறு
பாலாறும் முன்னே ப... ன் மடிமீது சாய்ந்த
மஞ்சளார் முகவதியும்... படி

மணமெப்போது அத்தான் என்றாள்
பெரியாறு தலைமையில் பெரிதாக நடக்கு
மென்றான்

ஆறுகளை ஒன்றாக இணைத்துக் காதல் கதை
பின்னியதாய்க் கருதாதீர்
ஆங்காங்கு வாய்ப்புக்
கூறுகளைச் சீராக்கி வளம்பெருக்கும் நதிகளுக்கு
நன்றி சொல்வோம்

உழுவார் உலகத்தார்க்கு ஆணி
உழுந்தும் உழவே தலை—என
எழுவார் வள்ளுவரும் வாழ்த்துரைக்க
உழவனோர் தாமரை—
சேற்றில் மலரும் அவன் வாழ்வு
உழவனோர் மன்னன்—
நாற்று முடியிருக்கும் அவன் தலையில்
உழவனோர் வீரன்—என்
போர் இருக்கும் அவன் களத்தில்
(வைக்... )
உழவனோர் ஓவியன்—
வயல்கள் அனைத்தும் அவன்
வரைந்த சித்திரம்
உழவனோர் தெய்வம்—
உயிர்களைக் காப்பதால்
குருவை முன்வைத்துத் தனடியில் உழைக்கின்ற
இருவைப் போற்றிடுவோர்... டுபட்டு வருகின்றீர்
நிலம் பிறந்த நாளாகப் இன்னுயிரைக்
நலம் சிறக்க நாட்டுக்கு
கொடுக்கின்றீர்—

உடலில்,
பலம் இருக்கும் வரையிலே
உழைக்கின்றீர்
வயல் வெளியில் ஒன்று பழங்
கலம், மரக்கால், படி பார்க்கின்றீர்
கணக்கெழுதிப் பார்த்தால்
உழுதவன் கணக்குப் மிஞ்சாதென்று
உழக்கெதுவும் மிஞ்சீர்—
உதட்டையே பிதுக்குகின்ற... றாலே
எளிந்த நிலையென்று ... கு
ஏற்றமிகு முன்னேற் ... ழி கண்டோம்


கண்டவழி ... 
எட்டோடு இருப்பது அழகுமல்ல, கவி யரங்கப
பாட்டோடு முடிவதும் நல்ல நல்ல
வீட்டோடு கிடப்பவர்கள் விழித்தெழுக—தமிழ்
நாட்டோரே விடுதலை நாளின்று துடித்தெழுக
காட்டோடு கழனியோடு உழல்கின்றீர்
ஆட்டோடு மாட்டோடு உழல்கின்றீர்
பழைய முறைமாற்றிப் பயிர்செய்தால்
நிறையப் பலன்கிடைக்க வழியுண்டு
உழக்குதான் மிச்சமென்ற இருட்டுநிலை
கிழக்கு வெளுத்ததுபோல் மறைந்துவிடும்
நந்தன்போல் ஓர் இரவில் பயிர்செய்ய
நான் உம்மை அழைக்கவில்லை


கந்தா, கடம்பா, கருப்பா, முனியா என்று
கருவேல மரத்தடியில் மிராசுதார் போடும்
கூச்சல்
கால்நடையைக் கட்டிப்போட்டு
அவை கருணையுடன் தந்த உரம்
சால்கொண்டு மனித முதுகொடிய
இறைத்த தண்ணீர்—தார்க்
கோல்கொண்டு குத்துவதால் சுற்றும் எருது—
இப்படி—
பரம்பரையாய் நடக்கின்ற உழவுத் தொழிலில்
பம்பரத்தின் வேகந்தான் வேண்டுமென்று
இணைக்கின்றோம் விஞ்ஞானத்தை

படித்தவர்கள் மேல் நாட்டில்
விதைக்கின்றார்
விளைக்கின்றார்
விஞ்ஞானக் கருவியினால் . . .
உழுகின்றார் . . .
இங்கோ படித்தவர்கள் அலைகின்றார்
—பயிர் விளைக்க
விழைகின்றார் வரிசையாக வேலைதேடி.
உணவளிக்கும் வேலையினும்
உயர்ந்ததோ வேறோர் வேலை?
ஓதுவரர் எல்லாம் உழுவார் தலைக்கடையில்
என்றால்
பழைய பொருள்
படித்தவர்கள் தொழுதிடுவார்—ஏர்
பிடித்தவரை என்பதுதான்!
அதுமாற்றி நாம் அமைக்கவேண்டு மன்றோ!
"ஓதுவார் எல்லாம் உழுவார் தலைக்கடையில்"
படித்தவர் எல்லாம் உழுவார் . . .
தலைக்கடையில் . . . !
தலைமடையில் . . . .
கடைமடையில் உழுவார்! . . . .
பின் நிலையில் இருந்திட்டோம் பலநாளாய்
உணவில்
தன்னிறைவு காண்பதற்கு ஊக்கம் கொள்வோம்
அந்நிலை எய்திட
முன்னிலை நிற்குது நம் அரசு:
நாட்டினிலே உற்பத்தி பெருக்கென்றால்—அதை
விடுத்து
வீட்டினிலே உற்பத்தி பெருக்குகின்றார் . . . .
முத்தென்றும்
மணியென்றும்
சிட்டென்றும்
சிமிழென்றும்
கண்ணென்றும்
மூக்கென்றும்
கணக்கின்றிப் பெறுதல்விட்டு . . . .
நெல் என்றும்
வரகென்றும்
கம்பென்றும்
கரும்பென்றும்
உளுந்தென்றும்
பருப்பென்றும்
எள் என்றும்
கொள் என்றும்
உணவு பெருக்கிடுவீர்—உற்பத்தி செய்திடுவீர்;
அதை உணர்த்த
உருவான கவியரங்கில்
உழவர்களாம் நண்பர் சிலர் கவியோர்
உழுதுகாட்ட வந்துள்ளார்
வரவேற்கிறேன் . . . ."

(மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சரின்
தலைமை உரை (கவிதை வடிவில்))





# நீயன்றி நானில்லை!

**த**மிழகத்திலுள்ள எண்ணிறந்த கிராமங்கள், குக்கிராமங்கள், மூலை முடுக்குகளுக்கெல்லாம் மின் வசதியை ஏற்படுத்தித் தந்து, தமிழகத்தை மின்மயமாக, ஒளிமயமாகத் திகழச்செய்து தமிழக மின்சார வாரியம் நற்பணியாற்றி வருகிறது (**Madras State Electricity Board**).

நாட்டிலுள்ள ஏனைய மின்சார வாரியங்களின் பணிகள் அனைத்தையும் மிஞ்சும் நிலையில், அவற்றையெல்லாம் பின்னிறுத்தி, வீறுநடைபோட்டு, வெற்றிபாதையில் அமைதியான புரட்சியை ஏற்படுத்தி, கிராம மக்களின் வாழ்க்கையில் ஒளிமயமான எதிர் காலத்தை உருவாக்கி இருக்கிறது தமிழக மின்சார வாரியத்தின் வளர்ச்சிப் பணிகள்.

1961-ம் ஆண்டில் மேற்கொள்ளப்பட்ட கணக்கெடுப்பின்படி, தமிழகத்தில் 15,078 நகரங்களும் கிராமங்களும் உள்ளன. இவை தவிர சுமார் 39,000 உட்கடை கிராமங்களும் தமிழகத்தில் உள்ளன. இவற்றில் 9,354 கிராமங்களுக்கும் 18,877 உட்கடை கிராமங்களுக்கும் மின்சார வசதி அளிக்கப்பட்டிருப்பதுடன், 341,649 மின்சார பம்புசெட்களுக்கும் மின்தொடர்பு கொடுக்கப் 'பட்டுள்ளது.

**வேளாண்மைக்கு 23 சதவீத மின்சாரம்.**

கடந்த மூன்று ஐந்தாண்டு திட்டங்களிலும் 1966–67, 1967–68-ம் ஆண்டுகளிலும், தமிழக மின்சார வாரியம் அடைந்துள்ள முன்னேற்றமும், ஆற்றிய பணிகளும் வருமாறு :—

| வரிசை எண். | காலம். | மின்வசதி அளிக்கப்பட்ட கிராமங்கள்; குக்கிராமங்கள். | | மின்தொடர்பு கொடுக்கப் பட்ட பம்புசெட்டுகள். | | செலவு. (கோடியில்.) |
|---|---|---|---|---|---|---|
| | | இலக்கு. | சாதனை. | இலக்கு. | சாதனை. | ரூ. |
| 1. | முதல் திட்டம் .. .. | 1,250 | 1,900 | — | 18,000 | 10·26 |
| 2. | இரண்டாம் திட்டம் .. | 5,000 | 6,600 | 50,000 | 84,000 | 27·58 |
| 3. | மூன்றுவது திட்டம் .. .. | 8,000 | 11,000 | 100,000 | 1,33,000 | 37·20 |
| 4. | 1966–67 .. .. .. | 2,500 | 3,000 | 30,000 | 33,400 | 8·26 |
| 5. | 1967–68 .. .. .. | 2,600 | 3,210 | 40,000 | 51,746 | 11·74 |

1960–61-ம் ஆண்டு கணக்கெடுப்பின்படி இன்று தமிழகத்தில் 909,115 பாசனக் கிணறுகள் இருக்கின்றன. அவற்றில் 341,649 கிணறுகளில் பம்புசெட்டுகள் பொருத்தப்பட்டு, மின்சாரத்தால் இயங்குகின்றன. இது தவிர, தனியார் மின்சார நிறுவத்தினர் 1967–68-ம் ஆண்டில் சுமார் 2,000 பம்புசெட்டுகளுக்கு மின்சாரத் தொடர்பு அளித்துள்ளனர். மொத்த மினசாரத்தில் 23 சதவீதம் வேளாண்மைக்கே பயன்படுகிறது.

**21,000 கிராமத் தொழில்களுக்கு மின்வசதி.**

தமிழகத்திலுள்ள நகரங்கள், கிராமங்களில் 62 சதவீதத்திற்கு மின்சார வசதி அளிக்கப்பட்டுவிட்டது. இது மட்டுமன்றி 21,000 கிராமத் தொழில்களுக்கும் மின் வசதி செய்து தரப்பட்டுள்ளதும் ஒரு மகிழ்ச்சிக்குரிய செய்தியாகும்.

"**வே**ளாண்மை முன்னேற்றத்திற்கும், தொழில் முன்னேற்றத்திற்கும், மின்சாரத் திட்டங்களை ஊக்கமுடன் நிறைவேற்றிவருவது இன்றியமையாததென அரசாங்கம் உணர்ந்துள்ளது. மின்சாரத் திட்டங்களுக்காக 1968–69-ம் ஆண்டுத் திட்டத்தில் 32·17 கோடி ரூபாய் ஒதுக்கப்படுவதால், திட்ட நிறைவேற்றத்தில் காணப்படும் தற்போதைய விரைவு, செம்மையாகப் பேணி வரப்படும். இந்த முதலீடும், அவ்வாண்டில் நிறைவேறிவரும் பணியின் முன்னேற்றத்தையொட்டியும், தமது நிதிநிலையையொட்டியும், மேலும் உயர்த்தப்பட வேண்டியிருக்கும்......எனவே, வருகிற ஆண்டில் நமது மாநிலத்தில் கூடுதல் மின்சாரம் தேவையென்ற குரல் எங்கிருந்து கேட்கப்பட்டாலும், தமிழ்நாடு மின்சார வாரியம், அக்குரலுக்கு மதிப்புக் கொடுத்து, அதிக மின்சாரம் வழங்கும் நிலையில் இருக்கும் என்பதிலே ஐயமில்லை. நமக்குக்கிட்டும் நிதி வசதிக்குட்பட்டு. இந்த நிலையில் கிராம மின்சார வசதித் திட்டங்களுக்கு 6 கோடி ரூபாய் மட்டுமே நம்மால் வகை செய்ய முடிந்திருக்கிறது. 1965–66-லும், 1966–67-லும் இந்திய அரசு, கிராம மின்வசதித் திட்டங்களின் முக்கியத்துவத்தை உணர்ந்து, திட்டத்திற்குப் புறம்பாக சிறப்பு உதவி அளித்துள்ளது. உற்பத்தியைப் பெருக்குவதில், இறைவைப் பாசனத் திட்டங்கள் உடனடியாகப் பயன் தருகின்றன. எனவே இதனை மத்திய அரசு உணர்ந்து. அதற்கேற்ற கூடுதல் நிதி வசதியை அளிக்க முன்வரவேண்டும்."

[மாண்புமிகு முதலமைச்சர் திரு சி. என். அண்ணாதுரை—1968–69-ம் ஆண்டு நிதி நிலை உரை.]

தமிழகத்தில் மூன்று இடங்களில் கிராமத் தொழில்கள் திட்டம் செயல்பட்டு வருவது அனைவரும் அறிந்ததே. செங்கல்பட்டு மாவட்டத்திலுள்ள ஸ்ரீ பெரும்புதூர், சேலம் மாவட்டத்திலுள்ள ஓமலூர், திருநெல்வேலி மாவட்டத்திலுள்ள நாங்குநேரி, ஆகிய இடங்களில் இத்திட்டம் நன்முறையில் இயங்கி வருகிறது. இத்திட்டப் பகுதிகளில் ஏற்பட்டுள்ள வளர்ச்சியை விளக்குகிறது கீழ்க்கண்ட அட்டவணை :—

| வரிசை எண். | விவரம். | ஸ்ரீபெரும் புதூர். | ஓமலூர் திட்டப் பகுதி. | நாங்குநேரி திட்டப் பகுதி. |
|---|---|---|---|---|
| 1. | திட்டப் பகுதியிலுள்ள மொத்த கிராமங்கள், குக்கிராமங்களின் எண்ணிக்கை. | 857 | 1,397 | 934 |
| 2. | 1968–ம் ஆண்டு மே திங்கள் 1-ம் நாள் அன்றுடன் மின்வசதி அளிக்கப்பட்டுள்ள கிராமங்கள், குக்கிராமங்களின் எண்ணிக்கை. | 495 | 552 | 528 |
| 3. | மின்வசதி அளிக்கப்பட்டுள்ளதன் சதவீதம் .. .. | 58·/. | 40·/. | 56·5·/. |

மேற்கண்ட அட்டவணையிலிருந்து ஸ்ரீபெரும்புதூர் பகுதியில் 58 சதவிகித கிராமங்களுக்கும், ஓமலூர் பகுதியில் 40 சதவிகித கிராமங்களுக்கும், நாங்குநேரியில் 56·5 சதவிகித கிராமங்களுக்கும் மின்வசதி அளிக்கப்பட்டிருப்பது நன்கு தெளிவாகிறது.

**அரிசன குடியிருப்புகளுக்கு மின்வசதி.**

அரிசனங்கள் வாழும் குடியிருப்புகளுக்கு மின் வசதியை ஏற்படுத்தித் தருவதற்கு, மின்சார வாரியம், தனது, சிறப்பான கவனத்தைச் செலுத்தி வருகிறது. உண்மை ஆண்டுகளில், ஆண்டுதோறும் 300 அரிசன குடியிருப்புகளுக்கு மின்சார வசதி தரப்பட்டுள்ளது. 1967–68-ம் ஆண்டில் மட்டும் 443 குடியிருப்புகளுக்கு மின்சார வசதி அளிக்கப்பட்டுள்ளது. 1968–ம் ஆண்டு மார்ச் திங்கள் 31-ம் நாள் முடிவாக உள்ள ஆண்டுகளில், 2,700-க்கும் அதிகமான அரிசன குடியிருப்புகளில் மின்சார வசதி உள்ளன.

ஏற்கனவே மின்வசதி செய்து தரப்பட்டுள்ள கிராமங்களைச் சார்ந்திருக்கும் அரிசன குடியிருப்புகளுக்கு மின்வசதி அளிப்பதற்காக தமிழக அரசு ஆண்டொன்றுக்கு ரூ. 3 லட்சம் உதவித் தொகை அளித்தது. இத்தொகை 1967–68-ம் ஆண்டில, ரூ. 4 லட்சமாக உயர்த்தப்பட்டுள்ளது.

**அயராத பணி.**

தஞ்சை மாவட்டத்தில் உணவு உற்பத்தியை பன்மடங்கு பெருக்குவதற்கு தமிழக அரசு பற்பல மேன்மையான திட்டங்களை உருவாக்கி, செயல்படுத்தி வெற்றிகண்டு வருகிறதல்லவா? அவற்றிற்கு உறுதுணையாக மின்சார வாரியமும் தனது அயராத பணியை உற்ற நேரத்தில் ஆற்றத் தவறுவதில்லை. வடிமுனைக் குழாய்களுக்கும், கிணறுகளுக்கும் மின்சார வசதியை உடனே ஏற்படுத்திக் கொடுத்துள்ளது. மின்சார வாரியம் 1968-ம் ஆண்டு மார்ச் திங்கள் 31-ம் நாளில், 416 வடிமுனைக் குழாய்களுக்கும், 250 கிணறுகளுக்கும், மின் தொடர்பு அளிக்கப்பட்டுள்ளது.

| தஞ்சாவூர் மாவட்டம். | வடிமுனைக் குழாய்கள். | கிணறுகள். | கூடுதல். |
|---|---|---|---|
| 31—3—1967-ல். | 145 | 66 | 211 |
| 1967–68-ம் ஆண்டில். | 271 | 184 | 455 |
| 31—3—1968 அன்று. | 416 | 250 | 666 |

நிதி நிலைத் திட்டத்தில் 1968–69-ம் ஆண்டிற்கென ஒதுக்கப்பட்ட தொகை ரூ 6 கோடியாகும். இதைக்கொண்டு சுமார் 21,000 பம்பு செட்டுகளுக்கும், 1,700 கிராமங்களுக்கும் மின்வசதி செய்து தர இயலும். மேலும் ஏற்கனவே ரூ. 28 கோடிக்கு திட்டங்கள் அனுமதிக்கப்பட்டு செயல்படுத்தப்படவேண்டியுள்ளன. பம்பு செட்டுகளுக்கு மின்சார வசதி பெருமளவு தேவைப்படுகிறது. எனவே இவ்வாண்டில் 50,000 பம்பு செட்டுகளுக்கு மின் தொடர்பு கொடுக்க வேண்டுமென திட்டமிடப்பட்டுள்ளது.

**செயற்படவிருப்பவை :**

மேற்சொன்ன 50,000 பம்பு செட்டுகள், 3,000 கிராமங்கள், குக்கிராமங்கள் ஆகியவற்றிற்கு மின் வசதியளிக்க ரூ. 12·5 கோடி தேவைப்படும். இந்த நிதி நடப்பு ஆண்டிலேயே கிடைக்கும் என நம்பப்படுகிறது.

தஞ்சாவூர் மாவட்டத்தில் 1968–69 ஆண்டிலே 1,500 வடிமுனைக் குழாய், மற்றும் கிணறுகளுக்கு மின் வசதியளிக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது. இதற்கென ரூ. 75 லட்சம் தேவைப்படும். எனவே அதற்காக ஒரு தனிக் கடனை வழங்க அரசு இசைந்துள்ளது.

1968–69-ம் ஆண்டில் 350 அரிசன குடியிருப்புகளுக்கு மின்வசதி அளிக்கப்படும்.

## கிராம நலம்

**சந்தா விவரம்:**

ஆண்டு சந்தா 2 ரூபாய்.

ஓர் ஆண்டுக்கு குறைந்த சந்தா ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.

**தனிப்பிரதி விற்பனைக்குக் கிடையாது.**

**சந்தா அனுப்ப வேண்டிய முகவரி :**

மக்கள் தொடர்பு அதிகாரி,
கிராம வளர்ச்சி இயக்குநர் அலுவலகம்,
செயிண்ட் ஜார்ஜ் கோட்டை, சென்னை-9.



# ஆட்சிமொழி பயிற்சிமொழி பற்றி ஒரு விளக்கம்

திரு மு.ரா. பெருமாள் முதலியார்
தமிழ் வளர்ச்சி இயக்குநர், தமிழக அரசு.

1968-ம் ஆண்டு சனவரி மாதம் 23-ம் தேதி தமிழக வரலாற்றில் ஒரு மிக முக்கியமான நாள். அன்று தமிழக சட்ட மன்றப் பேரவையில், மொழிபற்றிய ஒரு முக்கியமான தீர்மானம் நிறைவேறியது. ஐந்தாண்டுகளுக்குள் அரசு அலுவலகங்களில் தமிழே ஆட்சி மொழியாக இருக்குமென்றும், புதுமுக வகுப்பு, பி.ஏ., பி.எஸ்.ஸி., வகுப்புகள் ஆகியவற்றில் தமிழே பயிற்சி மொழியாக இருக்குமென்றும் அந்தத் தீர்மானம் கூறுகின்றது. அந்த தீர்மானத்தைச் செயல்படுத்தத் தேவையான நடவடிக்கைகள் இப்போது எடுக்கப்பெற்று வருகின்றன. முன்னரே தொடங்கிய நடவடிக்கைகளை விரைவுபடுத்தியும், புதிய நடவடிக்கைகளை இப்போது எடுத்தும் தீர்மானத்திற்கான நோக்கங்களை நிறைவேற்ற அரசு முயல்கின்றது.

### எங்கும் தமிழ்–எல்லாம் தமிழ்

மாவட்ட நிலையிலுள்ள எல்லா அலுவலகங்களிலும் இப்போது தமிழே ஆட்சிமொழியாக இருக்கின்றது. துறைத் தலைமை அலுவலகங்களிலும் தமிழ்த் திட்டம் ஓரளவு செயல்பட்டு வருகின்றது. தலைமைச் செயலகத்தில் தமிழ் வளர்ச்சித்துறை செய்தி, விளம்பரத்துறை ஆகியவற்றில் தமிழே ஆட்சி மொழியாக இருக்கின்றது. ஏனைய துறைகளைப் பொறுத்தவரையில் பொது மக்களிடமிருந்து தமிழில் வரும் கடிதங்களுக்குத் தமிழிலேயே பதில் எழுத வேண்டுமென்ற நிலை இப்போது நடைமுறையில் இருக்கின்றது. இன்னும் ஓர் ஆண்டுக்குள் துறைத்தலைமை அலுவலகங்களில் முழுத்தமிழ்த்திட்டத்தை நடைமுறைக்குக் கொண்டுவர வேண்டுமென்று அரசு விரும்புகிறது.

கல்லூரிகளில் தமிழைப் பயிற்சி மொழியாக்கும் முயற்சி சில ஆண்டுகளுக்கு முன்னரே மேற்கொள்ளப் பட்டது. அம்முயற்சி குறிப்பிடத்தக்க அளவுக்கு வெற்றி பெறவில்லை. புகுமுக வகுப்பில் ஆங்கிலமே பயிற்சி மொழியாக இருந்த நேரத்தில் பி.ஏ. வகுப்பில் ஒருசில பாடங்களைத் தமிழில் கற்பிப்பதற்கு முயன்றதே அதற்குக் காரணமாகும். பள்ளியிறுதி வகுப்பு வரையில் தமிழிலேயே எல்லாப் பாடங்களையும் பயின்ற மாணவர்கள் புகுமுக வகுப்பில் விருப்பப் பாடங்களை ஆங்கிலத்தில் பயின்று, அதன் பின்னர் பி.ஏ. வகுப்பில் அவற்றை மீண்டும் தமிழில் பயில வேண்டுமென்னும் கோட்பாடு நடைமுறைக்கு ஒத்துவரக் கூடியதன்று. எனவே, 1968–ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 23–ஆம் தேதியன்று 'சட்டமன்றப் பேரவை நிறைவேற்றிய தீர்மானத்தை நடைமுறைக்குக் கொண்டு வருவதற்கு உண்மையான முயற்சிகளை செய்யும்வகையில், முதற்படியாக இவ்வாண்டு புகுமுக வகுப்பில் வரலாறு, பொருளாதாரம் போன்ற பாடங்களை மட்டுமன்றி, கணிதம் அறிவியல் முதலிய

**'தெருவெல்லாம் தமிழ் முழக்கம் செழிக்கச் செய்வீர்' என்று முரசறைந்தான் அமரகவி பாரதி. அவன் கண்ட கனவு இன்று நனவாகிக் கொண்டு வருகிறது. 'எங்கும் தமிழ்' எதிலும் தமிழ்' என்று பூரிப்புடனும் பெருமிதத்துடனும் பாராட்டத்தக்க வகையில் இன்று செயல்கள் நடைபெற்று வருகின்றன.**

**கோட்டையிலே இன்று தமிழன்னை கோலோச்சுகிறாள். ஆட்சி மொழி தமிழ்; அதுமட்டுமல்ல; கல்லூரிகளில் தமிழ பயிற்சி மொழியாக ஆக்கப்பட்டுள்ளது. "தமிழால் முடியுமா" என்று சந்தேகக் கண்களுடன் வினா எழுப்புவோருக்கு. இக்கட்டுரை நல்ல பதிலாகும். "கல்லூரிகளில் தமிழ் பயிற்சிமொழியாக" நிச்சயம் இருக்க முடியும், என்று அறுதியிட்டுக் கூறுகிறார், தமிழ் வளர்ச்சித்துறை இயக்குநர். தமிழக அரசின் மொழிக் கொள்புகயை மிகவும் அழகாக, தெளிந்த முறையில் எடுத்து விளக்கியுள்ளார். அனைவரும் படித்து விளக்கம் பெறவேண்டிய பயனுள்ள கட்டுரை இது— ஆசிரியர்.**

ஆண்டவனுக்கே தேவையென்றால்,
நமக்கில்லையா?

"ஆண்டவனையே எடுத்துக்கொள்ளுங்கள். பரா சிவனுக்கு இரண்டு குழந்தைகள் தான். ஒருவர் விநாயகர். மற்றொருவர் முருகர். குடும்பக் கட்டுப் பாடே வேண்டாம் என்று விநாயகர் திருமணத் தினின்று ஒதுங்கிவிட்டார். மற்றொருவரான முரு கருக்கு இரண்டு மனைவிகள். ஆனால் குழந்தை இல்லை. முருகனுக்கே குடும்பக் கட்டுப்பாடு தேவை யென்றால், நமக்குத் தேவையில்லையா? 20 ஆண்டுகளுக்கு கொஞ்சம் மனத்தை நிலைப்படுத்திக் கொள்ளுங்கள். நாட்டின் உற்பத்தியைப் பெருக்கி, தொழில் வளத்தை ஏற்படுத்தி, வருமானத்தை உயர்த்தி, வாழ்க்கைத் தரம் உயர்ந்து, வளர வேண்டியவைகள் வளர்ந்து செல்வம் பெருகினால், பிறகு குழந்தைச் செல்வத்தைக் கவனிக்கலாம்."

[மாண்புமிகு முதலமைச்சர் திரு சி. என். அண்ணாதுரை]

பாடங்களையும் தமிழிலேயே கற்பிப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருக்கின்றன.

புகுமுக வகுப்புக் கணித அறிவியல் பாடங்களுக்குத் தமிழில் இதுவரையில் பாடநூல்கள் வரவில்லை. எனவே, முதல் முயற்சியாக 15—8—1968 அன்று 10 நூல்கள் வெளியிடப்பட்டன.

### தவறான கருத்துக்களைப் போக்குவோம்

இந்த வெளியீட்டு விழாவில் ஆட்சி மொழி-பயிற்சிமொழி ஆகியவற்றைப்பற்றிப் பொது மக்களிடம் நிலவி வருகின்ற தவறான கருத்துக்களை ஆராய்ந்து அவர்களுக்கு இந்த விஷயத்தில் மன அமைதி தருவது இன்றியமையாதது. தமிழைப் பயிற்சிமொழியாக்குவதன் மூலம் ஆங்கிலத்தைப் புறக்கணிப்பதாகவும் நாளடைவில் அம்மொழிப் பயிற்சியை அறவே ஒழித்துவிடப் போவதாகவும் பொது மக்களில் சிலர் கருதுகின்றனர். மாணவர்களில் சிலரும் அவ்வாறே கருதுவதாகத் தெரிகின்றது. தமிழைக் கல்லூரிகளில் பயிற்சி மொழியாக்குவதென்றால், ஆங்கிலப் பயிற்சியை ஒழித்துவிடுவது என்று கருதுவது தவறாகும். புகுமுக வகுப்பிலும் பி.ஏ., பி.எஸ்ஸி. வகுப்புக்களிலும் மாணவர்கள் கற்கின்ற பாடங்கள் மூன்று பிரிவுகளாக இருக்கின்றன. பிரிவு—1: ஆங்கிலம்; பிரிவு—2: தமிழ் அல்லது வேறொரு மொழி; பிரிவு—3: விருப்பப் பாடங்கள். இப்போது எடுக்கப்படுகின்ற நடவடிக்கைகளின் மூலம் விருப்பப்பாடங்கள் தமிழில் கற்பிக்கப்பெறும். எப்போதும் போலவே மாணவர்கள் முதற்பிரிவில் ஆங்கில மொழியைப் பயில்வார்கள். இரண்டாம் பிரிவில் தமிழ் மொழியைப் பயில்வார்கள். ஆகவே தமிழகத்தில் ஆங்கிலமே ஒழிந்து போகுமென்ற அச்சம் காரணமற்றது.

### வேலைவாய்ப்புகள் குறையாது

தமிழே கல்லூரிப் பயிற்சி மொழியானால் தமிழகப் பட்டதாரிகளுக்கு வேலை வாய்ப்புகள் குறைந்துபோகுமென்று சிலர் கருதுகின்றனர். இதுவும் காரணமற்ற ஓர் அச்சமாகும். தமிழக அரசு அலுவலகங்களிலெல்லாம் தமிழே ஆட்சி மொழியாக இருக்கும் நிலை வருகின்றபோது அவ்வலுவலகங்களில் வேலை செய்வதற்குத் தமிழைப்பயிற்சி மொழியாகக்கொண்டு பட்டம் பெற்றவர்களைவிட அதிக தகுதியுடையவர்கள் வேறெவரும் இரார். எனவே, தமிழ்ப் பட்டதாரிகளுக்குத் தமிழகத்தில் வேலை வாய்ப்புகள் குறைந்துவிடுமென்று சொல்வது தவறாகும். வெளி மாநிலங்களில் தமிழகப் பட்டதாரிகளுக்கு வேலைவாய்ப்புக்கள் இல்லாமலே போய்விடுமோ என்று சில மாணவர்களும் பெற்றோர்களும் அஞ்சுகின்றனர். எல்லா மாநிலங்களிலும் அவ்வம் மாநில மொழியே ஆட்சி மொழியாக இருக்கவேண்டுமென்பது இன்றைய கோட்பாடு. எனவே தமிழகப்பட்டதாரிகளுக்கு வெளி மாநிலங்களில் வேலை வாய்ப்புக்கள் இல்லாமல் போகுமானால் அது தமிழகக் கல்லூரிகளில் தமிழைப் பயிற்சி மொழியாக்கியதால்தான் என்று சொல்ல முடியாது. இனி மைய அரசினர் அலுவலங்களிலும் பணித்தொகுதிகளிலும் தமிழகப்பட்டதாரிகளுக்கு வேலை வாய்ப்புக்கள் இல்லாமல் போகுமென்று நினைக்கின்றவர்கள் மிகப்பலர் இருக்கின்றனர். ஹிந்திமொழி வழங்காத மாநிலங்களெல்லாம், விரும்பினாலொழிய மைய அரசின் அலுவலகங்களில் ஆங்கிலமும் ஹிந்தியுடன் சேர்ந்து ஆட்சிமொழியாக இருக்குமென்பது நாடாளுமன்றம் நிறைவேற்றியுள்ள சட்டமாகும். தமிழகப் பட்டதாரிகள் முன்போலவே இனிமேலும் ஆங்கிலத்தை முக்கியமான பாடமாகப் பயில்வார்களாதலால் மைய அரசின் அலுவலங்களில் வேலை செய்வதற்கு அவர்களுக்கு எவ்வித தகுதிக்குறைவும் ஏற்படாது என்பது தெளிவு. மேலும் அரசின் வேண்டுகோளின்படியும் அது தருகின்ற பொருளுதவியோடும் தமிழகப்பல்கலைக் கழகங்கள் ஆங்கிலமொழிப்பயிற்சியின் தரத்தை மேலும் உயர்த்துவதற்கு வேண்டிய நடவடிக்கைகளை எடுத்து வருகின்றன. இவற்றையெல்லாம் சிந்தித்துப் பார்க்கின்ற பெற்றோரும் மாணவர்களும் தமிழ் பயிற்சிமொழியாவதை எதிர்க்கமாட்டார்களென்றும் அதனை உற்சாகத்துடன் ஆதரிப்பார்களென்றும் நாம் நம்பலாம். இன்றைக்கு இருக்கின்ற ஐயத்திற்கும் அச்சத்திற்கும் காரணம், பயிற்சிமொழி பற்றி நாம் போதுமான அளவு பேச்சிலும் எழுத்திலும் விளக்கம் கொடுக்காமல் இருப்பதேயாகுமென்று நான் கருதுகின்றேன்.

இனி, மாநில அரசு அலுவலர் தேர்வுக்கழகமும் (Madras Public Service Commission] மைய அரசு அலுவலர் தேர்வுக் கழகமும் (Union Public Service Commission) நடத்துகின்ற போட்டித் தேர்வுகளில் தமிழைப் பயிற்சி மொழியாகக் கொண்டு படித்து வருகின்ற தமிழகப பட்டதாரிகளுக்கு யாதேனும் இடைஞ்சல் இருக்குமா என்பதைப்பற்றி ஆராய்வது இன்றியமையாதது. இப்போது பி. ஏ. பி.எஸ்ஸி, பட்டதாரிகளுக்காகத் தமிழக அரசு அலுவலர் தேர்வுக் கழகம் நடத்துகின்ற போட்டித்

(41-ம் பக்கம் பார்க்கவும்.)



FDSEID 968




நாட்டுக்கு உணவளிக்க உதவும்
உழவுப் பெருங்குடி மக்களுக்கு
பன்னெடுங்காலமாய் பணிபுரிவது பாரி

ஈ. ஐ. டி.—பாரி லிமிடெட்
(இங்கிலாந்தில் இணைக்கப்பட்டது.
உறுப்பினர்களின் பொறுப்பு வரையறுக்கப்பட்டது.)
உர இலாகா, டேர் ஹவுஸ், மதராஸ்-1.

உரங்கள் ● பூச்சி நாசினிகள் ● வீரிய ஒட்டு விதைகள் ● ஸ்ப்ரேயர்கள் ● நிபுணத்துவம் மிக்க விவசாயத்துக்கான சேவை

விவசாயிகளுக்கு வேளாண்மை ஆண்டு முழுதும்
வேலை வாய்ப்பளிக்கும் முழுநேரத் தொழிலும் அல்ல

விவசாயத்தின் மூலம் கிடைக்கும்
வருமானமும் போதுமானதல்ல

கதரும் கிராமத் தொழில்களும்

விவசாயிகளுக்கு ஊதியத்துடன் கூடிய வேலை வாய்ப்பளிக்கின்றன.

- கதர் - கிராமத் தொழில்களை ஆதரிப்பது
- உணவு உற்பத்திக்கு உழைக்கும் கிராம மக்களுக்கு உதவுவதாகும்

தமிழ்நாட்டுக் கதர் - கிராமத் தொழில் ஆயத்தின்
நிறுவனங்களில் உற்பத்தி செய்யப் பெற்ற

• கதர் • கதர்ப்பட்டு • சோப் • தேன் • செக்கெண்ணெய் • தோல் பொருள்கள்
• பனைவெல்லம் • சர்க்கரை • மண்பாண்டம் • வார்ப்படங்கள் • பித்தளை, வெண்கலப் பாத்திரங்கள் • பனைப் பொருள்கள்—இன்னும்—

பற்பல கைநுட்பத் தொழில் பொருள்கள்

கதர்-கிராமத் தொழில் விற்பனை நிலையங்களிலும்

சென்னை "குறளகத்"தில் இயங்கும்

கதர்-கிராமத் தொழில் அங்காடியிலும்

விற்பனைக்கு உள்ளன.

வெளியீடு—

கதர்-கிராமத் தொழில் துறை,
2, சர் தேசிகாச்சாரி ரோடு, சென்னை-4

வானொலிப் பேச்சு :

# கூட்டுறவு மூலம் விவசாயக் கடன் பெறுவது எப்படி

நமது நாடு ஒரு பரந்த விவசாய நாடு. வேளாண்மைத் தொழிலையே பிரதானமாக நம்பி இருக்கும் நாடு. இத் தொழிலைச் செய்யும் விவசாயியை பற்றி ஒரு முதுமொழி உண்டு. அவன் பிறப்பதும் கடனில், வாழ்வதும் கடனில், இறுதியில் அவன் விட்டு செல்வதும் கடன். இது ஒரு வகையில் உண்மைதான். அவனது கடன் பளுவை நீக்காமல், அவனது பொருளாதார நிலை உயரமுடியாது. "கடன்பட்டான் நெஞ்சம்போல் கலங்கினான் இலங்கை வேந்தன்" என்ற கருத்திற்கு ஒப்பாக நம் நாட்டு விவசாயிகளின் நிலை இருந்தது. இக்கஷ்ட நிலையிலிருந்து விவசாயிகளை விடுவிக்க நாற்பது ஆண்டுகளுக்கு முன்னால் கூட்டுறவு நில அடமான வங்கிகள் அங்கொன்றும் இங்கொன்றுமாகத் தோற்றுவிக்கப்பட்டு தற்போது நம் தமிழகத்தில் வட்டத்திற்கு (தாலுக்கா) ஒன்றாக 106 பிரதம நில அடமான வங்கிகள் செயலாற்றி வருகின்றன. இவ்வங்கிகள் மூன்றாவது ஐந்தாண்டு திட்ட ஆரம்பக்காலம் வரை, விவசாயிகள் கொண்ட முன் கடனை அவர்கள் காட்டும் ஈட்டுச் சொத்துக்களின் பேரில் அவைகளைச் சட்ட பூர்வமாக பரிசீலனை செய்து, கடன்கள் வழங்கப்பட்டு வந்திருக்கின்றன. அவ்விதம் பரிசீலனை செய்யும்போது, விவசாயிகளினால் நில அடமான வங்கியார் கோரும் மூலப் பத்திரங்கள் தாக்கல் செய்வது பெரும்பாலும் கஷ்டமாக இருந்ததால், அவர்களுக்கு வங்கியிலிருந்து கடன் கிடைப்பதில் காலதாமதம் ஏற்பட்டிருக்குமே தவிர, வங்கியிலிருந்து கடன்பெற்று, அதன் மூலம் தங்களது சொத்துக்களையும், பொருளாதார நிலையையும் சீர் செய்து கொண்ட விவசாயிகள் ஏராளம்.

## விவசாயிகள் அறிய வேண்டியது என்னென்ன ?

நம் நாடு விவசாய நாடாக இருந்தபோதிலும், உணவுப் பொருள் விளைச்சலில் தன்னிறைவு பெற்று விளங்கவில்லை என்பதோடல்லாமல், பிற நாட்டினரையும் கையேந்தி நிற்கின்ற அவல நிலை இருந்து வருகிறது என்பது வெள்ளிடைமலையாகும். இதை உணர்ந்த நமது இந்தியப் பேரரசு, விவசாய வளர்ச்சிக்கும் பெருக்கத்திற்கும் தேவையான பண வசதியை விவசாயிகளுக்கு நீண்ட காலக்கடனாக விரைவில், மிகவும் எளிதில் வழங்கத் தீர்மானித்து, இப்பணியை கூட்டுறவு நில அடமான வங்கியில் ஒப்படைத்திருக்கிறது. நம் தமிழக அரசு விவசாயிகளுக்கு, மிக எளிதில், விரைவில் நில அபிவிருத்திக் கடன்கள் கிடைப்பதற்கு, நில அடமான வங்கி சட்ட திட்டத்தில் பெரும் மாற்றங்கள் செய்திருக்கிறது. இதன்படி நில அடமான வங்கியில் கடன் பெற விரும்பும் விவசாயி தெரிந்துகொள்ள வேண்டியது என்ன என்பதைப் பார்ப்போம்.

எந்தெந்த காரியங்களுக்காக நில அடமான வங்கியில் கடன் பெறலாம் ?

புதுக்கிணறு வெட்ட, பழைய கிணறை ஆழப்படுத்த, நீரேற்ற யந்திரங்கள் நிறுவ, இயந்திரக் கலப்பை வாங்க, கழனிதிருத்த, வடிமுனைக் கிணறு, குழாய்க் கிணறு, அமைக்க

மேற்சொன்னக் காரியங்களுக்கு ஒரு விவசாயி ரூ. 40,000 வரை கடன் பெறலாம்.

கடன் வாங்கப்பட்ட காரியத்திற்கு அனுசரணையாக இருக்கவேண்டுமாகையால் பம்புசெட் வாங்கிப்பொருத்துவதற்கும், கிணறு ஆழப்படுத்துவதற்கும் டிராக்டர் வாங்கவும், 10 வருடத் தவணையிலும் புதிய கிணறு எடுப்பதற்கு 15 வருடத் தவணையிலும் எட்டேகால் சதவிகித வட்டியில் கடன் வழங்கப்படுகிறது.


திரு பி. பி. கே. இராஜா சிதம்பரம்,
துணைத் தலைவர், மாநில அடைமான வங்கி.




## விவசாயி செய்யவேண்டியது என்னென்ன ?

கடன்கோரும் விவசாயி செய்யவேண்டியது என்ன? முதலில் அந்தந்த வட்டாரத்தில் உள்ள நில அடமான வங்கியில் ரூ. 10-50 செலுத்தி அங்கத்தினராகப் பதிவு செய்து கொள்ள வேண்டும். அங்கத்தினர்களாகச் சேர விரும்பும் நமூனாவை அந்த அந்த வட்டார வளர்ச்சி அலுவலகத்திலிருந்தோ, அல்லது சம்பந்தப்பட்ட நில அடமான வங்கிகளிலிருந்தோ இலவசமாகப் பெற்றுக்கொள்ளலாம்.

புதிய கிணறுகள் வெட்டுதல், பம்புசெட் யந்திரங்கள் அமைத்தல் போன்ற காரியங்களுக்காக கடன் பெற விரும்பும் விவசாயிகள் அந்தந்த வட்டார வளர்ச்சி அலுவலகத்திலிருந்து கடன் மனு நமூனாக்கள் பெற்று, தனது சொத்து சம்பந்தமான கிரைய, மூல ஆவணங்களை அத்துடன் இணைத்து, வட்டார வளர்ச்சி கூட்டுறவு அதிகாரியிடம் கொடுக்க வேண்டும். ஈடுகாட்டப்படும் சொத்து சம்பந்தமான கிராமக் கணக்கு பிள்ளையிடம் பெற வேண்டிய தகவல்களை அந்தந்த வட்டார வளர்ச்சி அதிகாரியோ அல்லது கிராம நல ஊழியர்களோ பெற்று மேல் நடவடிக்கை எடுப்பார்கள். ஈடு காட்டப்படும் நிலங்களுக்கு 13 வருடங்களுக்கு விஸ்தரிப்பு அதிகாரியே வில்லங்க சான்றிதழ்கள் பெறுவார்கள். கடன் தொகை ரூ. 5,000 வரை வில்லங்க சான்றிதழ் இலவசமாகப் பெறலாம். கடன்தொகை ரூபாய் 5,000-க்குமேல் வில்லங்க கட்டணம் ரூ. 22-50 மட்டும் செலுத்தினால் போதும். சான்றிதழ்களில் காணப்படும் வில்லங்கம் சம்பந்தமான ஆவணங்களையும் மனுதார் விஸ்தரிப்பு அதிகாரிகளிடமே கொடுக்கவேண்டும். அதன்பின் அடமானம் காட்டப்படும் நிலங்களைக் கூட்டுறவு விஸ்தரிப்பு அதிகாரியே பார்வை இட்டு நிலமதிப்பீடு செய்கிறார். நில மதிப்பீடு செய்வதில் ஈடு காண்பிக்கும் நிலங்கள் உள்ள கிராமத்தில் கடன் மனு தேதிக்கு முன் ஐந்து ஆண்டுகளில் சராசரி கிரைய மதிப்பில் 70 சத விகிதம் கடன்கள் வழங்க சிபாரிசு செய்கிறார். அவ்விதம் தகவல் இல்லாவிடில் பக்கத்துக் கிராமத்தில் உள்ள ஈடுகாண்பிக்கும் நிலத்தின் தரத்தை ஒத்த நிலங்களின் கிரைய மதிப்பை ஆதாரமாகக்கொண்டு மேல் கண்ட சத விகிதத்தில் கடன் தொகை சிபாரிசு செய்யப்படுகிறது.

புதிய கிணறு வெட்ட, பம்புசெட் வாங்க கடன் கோரும் விவசாயிகளுக்குப் போதிய அளவு, சொத்து மதிப்பு இல்லாமல்போனால் அபிவிருத்திக்குப் பிறகு சொத்தின் மதிப்பு எவ்வளவு இருக்குமோ அதையே ஆதாரமாகக் கொண்டு கடன் வழங்கப்படுகிறது.

கிணறு வெட்டுவதற்கான மதிப்பீட்டை அந்தந்த வட்டார வளர்ச்சி அலுவலகத்திலுள்ள இளநிலை பொறியாளரிடமிருந்து பெறுவதற்கு ஏற்பாடு செய்யப்பட்டு இருக்கிறது.

"மிகு பயன்தரும் தானிய வகைத் திட்டமும் பாசனவசதிகளைப் பெருக்கும் திட்டமும், ஒன்றோடொன்று இணைந்து செயல்பட வேண்டுமென்றும், குறிப்பாக, ஒருபோகநன்செய் நிலங்களை இருபோக நன்செய் நிலங்களாக மாற்றுவதற்கு நாம் முனைந்து செயல்பட வேண்டுமென்றும் அரசு உணர்கிறது, இதற்காக இறைவைப் பாசனத்திற்குரிய வசதிகளை விரிவுப்படுத்த வேண்டியிருக்கும். இந்த நிலையில், கிணறுகள், துளைகிணறுகள், வடிமுனைக் குழாய்க் கிணறுகள் இவற்றைத் தோண்டும் திட்டங்களும், விசை யேற்றங்களை நிறுவும் திட்டங்களும் சிறப்பான இடம் பெறுகின்றன. ரிசர்வ் வங்கியும், ஆயுள் காப்புறுதிக் கழகமும், வர்த்தக வங்கிகளும் இப்போது வேளாண்மை உற்பத்தித் திட்டங்களுக்குப் பெருமளவில் கடன் வழங்க முன்வருகின்றன. ஆயினும் இந்த நிறுவனங்களிடமிருந்து பெறும் கடன் உதவி, கூட்டுறவுத் துறையின் மூலமாகவன்றி, அரசிற்கு நேரடியாகக் கிட்டாது....

....அடுத்த ஆண்டில் சிறுபாசனத் திட்டங்களுக்குக் கடன் வழங்கல் பற்றி, சில பெரிய கொள்கை முடிவுகளை நாம் எடுத்துள்ளோம். அரசு இப்போது செய்துள்ள முறைப்படி, கிணறுகள் தோண்டுவதற்கும், விசையேற்றங்கள் அமைப்பதற்கும் வழங்கப்படுகிற புதிய கடன்கள், நில அடைமான வங்கிகளின் வாயிலாகவே கிடைக்கும். இதைப் போலவே, விரைவில், செவ்விய முறையில் செயல்பட இருக்கும் வேளாண்மைத் தொழிற் கழகம், விசையேற்றங்களையும், டிராக்டர்களையும் தவணைக் கொள்முதல் அடிப்படையில் வழங்குவதற்குப் பொறுப்பேற்கும்....

....நில அடைமான வங்கிகளின் மூலமாகவும், வேளாண்மைத் தொழிற் கழகத்தின் மூலமாகவும் கிட்டும்படி செய்துள்ள உதவித் தொகை உட்பட, உழவர்களுக்குக் கிடைக்கும் உதவித் தொகை எந்த வகையிலும் குன்றாது—குறையாது. அதற்கு மாறாக, சிறுபாசனத் திட்டங்களுக்கென உழவர் பெருமக்களுக்குக் கிடைக்கும் கடன் உதவி கணிசமான அளவிற்கு உயரும்."

[மாண்புமிகு முதலமைச்சர் திரு சி. என் அண்ணாதுரை. 68–69 நிதி நிலை உரையிலிருந்து.]

# கவனிக்கவும் -
# யானை டிரேட் மார்க்

## யானை டிரேட் மார்க், உர மூட்டைகளில் இருக்கிறதா என்று கவனித்து வாங்கவும்

*பாக்ட் கம்பெனியாரின்*
*உரத் தயாரிப்புகள்*

**பாக்டம்பாஸ்**
(அமோனியம் பாஸ்பேட் 16 : 20)

**அல்ட்ராபாஸ்**
(மிகவும் பொடியாகத் தூளாக்கப்பட்ட மினரல் பாஸ்பேட்)

**அமோனியம் ஸல்பேட்**

**சூப்பர்பாஸ்பேட்**

**N.P.K. கலப்பு உரங்கள்**

FACT

**பாக்ட்** ...யானை மார்க் உரங்கள்

பெர்டிலைஸர்ஸ் அண்டு கெமிகல்ஸ் திருவிதாங்கூர் லிமிடெட்
பதிவு காரியாலயம்: ஏலூர், உத்யோகமண்டல், P. O. கேரள ராஜ்யம்
பிராந்திய அலுவலகம்: 2வது மாடி 19, கமாண்டர்-இன்-சீப்ரோடு எழும்பூர் சென்னை

Criterion-FT-2004 A


**எளிய முறைகளில் தீர்வு :**

நிலைமதிப்பீடு செய்தபின் கடன் மனுவை சிபாரிசு செய்து சம்பந்தப்பட்ட பிரதம நில அடமான வங்கிகளுக்கு அனுப்பி வைக்கிறார். அவ்விதம் வந்த கடன் மனுக்களுக்கு பிரதம நில அடமான வங்கியின் சட்ட ஆலோசகர் அபிப்பிராயம் பெறப்படும். அதன்பின் வங்கித் தலைவர் அவர்கள் கடன்மனுக்களை அநுமதி செய்கிறார். அதையடுத்து அந்தக் கடன் மனுக்களை சென்னை கூட்டுறவு மத்திய நில அடமான வங்கியின் ஒப்புதலுக்கு அனுப்பி வைக்கிறார். ஒப்புதல் பெறும் காலத்தை குறைக்கும் பொருட்டு சென்னை கூட்டுறவு மத்திய நில அடமான வங்கியார் ஒவ்வொரு மாவட்டத்திற்கும் தனித்தனியே கிளை அலுவலகங்கள் நிறுவி செயலாற்றி வருகின்றார்கள். கடன் வழங்கும் ஒப்புதல் கிடைத்தவுடன், மனுதாரரிடமிருந்து அடமான கடன் பத்திரம் பதிவு செய்து வாங்கப் படுகிறது. இதற்கு பத்திர ஸ்டாம்பு செலவு கிடையாது. பத்திரங்களை பதிவு செய்வதிலும் ரூ. 5,000 வரை பாதிக் கட்டணமும் அதற்குமேல் உள்ளவைகளுக்கு முழு கட்டணமும் செலுத்தவேண்டும். அதன்பின் இரண்டொரு தினங்களில் கடன் வழங்க ஏற்பாடு செய்யப்படுகிறது.

மனுதார் பிரதம நில அடமான வங்கியிலிருந்து பணம் பட்டுவாடா பெறும் சமயத்தில், பங்குத் தொகைக்காக கடன்தொகையில் ரூ. 100-க்கு ரூ. 2 வீதம் செலுத்த வேண்டும். இத்துடன் வங்கியின் நிர்வாகக் கட்டணம், கடன்தொகை அடிப்படையில் ரூ. 1,000-க்கு ரூ. 2 வீதம் செலுத்தவேண்டும். ஆனால் செலுத்த வேண்டிய அதிகபட்ச ரூ. 25 ஆகவும், குறைந்தது ரூ. 5 ஆகவும் இருக்கும். இதே அளவில் சட்ட ஆலோசனைக் கட்டணமும ரூ. 1,000-க்கு ரூ. 2 வீதம் செலுத்த வேண்டும்.

**கருவிகள் வாங்க உதவி:**

கிணறுவெட்ட அநுமதி செய்யப்பட்ட கடன்தொகையை மூன்று தவணைகளில் 40:30:30 என்ற விகித அடிப்படையில் பணம் பட்டுவாடா செய்யப்படும். இரண்டாவது மூன்றாவது தவணைகள் பட்டுவாடா செய்யுமுன் ஏற்கனவே கொடுத்த கடன் முழுமையும் பயன்படுத்தப் பட்டிருக்கின்றனவா என்பதை அதிகாரிகள் பார்வையிடுவார்கள். அவ்விதம் பூர்த்தி செய்யப்பட்ட புதிய கிணறு திட்டப்படி வெட்டும் மனுதாரர்களுக்கு கடன்தொகையில் ரூ. 100-க்கு 25 என்ற விகிதத்தில் ரூ. 500-க்கு மேல் படாமல் மான்யமாக வழங்கப்படும். மேற்படி மான்ய தொகை கடன் நிலுவையில் வரவு வைத்துக் கொள்ளப் படும்.

பம்புசெட் ஏனைய விவசாயக் கருவிகள் வாங்குவதற்கு அநுமதி செய்யப்பட்ட கடன்தொகை நேரடியாக சம்பந்தப் பட்ட கம்பெனிகளுக்கே கொடுக்கப்படும். மேற்படி விவசாயக் கருவிகள் மனுதாரர் விருப்பப்படி அவரவர்கள் விரும்பும் கம்பெனிகளிடமிருந்து வாங்கிக் கொள்ளலாம்.

கிணறுவெட்ட, பம்புசெட் அமைத்தல் போன்ற காரியங்கள் தவிர, ஏனைய காரியங்களுக்கு கடன்பெற விரும்பும் விவசாயிகள் நேராகவே சம்பந்தப்பட்ட பிரதம நில அடமான வங்கிகளில் கடன் மனு செய்யலாம்.

[வானொலிப் பேச்சு—13–8–68].






வேளாண்மையில் புதுமையை, புத்துணர்ச்சியை, புரட்சியை விளைவித்தது, சென்ற ஆண்டு. உணவு உற்பத்தியை பன்மடங்கு பெருக்கியதும் சென்ற ஆண்டே. ஒருபோக விளைச்சல் நிலங்கள் இருபோகங்களாகவும், இருபோக நிலங்கள் முப்போக நிலங்களாகவும் மாற்றப்பட்டு மிகு விளைச்சல் காணப்பட்டது. நமக்கிருக்கும் நீர்ப்பாசன வசதிகள் அனைத்தும், முழுவதுமாக பயன்படுத்தப்பட்டதும் சென்ற ஆண்டில் தாம்.

பன்முறை சாகுபடித் திட்டம் நல்ல விளைச்சலைத் தந்துள்ளது. சுமார் 72 லட்சம் ஏக்கர் நிலங்கள் இத்திட்டத்தில் செயல்படுத்தப்பட்டுள்ளன. அடுத்த ஆண்டில் மேலும் 1.5 கோடி ஏக்கர் நிலத்திலும் அதற்கடுத்த மூன்று ஆண்டுகளில் 3 கோடி ஏக்கர் நிலத்திலும் அத்திட்டம் விரிவுபடுத்தப்படவிருக்கிறது.

## தமிழகத்தின் ஆர்வம்

இப்பன்முறை சாகுபடித் திட்டத்திற்கு, மாநில அரசுகளிடையே நல்ல வரவேற்பும் ஆர்வமும் உள்ளன. தீவிர உழவர்களும் இதை உளமார வரவேற்கின்றனர். தமிழகமும், ஆந்திர மாநிலமும் இப்பன்முறை விளைச்சல் திட்டத்திற்கு பெரிதும் முக்கியத்துவம் அளித்து, பெருமளவில் இத்திட்டத்தை செயல்படுத்திவாகை சூடியுள்ளன.

தஞ்சைத் தரணியிலே சம்பா சாகுபடியாகும் 9 லட்சம் ஏக்கர் நிலங்களில் இரண்டு லட்சம் ஏக்கர் நிலத்திற்கும் மேற்பட்ட ஏக்கர்கள் இருமுறை சாகுபடித் திட்டத்தின்கீழ் கொண்டுவரப் பட்டுள்ளன. அதிசய நெல் ஏ.டி.டி.-27 ரகத்தைக் கொண்டு, தஞ்சை மாவட்டத்தில் உற்பத்தி பன்மடங்காகப் பெருகியுள்ளது.

## புதியதோர் திட்டம்

பன்முறை விளைச்சல் திட்டத்தை மேற்கொள்ள அரியானா, குஜராத், மகாராஷ்டிரா மாநிலங்களும் முயற்சியெடுத்துக் கொண்டுள்ளன.

இவ்விளைச்சல் திட்டத்தை குறுகிய கால பயிர்களுக்கே செயல்படுத்துவது என்று தீர்மானிக்கப்பட்டது. அவற்றில் நெல், மக்காச்சோளம், சோளம், கம்பு, கோதுமை பயிர்கள் அடங்குவன. ஆனால், அண்மையில் பார்லி, ராகி, எண்ணெய்வித்துக்கள், உருளைக்கிழங்கு, காய்கறிகளும் சேர்த்துக்கொள்ளப்பட்டுள்ளன.

சிறு சேமிப்புத் திட்டத்தில் புல்தானு மாவட்டம் (மகாராஷ்டிரா மாநிலம்) சிறப்புற்று விளங்குகிறது. இம்மாவட்டத்தில் நடைபெற்ற சிறுசேமிப்பு இயக்கம் பெருமளவில் வெற்றியைத் தேடித் தந்துள்ளது. இம்மாவட்டத்தில் மட்டும் 21 லட்சம் ரூபாய் சிறுசேமிப்பிற்கென திரட்டப் பெற்றுள்ளது. இது தவிர, பல்வேறு சிறு சேமிப்பு முதலீடுகளில் 60 லட்சம் ரூபாய்களை புல்தானு மக்கள் முதலீடு செய்துள்ளனர் என்பது மிக்க மகிழ்ச்சி தரும் ஒரு செய்தியாகும். இத்தொகைகளை வெறும் புள்ளி விவரங்கள் என்ற அளவிலேயே எண்ணுவதைத் தவிர்த்து, மக்களிடையே ஏற்பட்டுள்ள சிறு சேமிப்பு உணர்ச்சியை சீர்தூக்கிப் பார்ப்பது சாலச் சிறந்ததாகும்.

**1966-67-**ம் ஆண்டில் மட்டும் இம்மாவட்டத்தில் 10,000 அஞ்சலக சேமிப்புக் கணக்குகளையும், 2,000 வளரும் சேமிப்புத் தொகை கணக்குகளையும் தொடங்குவதென திட்டமிடப்பட்டது. மக்களின் ஒத்துழைப்பும், ஆர்வமும் பெருமளவில் இருந்ததனால், திட்ட இலக்கைவிட 350 சதவீதம் அதிகமாகவே சாதனை கிடைத்தது. அவ்வாண்டின் இறுதியில் 35,152 அஞ்சலக கணக்குகள் தொடங்கப்பட்டதுடன், 7,727 வளரும் சேமிப்புத் தொகை கணக்குகள் ஆரம்பிக்கப்படலாயின.

1966-67-ம் ஆண்டின் சாதனை இம்மாவட்டத்திற்கே ஓர் அரிய வெற்றியென எண்ணினால், அடுத்த ஆண்டில் அடைந்துள்ள வளர்ச்சி ஒரு மாபெரும் முன்னேற்றமாகும்.

1966-67-ம் ஆண்டில், 12,000 அஞ்சலகக் கணக்குகளும் 1,500 வளரும் சேமிப்புத் தொகை கணக்குகளும் தொடங்குவதற்கு ஆவன செய்யவேண்டுமென்று தீர்மானிக்கப்பட்டது. ஆனால் ஆண்டின் இறுதியில் 56,026 அஞ்சலகக்கணக்குகள், 6,757 வளரும் சேமிப்புத் தொகை கணக்குகளும் தொடங்கப்பட்டிருந்தன. இது திட்டஇலக்கைவிட 450 சதவீதம் கூடுதலான முன்னேற்றமாகும்.

**"சேமிப்பு மாவட்டம்"**

இவ்வரிய வெற்றிக்குக் காரணம், சேமிப்பு இயக்க அலுவலர்களின் தளராத உழைப்பும் மக்களின் ஒன்றுபட்ட ஒத்துழைப்புமே யாகும் என்பது வெளிப்படை. மாவட்டம் முழுவதையும் "சேமிப்பு மாவட்டமாக" மாற்றுவதே, திட்டத்தின் அடித்தள நோக்கமாகும். அது விரைவில் நிறைவேறலாம்.

இம்மாவட்டத்திலுள்ள கிராமங்கள் அனைத்தும் ஒன்றையொன்று போட்டியிட்டுக்கொண்டு, சேமிப்புத் துறையில் முன்னேறுகின்றன. ஒவ்வொரு கிராமமும், "சேமிப்பு கிராமம்" என்ற விருதைப் பெற பெரிதும் ஆர்வம் காட்டுகின்றன. இம்மாவட்டத்திலுள்ள 1224 கிராமங்களில், 328 கிராமங்கள் "சேமிப்பு கிராமங்கள்" என்ற விருதைப் பெற்றுவிட்டன.

**சேமிப்புத் திட்டத்தில் போட்டி மனப்பான்மை**

கிராமங்கள் மட்டுமே இதில் போட்டியிடுகின்றன என்று கொள்வதற்கில்லை. சமிதிகளும் ஒன்றையொன்று முந்திக்கொண்டுவிடுகின்றன. மோடலா, சீகான் என்ற இரு ஊராட்சி சமிதிகள் முழுவதுமே சேமிப்பு இயக்கத்தில் பங்கு பெற்றுள்ளன.

மோடலா ஊராட்சி சமிதியிலுள்ள 14,273 குடும்பங்களும், சீகான் ஊராட்சி சமிதியிலுள்ள 17,220 குடும்பங்களும் சிறுசேமிப்பு திட்டத்தில் பங்கு பெற்றுள்ளன.

**"சேமிப்பு நகரங்கள்"**

நகரங்களும் இத்திட்டத்தில் பின்னடைவதில்லை. நந்துரா, டியூல்கான், மெஹகார், சீகான் ஆகிய நான்கு நகரங்களும் 'சேமிப்பு நகரங்கள்' என அழைக்கப்படுகின்றன.

இரு ஊராட்சி சமிதிகளை, சிறு சேமிப்புத் திட்டத்தில் முதன் முதலில் கொண்டு வந்த பெருமை புல்தானா மாவட்டத்தையே சாரும் என எளிதில் கூறலாம்.

**மக்களின் ஆர்வம்**

அதிகாரிகளின் ஒருங்கிணைந்த முயற்சி, மாவட்ட பரிஷத்தின் உற்சாகம் இதற்கு உறுதுணையாக இருந்தும், மக்கள் இத்திட்டத்திற்கு காட்டிய ஊக்கமும், அதில் தாமாகவே பங்கு பெற முன்வந்த அவர்களின் ஆர்வமுமே இத் திட்டம் பெருமளவில் வெற்றியடைந்ததற்கு சிறப்பான காரணங்களாகும்.




# சீரிய பணியாற்றும் நகராட்சிகள்

## விழுப்புரம் நகராட்சி

### முன்னோடி குடிநீர்த்திட்டம்

இந்நகராட்சியில் குடிநீர் வசதிக்கு வீட்டுக்கிணறுகளும், நகராட்சிப்பொதுக் கிணறுகளும் இருக்கின்றன. இருப்பினும் அவை பாதுகாக்கப்பட்ட இனிய நீர் அன்று. எனவே மக்கட்கு பாதுகாக்கப்பட்ட குடிநீரின் அவசியத்தை, இந்த நகராட்சி மன்றம் உணர்ந்து, பாதுகாக்கப்பட்ட நீரளிப்புத் திட்டத்தை இந்நகருக்கு ஏற்படுத்த ஆய்வு வேலைகளை மேற்கொள்ளுமாறு அரசினரை வேண்டிக்கொண்டது. அதற்கிணங்க ஆய்வு வேலை 1959-ம் ஆண்டு அனுமதிக்கப்பட்டு, 1960-ம் ஆண்டு தொடங்கி முடிக்கப்பட்டது. பின்னர் இந்நகருக்கு நீரளிப்பு திட்டத்தை அரசினர் அனுமதித்தனர்.

இந்நீரளிப்பு திட்டத்தின் மதிப்பீடு ரூ. 34.07 லட்சம் ஆகும். 1967-68-ம் ஆண்டு, 1968 மார்ச் மாதம் முடிய இந்நீரளிப்பு திட்டத்திற்கு கீழ்க் குறிப்பிட்டுள்ளவாறு ரூ. 28,67,150 செலுத்தப்பட்டுள்ளது.

| | | |
|---|---|---|
| 1. | நகராட்சி நிதியிலிருந்து | 2,59,150 |
| 2. | அரசினரிடமிருந்து கடனைப் பெற்று செலுத்தியுள்ளது | 26,08,000 |
| | | 28,67,150 |

இந்நகருக்கருகிலுள்ள பெண்ணையாற்றிலிருந்து நீர் அளிக்க வழிவகை செய்யப்பட்டுள்ளது. இத்திட்டம் 1966-ல் இந்நகரில் எதிர்பார்க்கப்படும் மக்கட் தொகையான 80,000 நபருக்கு நாளொன்றுக்கு 15 காலன் வீதம் வழங்கக்கூடியதாகத் தயாரிக்கப்பட்டுள்ளது. இத்திட்டம் விரைவில் முடிவடையும் தருவாயிலுள்ளது.

இத்திட்டத்தின் பணிகள் ஓரளவு முன்னேற்றம் கண்டபோது மக்கள் உடனடியாக அதன், பயனைப்பெற முன்னோடித் திட்ட மொன்றை அமைக்க அரசினர் அனுமதி மன்றத்தால் கோரப்பட்டது. அரசும் ரூ. 20,300 செலவில் இத்திட்டத்தை அமைக்க உத்தரவிட்டது.

இத்திட்டப்பணிகள் அனைத்தும் முடிக்கப்பெற்று, 1968-ம் ஆண்டு ஜூலை மாதம் 3-ம் தேதி அன்று தமிழக அரசு மாண்புமிகு கல்வி, தொழில்துறை அமைச்சர் திரு இரா. நெடுஞ்செழியன் அவர்களால் துவக்கி வைக்கப்பட்டது.

இத்திட்டத்தின்படி குடிநீர் விநியோகக் குழாய்களின் மூலம் நகரில் பல்வேறு பகுதிகளில் கட்டப்பட்டிருக்கும் 40 குடிநீர் குழாய்கள் மூலம் பொது மக்களுக்கு நீர் விநியோகிக்கப்பட்டு வருகிறது. இத்திட்டத்தின் மூலமாகவும் அடுத்து முடிவு பெறவிருக்கும் பெரும் திட்டத்தின் மூலமாகவும் இந்நரகமானது சுகாதாரத்திலும் தொழில் முன்னேற்றத்திலும் வர்த்தக வளர்ச்சியிலும் மேம்பாடு அடையும் என உறுதியாக நம்பலாம்.

### 2. பயணி விடுதிக் கட்டிடத் திறப்பு விழா

இந்நகராட்சியால் நான்கு அறைகள் கொண்ட பயணி விடுதி ஒன்று நல்ல முறையில் பராமரிக்கப்பட்டு வருகிறது. இந்நகர் சென்னைக்கும், திருச்சி, மதுரை முதலான வைகளுக்கும் நடுவே அமைந்துள்ளதால், இந்நகராட்சி பயணி விடுதி பெரிதும் விரும்பப்படுகிற அளவில் உள்ளது. அத்துடன் உபயோகிப்போரின் தேவையும் பெருகி வரலாயிற்று. பெருகிவரும் இத்தேவையைப் பூர்த்திசெய்யும் வகையில் மதிப்பீட்டுச் செலவு ரூ. 8000-ல் இரு அறைகள் கொண்ட ஒரு புதுக்கட்டிடம் இம்மன்றத்தால் கட்டி முடிக்கப்பட்டது. அதனை 1968-ம் ஆண்டு ஜூலை மாதம் 3-ம் தேதி அன்று தமிழக அரசு மாண்புமிகு வேளாண்மைத்துறை அமைச்சர் திரு ஏ. கோவிந்தசாமி அவர்கள் திறந்துவைத்தார்.

## கடையநல்லூர் நகராட்சி

(திருநெல்வேலி மாவட்டம்)

கடையநல்லூர் நகராட்சி முத்துக்கிருஷ்ணபுரம் முத்தாரம்மன் கோவில் தென்வடல் தெருவில் பொது மக்கள் போக்குவரத்திற்கு வசதி செய்து கொடுக்க சுமார் ரூ. 1,500-செலவில் விரி சுவர் கட்டப்பட்டது. கலந்தர் மஸ்கான் தெருவில் பொதுமக்கள் போக்குவரத்திற்கு வசதி செய்து கொடுக்க சுமார் ரூ. 845-செலவில் ஓடையை பழுது பாத்து செப்பனிடப்பட்டது. இந்நகரில் சில முக்கியமான சந்திப்பு உள்ள இடங்களில் இரவு காலங்களில் பொதுமக்கள் போக்குவரத்திற்கு இடைஞ்சல் இல்லாத நிலைமையில் புதிதாக 53 மின்சார விளக்குகள் அமைத்து வசதி செய்து கொடுக்கப்பட்டுள்ளது.

## திருவள்ளூர் நகராட்சி

திருவள்ளுவர் நகராட்சி இயற்றிய தீர்மானத்தில் 1968-69-ம் ஆண்டிற்கு நீரளிப்பு முன்னோடி திட்டத்திற்கு பொது சுகாதார பொறியியல் இலாக்காவினரால் பராமரிக்கும் செலவை ஏற்றுக்கொள்ளத் தீர்மானித்தது.

தற்போது இந்நகர்மன்றத்தின் சுகாதார பணியாளர்களின் எண்ணிக்கை குறைவாக இருக்கிற காரணத்தால், மேலும் ஆறு பேர்களை மேலதிகாரிகளின் நியமிக்க நகராட்சி தீர்மானம் நிறைவேற்றியுள்ளது.

தென் பிராந்திய ரயில்வே உபயோகிப்பவரின் ஆலோசனைக் குழுவுக்கு இந்நகர் மன்றத்தின் பிரதிநிதியாக திரு. கே. ஆளவந்தார், நகர்மன்ற தலைவரை இந்நகர் மன்றம் தேர்ந்து எடுத்திருக்கிறது.

இந்நகர் மன்றத்திற்கு வருவாயை பெருக்குவதற்கான சாலை ஓரங்களில் பெட்டிக் கடைகளை நிறுவத் தீர்மானிக்கப்பட்டிருக்கிறது.

மதுரை, திருச்சி, திருநெல்வேலி, மற்றும சேலம் போன்ற முக்கிய நகரங்களிலிருந்து வரும் இலங்கை அகதிகளின் வியாபார சௌகரியத்திற்கு, அங்காடிகள் கட்டி. அவர்களுக்கு குத்தகைக்கு விடவும் அதற்காக ஒரு லட்சம் ரூபாய் அரசினிடம் மான்யமாக கோரவும் இந் நகர்மன்றம் தீர்மானித்துள்ளது.


### டி. 825, கும்பகோணம் தாலுக்கா கூட்டுறவு விற்பனைச் சங்கம் லிமிடெட்

(வரையறுக்கப்பட்டது)

காரைக்கால் ரோடு : கும்பகோணம்.

**பணி**

**கும்பகோணம், திருவிடைமருதூர் ஊராட்சி ஒன்றியங்களைச் சார்ந்த விவசாயப் பெருங்குடிமக்களுக்கு:**

32 கிராம கூட்டுறவுக் கடன் விவசாயக் கடன் சங்கங்களின் மூலமாக, தேவையான பல்வேறு வகைப்பட்ட ரசாயன உர வகைகளையும் உரிய காலத்தில் வழங்கி வருகிறோம்.

மேலும், இந்த ஆண்டு குறுவை மகசூலில், தஞ்சை கூட்டுறவு வர்த்தகக் கழகத்தின் ஏஜண்டாகப் பணிபுரிந்து, கும்பகோணம் தாலுக்காவிலுள்ள 41 கிராம கூட்டுறவு விவசாயக் கடன் சங்கங்களின் ஒத்துழைப்புடன் ஏறத்தாழ 1,50,000 மூட்டைகளுக்கு மேல் நெல் கொள்முதல் செய்து, விவசாயப் பெருங்குடி மக்கள் பல்வேறு வகைகளிலும் பலன் அடையும்படி செய்துள்ளோம் என்பது குறித்து மகிழ்ச்சியடைகிறோம்.

நோக்கம்

விவசாயப் பெருங்குடி மக்களிடமிருந்து தமிழக அரசினால் நிர்ணயிக்கப்பட்ட விலையில், சரியான எடையுடன், தரமான நெல்லைக் கொள்முதல் செய்வதன் மூலம், நேர்மையையும், நாணயத்தையும் எல்லா நிலைகளிலும் கடைப்பிடிக்கும்படி செய்தலும், விவசாயத் தேவைகளை உடனுக்குடன் கிடைக்கச் செய்வதும் எங்கள் குறிக்கோளாகும்.

**உங்கள் விவசாயத் தேவைகளுக்கு**
**எங்கள் சங்கத்தை அணுகுங்கள்**

இதுவரை நீங்கள் இச்சங்கத்தில் உறுப்பினராகாவிடில் உடன் சேர்ந்து பயன் அடையுங்கள்.

தலைவர் :
**கி. ரா. சிவப்பிரகாசம்**

**கோ. சுப்ரமணியன்,**
உதவி செயலாளர்.

**து. ஜெயராமன்,**
செயலாளர்.




[ஆட்சிமொழி-பயிற்சி மொழி—32-ம் பக்கத் தொடர்ச்சி.]

தேர்வுகளில் பட்டதாரிகளுடைய தமிழ் மொழியறிவையும் ஆங்கில மொழியறிவையும் சோதிப்பதற்குரிய தேர்வுகளோடு, அவர்கள் கற்ற விருப்பப்பாடங்களிலும் அவர்கள் அடைந்துள்ள பயிற்சியின் தரத்தைச் சோதனை செய்வதற்கான தேர்வுகளும் இடம் பெறுகின்றன. அந்தத் தேர்வுகள் இப்போது ஆங்கிலத்தில் நடைபெறுகின்றன. அதனால் தமிழைப் பயிற்சி மொழியாகக்கொண்டு பட்டம் பெறுகின்ற மாணவர்களுக்கு இடைஞ்சல் ஏற்படும். எனவே, அந்தத் தேர்வுகளெல்லாம் தமிழிலேயே நடைபெற வேண்டுமென்று அரசு ஆணை பிறப்பிக்கலாமா என்பது கேள்வி. இன்றைய நிலையில் அரசு அததகையதோர் ஆணையைப் பிறப்பிக்கமுடியாது. ஏனெனில் இப்போது புகுமுக வகுப்பிலும் பி.ஏ, பி.எஸ்.ஸி., வகுப்புகளிலும் ஆங்கிலம் தமிழ் ஆகிய இரண்டுமே பயிற்சி மொழிகளாக இருக்கின்றன. எனவே, தமிழக அரசு அலுவலர் தேர்வுக்கழகம் நடத்துகின்ற தேர்வுகளில் கலந்து கொள்கின்றவர்கள் தாங்கள் பயின்ற விருப்பப்பாடங்களைத் தமிழிலும் எழுதலாமென்று ஆணை பிறப்பித்தால் இப்போதைக்குப் போதுமானது. இந்த விஷயமும் அரசினர் கவனத்தில் இப்போதிருக்கின்றதென்று நான் இந்த நேரத்தில் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன். மைய அரசு தேர்வுக்கழகம் நடத்துகின்ற அகில இந்திய ஊழியர்களின் போட்டித் தேர்வுகளை மாநில மொழிகளிலும் 1969-ம் ஆண்டிலேயே நடத்தப்போவதாக மைய அரசினிடமிருந்து நமது அரசுக்கு இப்போது தகவல் வந்திருக்கின்றது. எனவே, தமிழைப் பயிற்சிமொழியாக்குவதன் மூலம் வேலை வாய்ப்புக்கள் குறைந்துவிடுமென்று நினைப்பதற்கு எந்தவிதக் காரணமும் இல்லை. மேலும், தமிழைப் பயிற்சி மொழியாகக்கொண்டு பட்டம் பெற்றவர்களுக்கு வேலை தருவதில் அரசுதுறைகள் சிலவற்றில் தனிச் சலுகை தரப்படுமென்று மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் பல மேடைகளில் கூறி இருக்கிறார்கள். எந்தத் துறைகளில் இந்தத் தனிச்சலுகை தரலாமென்று விஷயமும் இப்போது அரசினர் ஆய்வில் இருக்கின்றது.

தமிழைக் கல்லூரிப் பயிற்சி மொழியாக்கும் இந்த நேரத்தில் தமிழில் தேவையான பாடநூல் பார்வைநூல் இருக்கின்றனவா, தேவையான எண்ணிக்கையில் கலைச் சொற்கள் இருக்கின்றனவா, ஆசிரியர்கள் தமிழ் கற்பிப்பதற்குப் போதுமான திறன்களைப் பெற்றிருக்கின்றனரா என்ற கேள்விகள் எழுகின்றன. கல்வியின் தரம் குறையாமல் இருக்க வேண்டுமானால் இந்த மூன்று விஷயத்திலும் நாம் போதுமான அளவு கவனம் செலுத்த வேண்டுவது இன்றியமையாதது. பாடநூல்கள், பார்வை நூல்கள் ஆகியவற்றைப் பொறுத்தவரையில் நம்முடைய முயற்சி இப்போது தொடக்க நிலையில்தான் இருக்கின்றது என்பதை மறுக்கமுடியாது. எனினும் இன்னும் ஓர் ஐந்தாண்டுகளுக்குள்ளே ஒவ்வொரு பாடத்திற்கும் தரமான பல நூல்களைத் தமிழ் வெளியீட்டுக் கழகமும் தனியார்த் துறையினரும் வெளியிடுவார்கள் என்று நாம் நம்பலாம். தமிழைப்பயிற்சிமொழியாகச் செய்த பின்னரே நூல்களை எழுதுவதற்கும் வெளியிடுவதற்கும் தனியார்த் துறையில் ஆர்வம் பிறக்கும். தமிழ் வெளியீட்டுக் கழகம் பலதுறைகளிலும் ஏராளமான நூல்களை வெளியிடுவதற்குரிய திட்டம் ஒன்றினை வகுப்பதற்காக, அரசு முயன்று கொண்டிருக்கிறது. இதற்காக பொருளுதவி செய்வதற்கு மைய அரசும் இணங்கியிருக்கின்றது. எனவே, நாளடைவில் தேவையான நூல்கள் போதுமான எண்ணிக்கையில் வெளிவரும் என்று நம்பலாம்.

### அரசினரின் ஆக்கப்பணிகள்

தமிழை பயிற்சிமொழியாக்கப் வேண்டுமென்று தமிழக அரசு முடிவு செய்தபோது கல்லூரித் தமிழ்க்குழு ஒன்று நியமிக்கப்பெற்றது. அந்தக் குழுவின் வேலையில் திரு. ஜி.ஆர். தாமோதரன் அவர்களும், பேராசிரியர் சி. வேலாதயும் அவர்களும் காலஞ்சென்ற அரசுத்துணைச் செயலாளர் திரு. கண்ணையன் அவர்களும் மிகத்தீவிரமாக ஈடுபட்டார்கள். அதன் பின்னர் அந்த வேலையைச் செய்வதற்காக 1962-ம் ஆண்டு ஏப்ரல் மாதம் முதல் தேதியன்று தமிழ் வெளியீட்டுக் கழகம் நிறுவப்பெற்றது. கடந்த ஆறு ஆண்டுகளாக அந்தக் கழகம் கல்லூரிப்பாட நூல்களை வெளியீடும் வேலையில் ஈடுபட்டுள்ளது. 15—8—1968 தேதியன்று வெளிவந்த பத்து நூல்களையும் சேர்த்துக்கணக்கிட்டால், தமிழ் வெளியீட்டுக் கழகம் இதுவரையில் வெளியிட்டிருக்கிற நூல்களின் எண்ணிக்கை 160 ஆகும்.

நூலாசிரியர்களும் கல்லூரி ஆசிரியர்களும் தங்களுடைய வேலையைச் சரிவரச் செய்யவேண்டுமென்றால், அவர்களிடத்தில் தேவையான கலைச்சொற்கள் இருக்கவேண்டும். இந்தத் துறையில் நாம் உடனடியாகக் கவனம் செலுத்த வேண்டும். இப்போது கோவை கலைக்கதிர் அலுவலகத்

[46-ம் பக்கம் பார்க்க.]


### திட்டமிட்ட குடும்பம்-தெவிட்டாத இன்பம்

**நமது இலட்சியம்**

* **மக்கள் தொகைப் பெருக்கத்தை 41·லிருந்து 25·க்கு கொண்டுவரவேண்டும்**

** **குழந்தை பிறப்பிக்கக்கூடிய நிலையில் உள்ள 90 மிலியன் தம்பதிகள் ‘சிறு குடும்பம்’ என்ற கொள்கையை ஏற்றுக்கொள்ள வேண்டும்.**

*** **இத் தம்பதிகளில் குறைந்த பட்சமாக 50 சதவிகித தம்பதிகளாவது குடும்பக் கட்டுப்பாடு முறைகளை நடைமுறையில் முழுக்க முழுக்க அனுசரிக்கச் செய்யப்படவேண்டும்.**

 [4-ம் பக்கத் தொடர்ச்சி]

பிரம்பு நாற்காலிகள்! அவற்றில் முதல்வரைக் காணவந்தவர்கள். தரையில் வண்ணக் கயிற்ருலான விரிப்பு! பளபளப்பான டீ பாய்கள்! ஒரு புறம் உள்ள அலமாரியில் மக்களிடம் அவருக்குள்ள பிடிப்பை உணர்த்தும் பரிசுப் பொருள்கள்!

பார்வையாளரைப் பாதுகாப்பு அலுவலர் தம் கண்ணுலே அளந்துகொள்கிருர்!

உள்ளே நுழைகையில், முதல்வர் அண்ணு அவர்களின் படம்—பல் தெரிய, மலர மலரச் சிரிக்கும் படம்! சென்னை கலைக் கல்லூரி மாணவர்கள் அன்பளிப்பாம் அது!

அடுத்து, திரைவிலக்கிச் சென்ருல், வலப் புறத்தில் முதல்வரைச் சந்திக்கும் கூடம். கூடத்தின் வடமேற்குக் கோடியில் கிழக்குப் பார்த்தவாறு அண்ணு அமர்ந்திருக்கிருர். அவருக்கு இடப்புறம் சிறிது தள்ளி, அண்ணு அவர்களின் தனிச் செயலாளர் திரு சொக்கலிங்கம் அமர்ந்திருக்கிருர்.

### கடுஞ்சொல் அல்லர்

கூடத்தின் அடக்கமும் எளிமையும் காட்சியழகும் கண்ணையும் கருத்தையும் நிறைகின்றன. சுவர்களில் நாற்புறமும் அணி அணியாய் அமைந்து வரிசை செய்கின்றன வரவேற்புரைகளும், வாழ்த்துரைகளும்

கீழே கயிற்று விரிப்பு! 10, 12 சோபாக்கள், பிரம்பு நாற்காலிகள்! அவற்றுக்குக் கதர்த் துணியாலான உரைகள்! ஒரு புறம்,

'தூங்காமை கல்வி துணிவுடைமை இம்மூன்றும்
நீங்கா நிறைபெற்று ஆளவந்த அண்ணுவை'

வாழ்த்திக் கொண்டு ஒரு நிலைக் கண்ணுடி—குடிசை வாழ் மக்களின் தெளிந்த மனத்தின் பிரதிபலிப்பான அன்பளிப்பு அது! முதல்வருக்கு அவ்வப்போது செய்திகளைச் சொல்ல கூடத்தின் ஓரத்தில் ஒரு டெலிபிரிண்டர்!

கைகூப்பி மகிழ்ச்சியோடு வரவேற்கிருர் அண்ணு! கட்டிடத்தில், கடைகாலில் விரிசல்! ஆனுல்கலசத்தில் பளபளப்பு!' என்று கிராமங்கள் புறக்கணிக்கப் பட்டதைச் சுட்டிக்காட்டி கிராமங்கள் நலம்பெற வழிகாணும் முதல்வரிடம் நாம் புதிதாகச் செய்தி கேட்டுத் தொல்லை தர வேண்டாமென்று ஒதுங்கிக் கொண்டு, காத்திருக்கும் பார்வையாளரை அனுமதிக்கச் சொல்கிருேம். காலையில் கிட்டத்தட்ட 8·30 மணிக்கு பார்வையாளர்களைப் பார்க்கத் தொடங்கிய அண்ணு அவர்கள் 10·00, 10·30 மணிக்கு அதனை முடித்துக் கொண்டு கோட்டைக்குச் செல்ல தயாராகிருர்.

மேலே மாடியில், வலப்புறத்தில் (சிறப்பு விருந்தினரை வரவேற்கும்) வனப்புமிக்க எழிற் கூடம் இருக்கிறது. விண்ணிலே விதானம் மேலே! மரகதப் பச்சை விரிப்பு கீழே! மென் காற்றில் அசைந்து கொடுக்கும் வெளுர் மஞ்சள் திரைச் சிலைகள்! எளிமையுடன் அமைதியும் அழகும் ததும்பம் ஓர் அற்புதமான சூழ்நிலை அது! அதுதான் மிக முக்கியமானவர்களுடன் முதல்வர் அண்ணு அவர்கள் கலந்துரையாடும் கவின் மிகு கூடம்! சுவரில் ஒரு புறம் முதல்வர் படம் எதிர்ச் சுவரில் அவரை அருமையோடு வளர்த்து ஆளாக்கிய தொத்தா இராசாமணி அம்மையாரின் படம். அதோ அந்தப் பக்கம் அமெரிக்கப் பயணத்தின் போது வாடிகன் நகரத்தில் போப்பாண்டவரைச் சந்தித்துப் பேசுகையில் எடுக்கப்பட்ட வண்ணப் படம்.

### எதிர்காலத்தின் விடிவெள்ளி

ஒரு புறம் (Seal of the Common wealth of Puert rico) அதன் விளக்கம் பட்டோலைபோல் தொங்குகிறது. இருபுறங்களிலும் கண்ணுடிக் கதவிட்ட காட்சிப் பொருள் வைப்பறைகள்! அவற்றில் கைவினை வல்லார் கருத்துடன் செய்த கண்கவர் வண்ணக் கலைப்பொருள்கள் அழகுற அடுக்கி வைக்கப் பட்டிருக்கின்றன. அவற்றில் சில அண்மைக் காலப் பரிசுகள்! பல அவர் முதல்வராகு முன்பே அளிக்கப் பட்டவை! சிந்தனையைத் தூண்டும் ஜப்பான் நாட்டுக் கலைப் பொருள்களும் உள்ளன. ஒரு புறம் வாயைப் பொத்தி — கண்ணைமூடி — காதை அடைத்த மூன்று குரங்குகள் காந்தியடிகளின் அறிவுரையை நினைவு படுத்திக் கொண்டிருக்கின்றன.

அழகிய தாங்கி ஒன்றின் மேலே மரத்திற் செதுக்கிய மலேசிய நாட்டு ஏழைத் தொழிலாளியின் சிலை! 'வதைப்படத்தான் பிறந்தோமா வகைபடவே வழியில்லையா' என்று ஏங்கிச் சாம்பும் ஏழையரின் கண்ணீர் துடைக்கத் துடிக்கும் முதல்வர் அண்ணு அவர்களின் மனத்துக்கு ஒரு விளக்கம் அது!

அந்த அறையின் தென்புறமும் மேற்புறமும் முதல்வரின் குடும்பத்தார் வதியும் பகுதி!

நம்முடைய முதல்வர் அண்ணு அவர்களின் துணைவியார் திருமதி இராணி அம்மையார் அவர்களை அண்ணி என்றே அனைவரும் அன்புடன் அழைக்கிருர்கள். அண்ணு மனைவி அண்ணிதானே! அவர்களைத் தவிர, அண்ணுவின் மக்கள் பரிமளம், இளங்கோவன், கௌதமன், பாபு, திருமதி சரோஜா பரிமளம், திருமதி விசயா இளங்கோவன், குழந்தைகள் மலர் மன்னன், கண்மணி ஆகியோரும் அந்த வீட்டில் இருக்கிருர்கள்.

வீட்டுப் பொறுப்புகள் அனைத்தையும் மருமக்கள் உதவியோடு அண்ணியாரே திறம்பட நிர்வகிக்கிருர்!

அத்துடன் இல்லை, திருமதி இராணி அம்மையார், இராசாமணி மகளிர் மன்றம் போன்ற அமைப்புகளை நிறுவியும், பிற சமூக சேவை நிலையங்களோடு தொடர்பு கொண்டும் நல்ல பணியாற்றி வருகிருர்.



[45-ம் பக்கம் பார்க்கவும்]














படம் 1 : தமிழக அரசு பரிசுச் சீட்டு விற்பனையை. மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் 15–8–68 அன்று துவக்கி வைத்தபொழுது, முதல் பரிசுச் சீட்டை மேதகு ஆளுநர் சர்தார் உஜ்ஜல்சிங் வாங்குகிருர்.

படம் 2 : தமிழ் வெளியீட்டுக் கழகப் புதிய வெளியீடுகளை, மாண்புமிகு கல்வியமைச்சர் தலைமையில், 15–8–68 அன்று, மாண்புமிகு பொதுப்பணி அமைச்சர் வெளியிட்டார்.

படம் 3 : செஞ்சிலுவை சங்கத்தின் சென்னைக் கிளையினர் தேனும்பேட்டையில் தீ விபத்தால் பாதிக்கப்பட்ட குடிசைவாழ் மக்களுக்கு அளித்த ஆடைகளை, மாண்புமிகு பொதுப்பணி அமைச்சர் 7–8–68 அன்று வழங்கினுர்.

படம் 4 : சென்னை அரசினர் தோட்டத்தில் மாநகர் காய்கறி விளைச்சல் திட்டத்தை. மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் 9–8–68 அன்று துவக்கி வைத்தார்.





படம் 1, 2 : சோவியத் நாட்டில் வால்கா கிரேட் நகரில் வரிசையாக அமைக்கப்பட்டுள்ள வீரர்கள் சிலைகளை தூதுக்குழுவினர் பார்வை யிடுகின்றனர்.

படம் 3 : ரோம் நகரில் ஜூலியஸ் சீஸர் சிலையின் முன்பு மாநகராட்சிக் குழுவினர்.

படம் 4 : வால்காகிரேட் நகரத் தலைவர் களுடன் தூதுக்குழுவினர்.

படம் 5 : வெளிநாட்டு சுற்றுப் பயணத்தை முடித்துக்கொண்டு, 21–8–68 அன்று சென்னை திரும்பிய மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சரை, அமைச்சரவை சார்பில் மாண்புமிகு வேளாண்மைத்துறை அமைச்சர் திரு ஏ. கோவிந்த சாமி வரவேற்ருர்.



[வெளிநாடுகளில் கண்ட..]

[12-ம் பக்கத் தொடர்ச்சி.]

வசதிகளைக்கொண்டு, கண்டறிந்து வந்தவைகள் அனைத்தையும் உடனடியாக நடை முறைப் படுத்த இயலாது எனினும், இயன்றவரை முயன்று, முன்னேற்றம் காண முற்படுவோமாக!

பல்வேறு நாட்டு மக்களையும், அவர்களின் பண்பாடுகளையும், பழக்க வழக்கங்களையும் நிர்வாக முறைகளையும் இந்திய உபகண்டத்தின் மீது அவர்கள் கொண்டுள்ள நட்புறவையும் நல்லெண்ணத்தையும் அறிந்துகொள்ள, இப் பயணம் பெருந்துணை புரிந்தது என்பதில், துளியும் ஐயமில்லை.

தூதுக் குழுவில் இடம் பெற்ற உறுப்பினர்களான சென்னை மாநகர தந்தை டாக்டர் அபிபுல்லாபேக், முன்ளுள் மேயர் திரு வி. முனுசாமி, திரு ஜி. உமாபதி, திரு ஹாஜி சிலார் மியான், சென்னை மாநகராட்சி ஆணையர் ஜே. ஏ. அம்பாசங்கர் ஆகியோர், கடமை யுணர்வோடும், கண்ணியத்தோடும், கட்டுப் பாட்டோடும், பயணத்தைப் பயனுள்ளதாக்கினர். அக்குழுவினருக்கு என் நன்றி உரித்தாகட்டும்.

லண்டனில், பி பி.சி. வாஞெலி நிலையத்திலிருந்து ஒலிபரப்பாகிய "ஊராளுமன்றத்திலிருந்து. பாராளுமன்றம் வரை" என்ற தலைப்பில் நடைப்பெற்ற கருத்தரங்கு நிகழ்ச்சியில், மாநகராட்சித் தூதுக் குழுவினர் அனைவரும், பங்கேற்ருேம்.

### புரட்சிக் கவிஞரும் லெனினும்

மாஸ்கோ வாஞெலி நிலையத்திலிருந்து 'லெனினது நாடு' என்னும் தலைப்பில் பேசும் வாய்ப்பைப் பெற்றேன். அப்பொழுது, பாவேந்தர் பாரதிதாசன் அவர்களின் "உலகம் உன்னுடையது" என்ற கவிதை வரிகளை எடுத்துக்கூற நேர்ந்தது! குறிப்பாக.

"மனிதரில் நீயுமோர் மனிதன் மண்ணன்று !
இமைதிற ! எழுந்து நன்ருய் எண்ணுவாய் !
மீசையை முறுக்கி மேலே ஏற்று !
விழித்த விழியில் மேதினிக் கொளிசெய் !"

என்ற வரிகளை, நான் நினைவூட்டியபோது, அவை லெனின் அவர்களின் வீர உரைகளை எதிரொலிப்பதாக தமிழறிந்த சோவியத் நாட்டினர் கூறினர்.

அந்தந்த நாடுகளின் வாஞெலி நிலையங்கள் மட்டுமன்றி, நாங்கள் சென்ற இடங்களிலுள்ள செய்தித்தாள்கள் எல்லாம், எங்கள் வருகையைப் பற்றிய செய்திகளை, நன்கு வெளியிட்டு, நட்புறவுக்கு உரமூட்டின என்பதை, மகிழ்ச்சியோடு தெரிவித்துக் கொள்கிறேன்.

வைகை நதி பாயும் வளமார் தமிழகத்தின் தலைநகராம் சென்னையும் வால்கா நதி பாயும் வால்காகிரேடும் நட்பு நகரங்களாக இணைந்துள்ளன. "யாதும் ஊரே யாவருங் கேளிர்" என்ற தத்துவத்திற்கு எடுத்துக் காட்டாய் விளங்குகின்ற இந் நட்புறவு, நாளும் வளர வேண்டும்! நாடு பயன் பெறவேண்டும்!!"

[வாஞெலிப் பேச்சு 1–9–68]

---

தாயகத்திலே தமிழக முதல்வர்: [42-ம் பக்கத் தொடர்ச்சி]

முதல்வரின் நேர்முக உதவியாளர்களான திருவாளர் எஸ். கஜேந்திரன், சாமிநாதன், பெருமாள் ஆகியோர் முறை போட்டுக்கொணடு உதவி செய்கிருர்கள். இரவும் பகலும் இருபத்து நான்கு மணி நேரமும் பாதுகாப்பு ஏற்பாடுகளைக் கவனித்துக் கொள்வோர், திருவாளர்கள் இராமானுசம், கருப்பையா, செல்வம், என். அரங்கசாமி, இராமகிருஷ்ணன் ஆகியோர்!

### ஆக்கப் பணிபுரியும் அண்ணன்

காலை 10-30 மணி அளவில் தலைமைச் செயலகம் புறப்படும் முதல்வர் இரவு எந்த நேரம் திரும்புவார் என்பதற்கு ஒரு கணக்கே இல்லை. அவர் வாழ்க்கை முறையே அப்படி! வீடு திரும்பியபிறகு, கடிதம் பார்க்கத் தொடங்கிஞல், இரவு இரண்டோ, இரண்டரையோ ஆகிவிடுகிறது. சில நாட்களில் விடியவிடிய 5·00 மணிவரைகூட விழித்திருந்துப் பொதுமக்களின் கருத்துரை நிறைந்த கடிதங்களைப் படிக்கிருராம். ஒரு சிறு நுணுக்கம்கூட அவர் கவனத்திலிருந்து தப்புவதில்லை என்று துணைவர்கள் சொல்கிருர்கள்.

அமெரிக்கரல்லாத வேறு யாருக்குமே இதுவரை கிடைக்காத யேல் பல்கலைக் கழகச் பெலோஷிப் கௌரவம் இந்திய மண்ணில் தமிழராய்ப் பிறந்த நம் முதல்வருக்கே கிடைத்த பெருமை போற்றத்தக்க ஒன்ருகும். தம் நிர்வாகத்தில் மத்திய அரசின் தலையீடுகள், வரம்பு மீறல்களை தாமஸ் ஜெபர்சனைவிட வாதத்திறமையோடு சந்தித்துக்கொண்டிருக்கும் நம் முதல்வர், அனைவரையும் அணைத்துக் கொண்டு ஆரவாரமின்றி அமைதியாக ஆக்கப்பணி செய்கிருர் என்று இந்திய நாடே அவரைப் பாராட்டிக் கொண்டிருக்கிறது.

"எல்லையற்ற வான மண்டலங்களின் ஆராய்ச்சியில் மூழ்கி, விசித்திரமான கோள்களையும் அதிசயக் கதிர்களைப் பொழிந்து தம் ஈர்ப்பு. ஆற்றலால் விரைந்து சுழன்றுவியப் பூட்டும் விண் மீன்களையும் காண்பதில் வெற்றி காணும் வான சாஸ்திரி போல, வங்க மக்களின் இதய வானில் புகுந்து, அவர்தம் விசித்திர மனேபாவங்களைக் காண்கிருர்."

என்று சரத் சந்திரரைப் பற்றி மகாகவி தாகூர் கூறிய புகழுரைகளை, நம் முதல்வர்மீது பொருத்துவதில் மிகையேதும் உண்டோ?

——(o)——

## திட்டமிட்ட குடும்பம்-தெவிட்டாத இன்பம்

நம் நாட்டில், உணவு உற்பத்தி 1951-ல் 55 மிலியன் டன்கள். 1965-ல் இது 72 டன் மிலியனைகப் பெருகியது.

ஆனால்—

தனி நபருக்கு கிடைக்கும் உணவின் சராசரி அளவு 12·8 அவுன்ஸ் என்றிருந்தது, 12·4 அவுன்சாகக் குறைந்துவிட்டது.

காரணம்—

140 மிலியன் மக்கள் என்ற அளவில் அதிகமாக மக்கள் தொகை பெருகிவிட்டதே !

---

ஆட்சிமொழி-பயிற்சிமொழி [41-ம் பக்கத் தொடர்ச்சி]

திலும், சென்னைக் கலைக்களஞ்சிய அலுவலகத்திலும், தமிழ் வெளியீட்டுக் கழக அலுவலகத்திலும் சுமார் 20,000 கலைச் சொற்கள் இருக்கின்றன. ஆனால் இவையே போதுமென்று கருதுவது பேதமையாகும். ஹிந்தியில் இப்போது இரண்டு லட்சம் கலைச்சொற்கள் உருவாக்கப்பட்டுவிட்டன. அந்த கலைச்சொற்களை வைத்துக்கொண்டு பி.ஏ., பி.எஸ்.ஸி. வகுப்புக்களில் எவ்விதக் குறைப்பாடுமின்றி ஹிந்தியைப் பயிற்சி மொழியாக்க முடியுமென்று மைய அரசு கூறுகின்றது. கலைச் சொல்லாக்கத்திற்கென்றே மைய அரசில் ஒரு குழு இருக்கின்றது. அந்தக் குழுவில் 11 பேர் உறுப்பினர்களாக இருக்கின்றனர். அது நிரந்தரமான ஒரு குழு. நாமும் போதுமான எண்ணிக்கையில் கலைச்சொற்களை உருவாக்குவதற்காக ஒரு நிரந்தரமான குழுவை நியமிக்கலாமா என்பதை முடிவு செய்யவேண்டும்.

### கல்வியின் தரம் குறையாமல்..

தமிழிலேயே எல்லா கலைச்சொற்களும் இருந்தால் தமிழ் மக்களுக்குப் பெருமகிழ்ச்சி ஏற்படுமென்பதில் ஐயமில்லை. ஆனால், பல்வேறு காரணங்களால், ஆங்கிலம், ஜெர்மன், பிரெஞ்சு, ருசியம் முதலிய மொழிகள் வளர்ந்திருக்கின்ற அளவுக்குத் தமிழ் வளரவில்லை என்பதை அறியாதார் யாரும் இலர். ஆதலால் தமிழில் இன்றைய தேவைக்கேற்ற கலைச்சொற்கள் இல்லை. எனவே கல்லூரிகளில் இப்போதே தமிழைப் பயிற்சிமொழியாக்குவதன்மூலம், கல்வியின் தரம் குறையாமல் பார்த்துக் கொள்வது இன்றியமையாதது. தரமான கல்வியென்றால் மாணவர்கள் தாங்கள் விரும்பித் தெரிந்தெடுக்கின்ற துறைகளில் நல்ல செய்தியறிவுடையவர்களாகவும் அவர்களில் ஒரு சிலரேனும் ஆராய்ச்சி ஆர்வமும் திறனும் உடையவர்களாகவும் இருக்கவேண்டும் என்பது பொருள்.

நாள்தோறும் வளர்ந்துகொண்டே வருகின்ற பொருளாதார, விஞ்ஞான, தொழில் நுட்பத்துறைகளில் புதிய புதிய நூல்கள் வந்துகொண்டே இருக்கின்றன; அவற்றையெல்லாமே மொழிபெயர்ப்பது இயலாத காரியம். எனவே, அவ்வப்போது ஆங்கிலத்தில் வருகின்ற நூல்களையும் பருவ இதழ்களையும் படித்து புரிந்துகொள்வதற்கு ஏற்ற திறன் நமது கல்லூரி மாணவர்களிடத்திலும் ஆசிரியர்களிடத்திலும் இருக்கவேண்டும். ஆதலால் அவர்களுக்குப் போதுமான ஆங்கில அறிவு இருக்கவேண்டியது இன்றியமையாதது. ஆங்கில மொழியறிவோடு, அவர்கள் ஆங்கிலக் கலைச் சொற்களையும் அறிந்தவர்களாக இருக்கவேண்டும். ஆங்கிலக் கலைச்சொற்கள் என்று சொல்வதற்குப் பதிலாக நாம் அகில உலகக் கலைச்சொற்கள் (International Technical Terms) என்று சொல்வது பொருத்தமாக இருக்கும். தமிழைப் பயிற்சிமொழியாக்குகின்ற இந்த நேரத்தில் நாம் ஆங்கில மொழியில் அடைந்துள்ள திறன்களை உயர்த்துவதற்கும் அகில உலகக் கலைச்சொற்களை அறிந்து கொள்வதற்கும் முயலவேண்டும். எனவே, தமிழிலேயே கலைச்சொற்களை உருவாக்கினாலும்கூட நாம் எழுதுகின்ற நூல்களிலும் பேராசிரியர்களது சொற்பொழிவுகளிலும் அகிலஉலகக்கலைச் சொற்களும் கையாளப்படுவது இன்றியமையாதது. அவ்வாறில்லாவிட்டால் நமது மாணவர்களும் ஆசிரியர்களும் நாள்தோறும் நவநவமாய் வந்து கொண்டிருக்கும் ஆங்கில நூல்களை படித்து அவற்றிலுள்ள நவீனச் செய்தியறிவைப் பெற முடியாமற்போகும். அதன் விளைவாக, நமதுநாடு இன்றைய உலகில் அடையவேண்டிய முன்னேற்றத்தை அடையவே முடியாது.

### செய்தியறிவுக்கு முதல் இடம்

எனவே, நாம் பொருளாதார, விஞ்ஞானத் துறைகளில் மாணவர்களுக்குரிய பாடங்களைக் கற்பிக்கின்ற நேரத்தில் தமிழ் மொழியின் தூய்மையைக் கருதாமல் செய்தியறிவுக்கு முதன்மை கொடுப்பது இன்றியமையாதது. இதனை முதலமைச்சர் அவர்களும் கல்வியமைச்சர் அவர்களும் பல மேடைகளில் பலமுறை வற்புறுத்திக் கூறியிருக்கின்றனர். நூலாசிரியர்களும் கல்லூரிப் பேராசிரியர்களும் இதனை மறந்துவிடக்கூடாது. கல்லூரிப் பேராசிரியர்கள், தேவையானால், ஆங்கிலமும் தமிழும் கலந்த நடையை வகுப்புக்களில் பயன்படுத்தலாமென்றும், மாணவர்களும் ஆங்கிலத்திலேனும் தமிழிலேனும் விடைகளை எழுதலாமென்றும் தமிழில் எழுதுகின்றபோது ஆங்கிலக் கலைச் சொற்களைப் பயன்படுத்தி ஒரு கலப்பு நடையைக் கையாளலாமென்றும் கல்வியமைச்சர் அவர்கள் பல்முறை எடுத்துக்கூறியிருக்கிறார்கள். செய்தியறிவுக்கு முதன்மையும் மொழிக்கு இரண்டாமிடமும் கொடுக்கவேண்டுமென்பது தெளிவு. பொதுமக்களும் மாணவர்களும் பல்கலைக் கழக அதிகாரிகளும் கல்லூரிப்பேராசிரியர்களும் அரசின் கொள்கையை நன்கு உணர்ந்து, தமிழைக் கல்லூரிப் பயிற்சி மொழியாக்கும் திட்டம் வெற்றியடைவதற்குத் தேவையான எல்லா உதவிகளையும் செய்வார்களென்று நம்புவோமாக.

---

[தமிழக அரசின் மொழிக் கொள்கை, கல்லூரிகளில் தமிழ் பயிற்சி மொழி பற்றிய அரசின் விளக்கக் குறிப்பு அடுத்த இதழில் இடம்பெறும். திரு நெ. து. சுந்தரவடிவேலனார் தமிழக அரசின் தலைமைக் கல்வி ஆலோசகராக பதவியேற்ற பிறகு வெளியிடப்பட்ட குறிப்பு இது.]

# அங்கும் இங்கும்

### உழவர்களுக்குப் பயிற்சி

மிகு விளைச்சல் தரும் தானியங்களைப் பயிர் செய்வதற்குத் தேவையான பயிற்சியை உழவர்களுக்கு அளிப்பதற்கென, மத்திய பிரதேச மாநில அரசு, இரண்டு பயிற்சிப் பள்ளிகளைத் தொடங்கியுள்ளது. அப்பள்ளிகளில் ஒன்றிரண்டு வாரங்களுக்கு பயிற்சியளிக்கப்படுகிறது. தவிர, தீவிர உழவர்களுக்கென்று சிறப்பான முறையில் 2 முதல் மூன்று வாரங்களுக்கு தனியே பாடங்களும் சொல்லித் தரப்படுகின்றன.

### ஒவ்வொரு தாலுகாவிலும் நில அடமான வங்கிகள் :

உணவு உற்பத்தியைப் பெருக்குவதற்கு உதவக்கூடிய முறையில், உழவர்களுக்கு நீண்டகாலத் தவணையில் கடனுதவி அளிக்க பஞ்சாப் மாநில அரசு ஒரு திட்டம் உருவாக்கியுள்ளது. அதன்படி, ஒவ்வொரு தாலுகாவிலும் ஒரு கூட்டுறவு நில அடமான வங்கி அமைக்கப்படவிருக்கிறது.

### 'கிராமநலம்' துணுக்குகள்

### நில வளத்திற்கு வங்கிக் கடன் உதவி

புதிய கிணறுகளைத் தோண்டுவதற்கென ரூ. 83·5 லட்சமும், பழைய கிணறுகளை செப்பனிடுவதற்கென ரூ. 1·4 லட்சமும் கடன் உதவியாக உழவர்களுக்கு, அவுரங்கபாத்திலுள்ள மாவட்ட கூட்டுறவு நில வள வங்கி அளித்துள்ளது. 1,013 எண்ணெய் என்ஜின்களும் 475 மின்சார மோட்டார்களும் வாங்குவதற்கென ரூ. 99,76,800-ஐ இவ் வங்கி மேலும் கடனாக வழங்கியுள்ளது.

சுமார் 1,728 புதிய கிணறுகள் தோண்டப்பட்டுள்ளன, 80 பழைய கிணறுகள் செப்பனிடப்பட்டுள்ளன.

---

"பஞ்சாயத்து ராஜ்", "இன்டென்சிவ் அக்ரிகல்சர்" இதழ்களிலிருந்து இடம் பெறுபவை: பக்கங்கள் . 19, 20, 21, 22, 37, 38, 47.

Articles reproduced from "Intensive Agriculture" on pages 22, and from "Panchayati Raj" on pages 19 to 21 and 37, 38 and 47.

ஜி. திருமால், எம்.ஏ., ஐ.ஏ.எஸ்.,
கிராம வளர்ச்சி இயக்குநர்.

கிராம வளர்ச்சி இயக்குநர் அலுவலகம்,
சென்னை-9.

நேர்முகக் கடித எண் : 160837/கி. வ. இ. கணக்கு. 4/68, தேதி : 4-9-1968.

அன்புடையீர்,

பொருள்.—ஆரம்பக் கல்வி—ஊராட்சி ஒன்றிய ஆரம்பப் பள்ளிகளில் குழந்தைகளைச் சேர்ப்பது—சம்பந்தமாக.

ஊராட்சி ஒன்றியங்களின் மிக முக்கிய பணி கல்விப் பணி என்பதனை அப்பணியினையே ஏற்று ஏற்றமுறச் செயல்படுத்தும் தங்களுக்கு நான் வலியுறுத்தத் தேவையில்லை. ஊராட்சி ஒன்றியங்கள் கல்விப் பணியினை ஏற்றுக் கொண்ட பின்னர், பற்பல ஆரம்பப் பள்ளிகள் ஆரம்பிக்கப்பட்டு, ஊருக்கு ஒரு பள்ளி நடைபெற்று வருவதை அனைவரும் அறிவோம். பள்ளிகள் பல ஆரம்பிக்கப்பட்ட போதிலும், பள்ளிக்கு அதன் சுற்று வட்டாரங்களிலே உள்ள பள்ளி வயதடைந்த எல்லாக் குழந்தைகளையும், எல்லாப் பெற்றோர்களும் அனுப்பிவைக்கிறார்கள் என்று சொல்ல முடியாது. இன்னும் பலர் பள்ளிகளில் சேர்க்கப்பட வேண்டியிருக்கிறது.

எனவே தாங்களும், ஆணையரும், கல்வி வளர்ச்சி அலுவலரும். ஊராட்சித் தலைவர்களும், கல்வித் துறையினரும் ஒன்று சேர்ந்து தங்கள் ஒன்றியத்திலுள்ள பள்ளி வயதடைந்த எல்லாக் குழந்தைகளையும் வருகின்ற 1-10-1968 (விஜயதசமி) அன்று, பள்ளிகளில் சேர்க்கத் தீவிர நடவடிக்கை எடுக்க வேண்டுகிறேன். பள்ளிகளில் எல்லாக் குழந்தைகளையும் சேர்த்துவிட்டால், அரசினரிடமிருந்து தங்கள் ஒன்றியத்திற்குக் கிடைக்கின்ற நிதி உதவியும் அதிகப்படும் என்பதும் தங்களுக்குத் தெரிந்ததே. பள்ளிக்கட்டிட நிதியாக, புதிதாக ஏற்படும் ஒவ்வொரு . பள்ளி இடத்திற்கும் ரூ. 15 வீதமும், அதிகப்படியான ஆசிரியர்களின் 5%க்கு தலைக்கு ரூ. 1,000 வீதம் தற்காலிகக் கொட்டகைகள் அமைப்பதற்கும், 6—11 வயதினருக்குள்ள ஆசிரியர்களின் 10%க்கு தலைக்கு ரூ. 300 வீதமும், 11—14 வயதினருக்குள்ள ஆசிரியர்களின் 10%க்கு தலைக்கு ரூ. 350 வீதமும் பள்ளி உபகரணங் களுக்கும் அரசினர் நிதி அளிக்கின்றார்கள். இம்மாதிரி அளிக்கப்படும் மானியம், புதிதாக நியமிக்கப்பட்ட எல்லா ஆசிரியர்களுக்கும் கிடைக்காது. ஆனால் அதில் ஒரு பகுதியினருக்கே கிடைக்கும். இருந்த போதிலும், கிராம மக்களின் ஒத்துழைப்புடன் பள்ளிச் சீரமைப்பு வேலையாக பல தற்காலிக கட்டிடங்களை அமைப்பது அவ்வளவு கடினமான காரியமல்ல. ஆகவே இதுபற்றி உடனே செயல்படத் தொடங்குதல் நலம்.

பள்ளி வயதடைந்த குழந்தைகளனைவரையும் பள்ளிகளில் சேர்ப்பிப்பதோடுமட்டுமல்லாமல் ஊராட்சி சமூகக் கல்வி குழுக்களையும் தக்க முறையில் செயல்படுத்த வேண்டுமென்பதையும் நான் வலியுறுத்த விரும்புகிறேன். தங்கள் ஒன்றியத்தில் 24-9-1968 முதல் 1-10-1968 வரை கல்வி வாரமாகக் கொண்டாட வேண்டும் என்றும் விரும்புகிறேன்.

பள்ளிகளில் குழந்தைகளைச் சேர்ப்பிப்பதோடு மட்டுமல்லாமல், சேர்க்கப்பட்ட குழந்தைகள் ஒழுங்காகப் பள்ளிக்குச் சென்று கல்வி பயிலுவதையும் கவனித்துக் கொள்ளவேண்டுமென்றும் கேட்டுக் கொள்கிறேன். இதுபற்றித் தாங்கள் எடுத்த நடவடிக்கைகளை அறிய ஆவலுள்ளவனாக இருக்கிறேன்.

வணக்கம்.

தங்கள் அன்புள்ள,
ஜி. திருமால்.

பெறுநர்,
திரு
பெருந்தலைவர், ஊராட்சி ஒன்றியம்.



ஊராட்சி அரசிதழ்
கிராமநலம் பகுதி-2
GRAMANALAM PART-2
PANCHAYAT GAZETTE

(இந்தப் பகுதியில் ஊராட்சி, ஊராட்சித் திட்டங்கள் பற்றிய அரசு ஆணைகள், குறிப்பாணைகள், விதிகள் முதலியவற்றின் தமிழாக்கம் சுருக்கமாக இடம் பெறுகிறது.)

---

## நன்னிலம் பேரூராட்சி (தஞ்சாவூர் மாவட்டம்) ஓராண்டுக் காலம் வரை கலைக்கப்படுகிறது.

## Panchayat—Nannilam Town Panchayat (Thanjavur District)—Dissolution for a period of one year—Ordered.

தஞ்சாவூர் மாவட்டத்திலுள்ள நன்னிலம் பேரூராட்சியின் நிர்வாகம் மக்கள் நல்வாழ்விற்கு ஏற்ப செயல்படவில்லை என்பதும், உறுப்பினர்களால் உருவாக்கப்படும் இடையூறுகள், முட்டுக்கட்டைகள் காரணமாக அவ்வூராட்சி மனநிறைவு அளிக்கும் வகையிலோ, திறமையாகவோ செயல்படவில்லை என்பதும் அரசின் கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டுள்ளது. நன்னிலம் பேரூராட்சியில் உண்டாக்கப்படும் முட்டுக் கட்டையின் காரணமாக அவ்வூராட்சியின் நிர்வாகம் சீர்குலைந்து வருகிறது, அவ்வூராட்சியின் மீது சட்டப்படி ஒப்படைக்கப்பட்டுள்ள கடமைகளை அது தொடர்ந்து புறக்கணித்து வருவதுடன் அதனுடைய அதிகாரங்களையும் அவ்வூராட்சி தவருகக் கையாளுகிறது என்று அரசு கருதுகிறது. ஆகவே, 1968-ம் ஆண்டு ஆகஸ்டு மாதம் முதல் நாளிலிருந்து ஓராண்டுக் காலத்திற்கு அவ் வூராட்சியைக் கலைத்துவிட்டு, பின்பு 1969-ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் முதல் நாளிலிருந்து மீண்டும் நன்னிலம் ஊராட்சியைப் புதிதாக அமைப்பது என்று அரசு தீர்மானித்து, அத் தீர்மானத்தை செயல்படுத்து வதற்கு எதிராகக் காரணங்கள் காட்டும்படி, 1958-ம் ஆண்டு தமிழக ஊராட்சிகள் சட்டத்தின் 154(2)-வது பிரிவின்படி அவ்வூராட்சிக்கு ஓர் அறிவிப்பு அனுப்பப் பட்டது.

1968-ம் ஆண்டு ஜூலை மாதம் 12-ம் தேதி அன்று கூட்டப்பட்ட ஊராட்சிக் கூட்டத்தில், அரசின் தீர்மானத் திற்கு எவ்வித ஆட்சேபனையும் தங்களுக்கு இல்லை யென்று எட்டு உறுப்பினர்கள் கூறியுள்ளனர். அரசு அனுப்பிவைத்த அறிவிப்பில் கண்டுள்ள காரணங்களை ஆறு உறுப்பினர்கள் ஏற்றுக்கொண்டுள்ளனர். எனவே, அவ்வூராட்சியை ஓராண்டு காலத்திற்குக் கலைத்துவிட அவ்வூராட்சிக்கு எவ்வித மறுப்பும் இல்லை யென்பதை அரசு பரிசிலனை செய்தது. எனவே, ஊராட்சி 1968-ம் ஆண்டு செப்டம்பர் மாதம் முதல் நாளி லிருந்து ஓராண்டுக் காலத்திற்கு கலைக்கப்பட்டு, மீண்டும் 1969-ம் ஆண்டு செப்டம்பர் மாதம் முதல் நாளிலிருந்து புதிதாக அமைக்கப்பட வேண்டும் என்று அரசு ஆணை பிறப்பிக்கிறது.

(கிராம வளர்ச்சி, உள்ளாட்சித் துறையின் 31-8-1968 நாளிட்ட அரசு ஆணை 1752-ன் சுருக்கம்.)

## 1967-68-ம் ஆண்டுக்குரிய வரிகள் அனைத்தையும் முழுமையாக வசூல் செய்த பேரூராட்சிகளின் பெயர்கள்.

வரிசை எண் — பேரூராட்சிகளின் பெயர்கள்

### தஞ்சாவூர் மாவட்டம்

1. நன்னிலம்
2. குடவாசல்
3. சிர்காழி
4. திருக்காட்டுப்பள்ளி
5. கூத்தாநல்லூர்
6. ஆடுதுறை
7. அய்யம்பேட்டை
8. மிலட்டூர்

### தென் ஆர்க்காடு மாவட்டம்

9. பரங்கிப்பேட்டை
10. ஸ்ரீமுஷ்ணம்
11. லால்பேட்டை
12. காட்டுமன்னார் கோயில்

### வட ஆர்க்காடு மாவட்டம்

13. கண்ணமங்கலம்
14. நாட்டராம்பள்ளி
15. உதயேந்திரம்
16. பேரணாம்பட்டு
17. ஆலங்காயம்
18. திமிரி
19. கலவை
20. சோளிங்கர்
21. தோறைபாடி
22. காவிரிப்பாக்கம்
23. பனம்பாக்கம்
24. போனூர்

### கன்னியாகுமரி மாவட்டம்

25. தாமரைக்குளம்
26. இராஜக்கமங்கலம்
27. வில்லுக்குறி
28. திருவிச்சம்கோடு
29. பாகோடு
30. பாலுக்கல்
31. குன்னத்தூர்
32. ஏழுதேசம
33. மிதிலம்
34. கீழ்க்குளம்
35. கன்னியாகுமரி
36. அகஸ்தீஸ்வரம்
37. மருங்கூர்
38. சுசிந்திரம்
39. அழகப்பாபுரம்
40. நீண்டகரை—வடச்சேரி
41. தர்மாபுரம்
42. தெங்கம்புதூர்
43. தாழக்குடி
44. தோவாளை
45. அரம்போளி
46. பூதம்பாண்டி
47. அழகிய பாண்டியபுரம்
48. குளச்சல்
49. தாளக்குளம்
50. மணவாளக்குறிச்சி
51. கடியாப்பட்டினம்
52. இரணியல்
53. வளவச்சகோஷ்டம்
54. கூத்தநலலூர்
55. இடைக்கோடு
56. வில்லவங்கோடு
57. மெதுக்கும்மல்
58. கொல்லங்கோடு
59. ஆறுதேசம்
60. பைங்குளம்
61. ஆத்தூர்
62. மீக்கேடு
63. திருவெட்டார்
64. திருபரப்பு
65. கிள்ளியூர்
66. கீழ்மிதிலம்
67. நாட்டாளம்

### தர்மபுரி மாவட்டம்

68. மாரண்டஹள்ளி

### கோயம்புத்தூர் மாவட்டம்

69. கணியூர்
70. பெரிய நேங்கமம்
71. வேட்டைக்காரன்புதூர்
72. கன்னியாவாடி
73. முதூர்
74. வீரப்பன்சத்திரம்
75. சென்னிமலை
76. வடுகப்பட்டி
77. புளியப்பட்டி
78. காசிபாளையம்
79. நம்பியூர்
80. லக்கம்பாட்டி
81. கூகலூர்
82. பி. மேட்டுப்பாளையம்
83. அம்மாப்பேட்டை

### மதுரை மாவட்டம்

84. அய்யம்பாளையம்
85. அய்யலூர்
86. ஒட்டன்சத்திரம்
87. பாலசமுத்திரம்
88. அகரம்
89. அம்மயநாயக்கனூர்
90. பிளமேடு
91. சோழவந்தான்
92. பேரையூர்
93. கோதாடை
94. பொன்மேனி
95. ஆவணியாபுரம்
96. ஏ. வெள்ளாளப்பட்டி
97. ஹார்விப்பட்டி (நகரியம்)
98. காமயங்கவுண்டன்பட்டி
99. தேவாரம்
100. ஹனுமந்தப்பட்டி
101. கோம்பை
102. பண்ணைபுரம்

### திருநெல்வேலி மாவட்டம்

103. ஆழ்வார்குறிச்சி
104. கள்ளிடைக்குறிச்சி
105. பத்தமடை
106. மேலச்சியல்
107. கோபாலசமுத்திரம்
108. பனங்குடி
109. ஏர்வாடி
110. திசையன்விளை
111. சிவகிரி
112. ராயகிரி
113. கழுகுமலை
114. கடம்பூர்
115. ஸ்ரீவைகுண்டம்
116. திருச்செந்தூர்
117. ஏரல்
118. தென்திருப்பேரை
119. ஆலங்குளம்
120. கீழப்பாவூர்
121. சுரண்டை
122. வடகரைகீழப்பிடாகை
123. இலஞ்சி
124. புளியாரை

### சேலம் மாவட்டம்

125. பள்ளிப்பாளையம்
126. மல்லசமுத்திரம்
127. செந்தாரைப்பட்டி
128. ஏத்தாப்பூர்
129. அயோத்தியாப்பட்டினம்
130. பெத்தநாயக்கன்பாளையம்
131. கீரிப்பட்டி
132. மேச்சேரி
133. குளத்தூர்
134. மோகனூர்
135. பாண்டமங்கலம்
136. வெங்கரை

### திருச்சிராப்பள்ளி மாவட்டம்

137. தாந்தோணி
138. நங்கவரம்
139. இனும் கருவூர்
140. குளித்தலை
141. அரவக்குறிச்சி
142. உப்பிட்ட மங்கலம்
143. ஜெயங்கொண்டம்
144. உடையார்பாளையம்
145. சிறுகாமணி
146. ஆலங்குடி
147. கரம்பக்குடி
148. அரிமளம்
149. பொன்னமராவதி
150. முசிறி
151. தண்டலைப்புதூர்
152. தொட்டியம்
153. காட்டுப்புதூர்
154. தாத்தையங்கார்பேட்டை
155. துறையூர்
156. புவளூர்

### நீலகிரி மாவட்டம்

இல்லை

### இராமநாதபுரம் மாவட்டம்

இல்லை

### செங்கல்பட்டு மாவட்டம்

இல்லை

---

## உருவப்படங்கள்—ஊராட்சி, ஊராட்சி ஒன்றிய அலுவலகங்கள், பள்ளிகள் மற்றும் ஊராட்சிகளால் நடத்தப்படுகின்ற இதர நிறுவனங்கள்—திருவள்ளுவரின் திருவுருவப்படத்தின் கீழ், திருக்குறள் பாக்களை அழகுற அமைத்தல்—பரிந்துரைக்கப்படுகிறது

## Portraits—Panchayats and Panchayat Union offices, schools and other institutions run by Panchayats—Instructions regarding display of Couplets from Thirukkural below the portrait of Thiruvalluvar—Recommended.

ஊராட்சிகள், ஊராட்சி ஒன்றிய அலுவலகங்கள் மற்றும் அவற்றால் நடத்தப்படுகின்ற இதர நிறுவனங்களில், அரசு அனுமதித்த திருவள்ளுவரின் திருவுருவப்படத்தை அமைக்கலாமென்று கிராமவளர்ச்சி, உள்ளாட்சித்துறையின் 1967-ம் ஆண்டு ஜூன் மாதம் 23-ம் நாளிட்ட அரசு ஆணை எண் 1193-ல், அரசு பரிந்துரைந்துள்ளது. உள்ளாட்சி நிறுவனங்களில் பணியாற்றும் அலுவலர்கள் அனைவரின் கருத்திலும், திருக்குறளின் அரிய நோக்கங்களை பதியவைக்கும் முறையில், திருவள்ளுவரின் திருவுருவப்படத்திற்குக் கீழே திருக்குறள் பாக்களை அழகுற அமைக்க வேண்டிய அவசியத்தை அரசு பரிசிலித்தது.

தமிழக அரசின், தமிழ் வளர்ச்சி இயக்குநர் பரிந்துரைத்துள்ள குறள்பாக்கள் மூன்று கீழே தரப்பட்டுள்ளன.

1. காதன்மை கந்தா அறிவறியார்த் தேறுதல்
   பேதமை எல்லாந் தரும்.
2. வெள்ளத் தனைய மலர் நீட்டம் மாந்தர்தம்
   உள்ளத் தனைய துயர்வு.
3. ஒழுக்கத்தி னெய்துவர் மேன்மை இழுக்கத்தின்
   எய்துவ ரெய்தாப் பழி.

தமது அலுவலகங்கள், நிறுவனங்கள் ஆகியவற்றில் அமைக்கப்பட்டிருக்கும் திருவள்ளுவரின் திருவுருவப் படத்தின் கீழ், மேற்காணும் திருக்குறள் பாக்களில் ஏதேனும் ஒன்றை தகுந்த முறையில் அமைக்க வேண்டுமென்று, உள்ளாட்சி நிறுவனங்களின் நிர்வாக அதிகாரிகள் கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

*(கிராம வளர்ச்சி இயக்குநர் அலுவலகத்தின் 17—8—1968 நாளிட்ட சுற்றறிக்கை எண் 53254-ன் சுருக்கம்)*

**1966-ம் ஆண்டு தமிழக பொதுக் கட்டிடங்கள் (உரிமம் வழங்குதல்) சட்டம்—விதி 6-க்கு விளக்கம்—திருத்தம்—வெளியிடப்படுகிறது.**

**Rules—Madras Public Buildings (Licensing) Rules, 1966—Explanation under Rules 6—Amendment—Issued.**

பிற்சேர்க்கையிலுள்ள அறிவிப்பு செயிண்ட் ஜார்ஜ் கோட்டை அரசிதழில் பிரிசுரிக்கப்படும்.

**பிற்சேர்க்கை**

**அறிவிப்பு**

1965-ம் ஆண்டு தமிழக பொதுக் கட்டிடங்கள் [உரிமம் வழங்குதல்) சட்ட த் (தமிழகச் சட்டம் 13/1965) திலுள்ள பிரிவு 25-ல் வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களைப் பயன்படுத்தி, 1966-ம் ஆண்டு பிப்ரவரி மாதம் 16-ம் நாளிட்ட செயிண்ட் ஜார்ஜ் கோட்டை அரசிதழ் பாகம் II, பக்கங்கள் 125–133-ல் வெளியிடப்பட்டுள்ள கிராம வளர்ச்சி, உள்ளாட்சித் துறையின் 1966-ம் ஆண்டு பிப்ரவரி மாதம் 4-ம் தேதியிட்ட அறிவிப்பு எஸ்.ஆர்.ஓ. எண். ஏ. 158—உடன் வெளியிடப்பட்ட 1966-ம் ஆண்டு தமிழக பொதுக் கட்டிடங்கள் (உரிமம் வழங்குதல்) விதிகளுக்கு. தமிழக ஆளுநர் அவர்கள், கீழ்க்கண்ட திருத்தங்களைச் செய்கிறார்.

**திருத்தம்**

சொல்லப்பட்ட விதிகளில், விதி 6-க்குள்ள விளக்கத்திற்கு மாறாக, கீழ்க்கண்ட விளக்கத்தைக் கொள்ள வேண்டும். அதாவது,—

"விளக்கம்—ஒவ்வொரு கட்டிடத்திற்கும் தனித்தனியே உரிமம் (Licence) வழங்கப்படும். ஒரு கட்டிடத்திற்கென வழங்கப்பெற்ற உரிமமானது, அக்கட்டிடம் முழுவதிலும், அல்லது அதன் ஒரு பகுதியில் சட்டப்படி வசிக்கும் அனைவருக்கும் மற்றும் அதை பொதுக் கட்டிடமாக பயன் படுத்துபவர்கள் அனைவருக்கும் செல்லும்."

(கிராம வளர்ச்சி, உள்ளாட்சித் துறையின் 1968-ம் ஆண்டு பிப்ரவரி மாதம் 14-ம் நாளிட்ட அரசு ஆணை எண் 255-ன் சுருக்கம்)

---

158400

## இந்த இதழில்


| | | பக்கம் |
|---|---|---|
| 1. | நமது காணிக்கை .. .. .. | 1 |
| 2. | தாயகத்திலே தமிழக முதல்வர் .. | 2 |
| 3. | உள்ளாட்சித் துறையின் ஓராண்டுச் சாதனை .. .. | 6 |
| 4. | வெளிநாடுகளில் கண்ட உள்ளாட்சி வளர்ச்சிப் பணிகள் .. .. | 8 |
| 5. | அண்ணாவின் பிறந்த நாள் பெருமங்கல வாழ்த்து .. .. .. | 16 |
| 6. | கிராமங்கள் தோறும் மகளிர் மன்றம் | 23 |
| 7. | புதிய பாதை-விவசாயக் கவியரங்கம் (பொதுப்பணித்துறை அமைச்சரின் தலைமை உரை-(கவிதை வடிவில்] | 26—27 |


## அடுத்த இதழில்...


1. சீரணிப்படையின் சாதனை
2. புதியபாதை-விவசாயக் கவியரங்கம் வேளாண்மைக் கவிஞர்களின் கவிதைகள்
3. "பசியிலிருந்து விடுதலை"
4. ஊராட்சித் திட்டங்களும்-செயல்படுத்தும் முறைகளும்
5. உலகநாடுகள் பலகணி
6. காந்தி அண்ணலின் நூற்றாண்டு விழா-படங்களுடன்
7. கண்டதும் கேட்டதும்



ஆசிரியக் குழுத் தலைவர் :
திரு T. A. S. பாலகிருஷ்ணன், I.A.S.

வெளியிடுபவர் : திரு ஜி. திருமால், எம்.ஏ.; ஐ.ஏ.எஸ்.
ஆசிரியர் : திரு எஸ். வேங்கடசாமி, எம்.ஏ.

Printed by the Director of Stationery and Printing, Madras, on behalf of the Government of Madras.
Edited by the Public Relations Officer and Published by the Director of Rural Development, Madras-9.
Chairman of the Editorial Committee Thiru T. A. S. Balakrishnan, I.A.S.
Wrapper printed at Vadapalani Press, Madras-26.



REGD. No M. 7277



© தமிழக அரசு 1968



# அளவோடு பெற்று வளமோடு வாழுங்கள்



சிவப்பு முக்கோணம்
குடும்ப நல திட்டத்தின் சின்னம்

குடும்பக்கட்டுப்பாடு செய்திடுவீர்

REGD. No. M. 7277

© தமிழக அரசு, 1968

# Stanes

## ஸ்டேன்ஸ் நிறுவனத்தார் மகிழ்ச்சியுடன் அளிக்கும் "கோல்டு ஸீட்" வீரிய ஒட்டு விதைகள்

உயர் விளைச்சலுக்கும், பெருகிய லாபத்துக்கும் உத்திரவாதமானவை.
நவீன முறையில் வெளிநாட்டு இயந்திரங்களில் பக்குவமாகி, அதிக முளைப்பு வீரிய சக்தியும், அங்கீகரிக்கப்பட்ட இன சுத்தமும் பெற்றவை.

தற்போது விநியோகத்திலிருக்கும் எங்களது உன்னத ரகங்கள் :—

1. "கோல்டு ஸீட்" வீரிய ஒட்டு சோளம் CHS-I
2. "கோல்டு ஸீட்" வீரிய ஒட்டு கம்பு HBI-I
3. "கோல்டு ஸீட்" வீரிய மக்காச் சோளம்

(a) டெக்கான் (தக்ஷிண வீரிய மக்காச் சோளம்)–மஞ்சள் ரகம்
(b) கங்கா—3 (குறைந்த வயது—மஞ்சள் ரகம்)
(c) கங்கா சபேட்—2 (வெள்ளை ரகம்)
(d) ஹை-ஸ்டார்ச் (வெள்ளை ரகம்)

**விதை உற்பத்தியாளர்கள் :—**

தந்தி : "கோல்டுஸீட்" போன் : 30442

## கோயமுத்தூர் ஸீட்ஸ் கார்ப்பரேஷன்,
பேரூர், கோயமுத்தூர்-10.

உங்களது விதைத் தேவைக்கும், விபரங்களுக்கும் :—

## டி. ஸ்டேன்ஸ் & கம்பெனி லிட்,
உர இலாகா,
த. பெட்டி எண் 1312, கோயமுத்தூர்-18.

தந்தி : ஸ்டேன்ஸ். போன் : 23351, 23352, 23353, 23354.

**தொழிற்சாலைகள் :—**

| வளவனூர், விழுப்புரம், போன்-25 | துடியலூர், போன்: 25385 | ஆவன்யாபுரம், மதுரை, போன் : 5533 | தச்சநல்லூர், திருநெல்வேலி, போன் : 195 |
|---|---|---|---|

| (1) | (2) | (1) | (2) |
|---|---|---|---|
| | | | |
| | | | |
| | | | |
| | | | |
| | | | |
| | | | |
| | | | |
| | | | |
| | | | |
| | | | |
| | | | |
| | | | |
| | | | |